மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

**TIRUNELVELI**

தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

**DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

**JMTA 54**

சங்க இலக்கியம் - 1 (அகம்)

ஐந்தாம் பருவம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி– 627 012.

## சங்க இலக்கியம் - 1 அகம்

### அலகு 1 நற்றிணை

1. நீர் வளர் ஆம்பல் (6)
2. தொல்களின் தொயை (14)
3. சொல்லின் சொல் எதிர் (39)
4. மணி துணிந்து (159)
5. குருதி வேட்கை (192)
6. தேம்படு சிலம்பில் (243)
7. ஒண்ணுதல் மகளிர் (283)
8. வரையா நயளினர் (329)
9. கானல் கண்டல் (345)
10. சொல்லிய பருவம் (364)

### அலகு 2 குறுந்தொகை

1. நிலத்தினும் பெரிதே (3)
2. கழனி மாஅத்து (8)
3. கோடூஉர் இலங்கு வளை (11)
4. பறைபட பணிலம் (15)
5. உள்ளோர் கொல்லோ (16)
6. வேரல் வேலி (18)
7. யாரும் இல்லை (25)

8. புள்ளும் மாவும் (118)

9. இன்றே சென்று (189)

10. இனமயில் அகவும் (249)

**அலகு - 3 ஐங்குறுநூறும் அகநானூறும்**

**ஐங்குறுநூறும்**

1. வேழப் பத்து
2. மஞ்சைப் பத்து

**அகநானூறு**

1. விருந்தின் மன்னர் (54)
2. மௌவலொடு மலர்ந்து (117)
3. உள்ளல் வேண்டும் (129)
4. இருபெரு வேந்தர் (174)
5. ஓடா நல்ஏற்று (334)
6. கண்டிசின் மகளே (369)

**அலகு - 4 கலித்தொகை**

1. பாஅல் செவி - பாலை (5)
2. எறித்தரு கதிர் - பாலை (9)
3. வேங்கை தொலைத்த - குறிஞ்சி (43)
4. சுடர்தொடீஇ - குறிஞ்சி (51)
5. நயந்தலை மாறுவர் - மருதம் (80)
6. பெருந்திரு - மருதம் (83)
7. கார்ஆரப் பெய்த - முல்லை (109
8. தோழிநாங் காணாமை - முல்லை (115)

9. நயனும் வாய்மை - நெய்தல் (130)

10. அயம்திகழ் நறுங் கொன்றை - நெய்தல் (150)

**அலகு - 5 பட்டினப்பாலை**

பாட்டினப்பாலை முழுவதும்.

**பார்வை நூல்கள்**


1. சங்க இலக்கியம் -என்.சி.பி.எச். பதிப்பக வெளியீடுகளாக வந்த சங்க இலக்கியங்கள்
2. நற்றிணை, கழக வெளியீடு, சென்னை.
3. குறுந்தொகை, உ.வே.ச. சாமிநாதையர் பதிப்பு, சென்னை.
4. ஐங்குறுநூறு, கழக வெளியீடு, சென்னை.
5. அகநானூறு, கழக வெளியீடு, சென்னை.
6. கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை.
7. பட்டினப்பாலை, கழக வெளியீடு, சென்னை.
8. சங்க இலக்கியம், கழக வெளியீடு, சென்னை.
9. கார்த்திகேசுசிவதம்பி, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும் ஐ.ஐ.டி. மெயின் ரோடு, சி.ஐ.டி.வளாகம்.

## அலகு - 1 நற்றிணை

தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்று தான் நற்றிணை. இது சங்க இலக்கிய வகைப்பாட்டினுள் காணப்படும் ஒரு நூலாகும். தனிப்பாடல்களாக பலராலும் பாடப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்ட நூல் ஆகும். எட்டுத்தொகை நூல்கள் இவையெனக் குறிப்பிடும் பழைய வெண்பாவில் முதலிடம் பெற்றுத்திகழ்வது நற்றிணை ஆகும். அரசு தேர்வுகளில் பெருபாலும் எட்டுத்தொகை நூல்களில் இருந்து அதிகளவு வினா விடை கேட்கப்படுகிறது என்பதால். தேர்வாளர்களுக்கு பயன்படும் விதத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணை நூலில் கேட்கப்படும் சில முக்கிய குறிப்புகளை நாம் இங்கு காண்போம் வாங்க.

### நற்றிணை நூல் குறிப்பு

இந்த நூலை நற்றிணை நானூறு என்றும் கூறுவர்.இந்நூல் 9 அடி முதல் 12 அடிகள் வரை அமைந்த கடவுள் வாழ்த்தோடு 401 பாடல்களைக் கொண்டது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்று தான் நற்றிணை. நற்றிணைக்கு நல் என்ற அடைமொழியும் உள்ளது. நற்றிணைப் பாடல்கள் அகப்பொருள் பாடல்களாம். நற்றிணையில் உள்ள 401 பாடல்களை 187 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் யாரெனத் தெரியவில்லை. தொகுப்பித்தவன் “பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி” ஆவான். மேலும் 59 பாடல்களைப் பாடிய புலவர்களின்

பெயர்கள் காணப்படவில்லை. இதில் உள்ள நானூறு பாடல்களில் 234ஆம் பாடலும் 385ஆம் பாடலின் ஒரு பகுதியும் கிட்டவில்லை.

திணை அடிப்படையில் பார்க்கும்போது குறிஞ்சித் திணைப் பாடல்கள் 130, பாலைப் பாடல்கள் 107, நெய்தல் படல்கள் 101, மருதப் பாடல்கள் 33, முல்லைப் பாடல்கள் 28 அமைந்துள்ளன. இந்நூல் தனிப்பாடல்களாக பலராலும் பாடப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்டது.

**அடி:**

7 அடி பாடல்கள் – 1

8 அடி பாடல்கள் – 1

9 அடி பாடல்கள் – 106

10 அடி பாடல்கள் – 96

11 அடி பாடல்கள் – 110

12 அடி பாடல்கள் – 77

13 அடி பாடல்கள் – 8

234ஆவது பாடல் கிடைக்கவில்லை.

**நற்றிணை பாடியவர்கள்:**

நற்றிணையில் உள்ள 401 பாடல்களை 187 புலவர்கள் பாடியுள்ளனர். குறுந்தொகைப் புலவர்கள் போலவே நற்றிணைப் புலவர்களும் பாடல் தொடர்களால் பெயர் பெற்றுள்ளனர். அவர்கள் – வண்ணப்புறக் கந்தத்தனார்,

மலையனார், தனிமகனார், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார், தும்பிசேர்க்கீரனார், தேய்புரிப் பழங்கயிற்றினார், மடல் பாடிய மாதங்கீரனார் என்ற எழுவராவர். மேலும் 59 பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் காணப்படவில்லை.

**நற்றிணை பாடிய புலவர்களின் எண்ணிக்கை:**

நற்றிணை நூலில் 175 புலவர்கள் பாடியுள்ளனர்.

**நற்றிணைக் காட்டும் வாழ்க்கை**

நற்றிணைப் பாடல்கள் மூலம் அக்கால மக்களிடம் பரவிக்கிடந்த பழக்க வழக்கங்களை அறியலாம். தலைவன் பிரிவால் வாடும் தலைவி அவன் வரவைச் சுவரில் கோடிட்டுக் காட்டும் வழக்கமும், காதலன் வரவைப் பல்லி கூறுவதாகக் கருதுவதும் அம்மக்களின் நம்பிக்கையைக் காட்டுகிறது. மேலும் மகளிர் காற்பந்து விளையாடும் வழக்கமும் இருந்ததை அறியமுடிகிறது.

பிற்காலத்தில் சிறந்து விளங்கிய "தூது" என்ற சிற்றிலக்கியத்திற்கு வழிகாட்டியாகக் குருவி, கிளி, நாரை ஆகியவற்றைத் தூதுவிடும் பாங்கையும் நற்றிணையில் காணலாம். மேலும் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, கொடைத்திறம், மன்னர்களைப் பின்பற்றி மக்கள் வாழ்ந்த அறவாழ்வு ஆகியவற்றை அறியவும் நற்றிணைப் பாடல்கள் துணை செய்கின்றன.

**நற்றிணை சிறப்புகள்:**

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணை, பழைய வெண்பாவில் முதலிடம் பெற்றுள்ளது. நற்றிணை நூலில் உள்ள பாடல்கள் அகப்பொருள்

பாடல்கள். நற்றிணை நூலுக்கு "நல்" என்ற அடைமொழி பெற்றது. இதனை நற்றிணை நானூறு என்றும் கூறுவர். நற்றிணை நூலில் உள்ள பாடல்கள் அக்காலச் சமூகத்தை அறிய பெரிதும் துணைபுரிகின்றன. நற்றிணை நூலில் உள்ள பாடல்கள் 9 அடி முதல் 12 அடிகள் வரையிலான 400 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

**நற்றிணை - 6. குறிஞ்சி**

**"நீர் வளர் ஆம்பற் தூம்புடைத்திரள் கால்**

**நார் உரித்தன்ன மதன் இல் மாமை,**

**குவளை அன்ன ஏந்து எழில் மழைக் கண்,**

**திதலை அல்குல், பெருந் தோள், குறுமகட்கு**

**எய்தச் சென்று செப்புநர்ப் பெறினே,**

**'இவர் யார்?' என்குவள் அல்லள்; முனாஅது,**

**அத்தக் குமிழின் கொடு மூக்கு விளை கனி**

**எறி மட மாற்கு வல்சி ஆகும்**

**வல் வில் ஓரி கானம் நாறி,**

**இரும் பல் ஒலிவரும் கூந்தல்**

**பெரும் பேதுறுவள், யாம் வந்தனம் எனவே"**

நீரில் வளர்ந்த ஆம்பலின் உள்ளிற் புழையுடைய திரண்ட தண்டை நாருரித்தாற் போன்ற; அழகு குறைந்த மாமையையும்; குவளை போன்ற அழகு தங்கப்பெற்ற குளிர்ச்சியுடைய கண்ணையும்; திதலையுடைய அல்குலையும் பெரிய தோளையும் உடைய இளமகளாகிய நம்மாற் காதலிக்கப்பட்ட தலைவியிடத்து; நெருங்கச் சென்று எமது வருகையை முன்னாடிக் கூறுவாரைப் பெறின்; அவரை நோக்கி இவர் யாவரென்று கேட்பாளல்லள்; சுரத்திலுள்ள குமிழ மரத்தின் வளைந்த மூக்கினையுடைய முற்றிய கனிகள் கீழே உதிர்ந்து ஆங்குக் குதித்து விளையாட்டயர்கின்ற இள மானுக்கு வெறுப்பில்லாது உணவாகாநிற்கும்; வலிய வில்லையுடைய ஓரி என்பவனது கானம்போல நறுநாற்றமுடையவாகி; கரிய பலவாகித் தாழ்ந்த கூந்தலையுடைய அவள்தான்; யாம் வந்திருக்கின்றேம் என்பதைக் கேட்டவுடன்; களிப்பினாலே பெரிதும் மயக்கமெய்தா நிற்பள்;

இரவுக்குறிப்பாற்பட்டு ஆற்றானாய தலைவன், தோழி கேட்ப, தன்நெஞ்சிற்குச் சொல்லியது. - **பரணர்.**

**நற்றிணை - 14. பாலை**

**தொல் கவின் தொலைய, தோள் நலம்சாஅய,**

**நல்கார் நீத்தனர்ஆயினும், நல்குவர்;**

**நட்டனர், வாழி!- தோழி!- குட்டுவன்**

**அகப்பா அழிய நூறி, செம்பியன்**

**பகல் தீ வேட்ட ஞாட்பினும் மிகப் பெரிது**

**அலர் எழச் சென்றனர் ஆயினும்- மலர் கவிழ்ந்து**

**மா மடல் அவிழ்ந்த காந்தள்அம் சாரல்,**

**இனம் சால் வயக் களிறு பாந்தட் பட்டென,**

**துஞ்சாத் துயரத்து அஞ்சு பிடிப் பூசல்**

**நெடு வரை விடரகத்து இயம்பும்**

**கடு மான் புல்லிய காடு இறந்தோரே.**

தோழீ! மலர் தலைகவிழ்ந்து பெரிய இதழ் விரிந்த காந்தளையுடைய சாரலின் கண்ணே; தொங்குகின்ற வாயையுடைய களிற்றியானை பெரும் பாம்பின்வாய்ப் பட்டதாக; சோராத துயரோடு அஞ்சுகின்ற பிடியானை பிளிறும் பேரொலியானது; நீண்ட மலையிடத்துள்ள விடரகத்தே சென்று எதிரொலி யெடாநிற்குங் கடிய குதிரையையுடைய கள்வர் கோமான். "புல்லி" என்பவனுடைய வேங்கட மலையிலுள்ள காட்டின்கண்ணே சென்ற நங் காதலர்; என் தோளின் அழகு கெட்டு வாடிப் பழைய நலனெல்லாந் தொலையுமாறு என்னைக் கூடி இன்பங் கொடாராய்க் கைவிட்டொழிந்தாரெனக் கூறாநின்றனை!; அங்ஙனம் கைவிட்டொழிந்தாராயினும்; அவர் சேரலனது கழுமலத்தின் மதில் ஒருங்கழிய இடித்தொழித்துக் கிள்ளிவளவன் அற்றைப் பகலே அவ்வூரைத் தீயின்வாய்ப் பெய்த போரினுங்காட்டில்; மிகப் பெரிதாகிய பழிச்சொல்லுண்டாம்படி சென்றனரெனினும்; என்பால் மிக்க நட்பு வைத்தனர்; ஆதலால், குறித்த பருவத்து வந்து தலையளி செய்வர், ஆதலின் அவர் நீடு வாழ்வாராக!;

இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிந்தது. - **மாமூலனார்**

**நற்றிணை - 39. குறிஞ்சி**

**“சொல்லின் சொல் எதிர்கொள்ளாய், யாழ நின்**

**திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமென;**

**காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?**

**கொடுங் கேழ் இரும் புறம் நடுங்கக் குத்திப்**

**புலி விளையாடிய புலவு நாறு வேழத்தின்**

**தலை மருப்பு ஏய்ப்ப, கடை மணி சிவந்த நின்**

**கண்ணே கதவ? அல்ல; நண்ணார்**

**அரண் தலை மதிலராகவும், முரசு கொண்டு,**

**ஓம்பு அரண் கடந்த அடு போர்ச் செழியன்**

**பெரும் பெயர்க் கூடல் அன்ன நின்**

**கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே”**

நங்காய்! யான் நின்னைத் தழீஇக் கொண்டு சில கூறின் அவற்றை எதிரேற்றுக் கொள்ளாயாய் நின் அழகிய முகம் இறைஞ்சி நின்று கண்புதைத்து நாணுகின்றனை; விரைவாகக் காமமானது கைகடந்து மிகுமாயின் அதனை யான் தாங்கியிருத்தல் எளியதொரு காரியமாமோ; புலி நடுங்குமாறு அதன் வளைந்த கரிய நிற முள்ள வரிகளையுடைய பெரிய முதுகிலே குத்தி வீழ்த்தி வளையாட்டயர்ந்த; புலவு நாற்றத்தையுடைய களிற்றின் இனிய நுனியையுடைய மருப்புப்போல; கடைமணி சிவந்த நின்கண்கள் தாமோ சினவா நின்றன; பகைவர் அரண்மிக்க மதிலிடத்திற் போந்தாராகவும்; உடனே மேல்வீழ்ந்து வென்று அவரது

முரசைக் கைக்கொண்டு அவராற் பாதுகாக்கப்படுகின்ற அரணையும் கைப்பற்றிய போரிற் கொல்லவல்ல பாண்டியனது; பெரிய புகழையுடைய மதுரையை யொத்த நின்னுடைய தொய்யிலெழுதப்பட்ட கரும்பையுடைய தோள்களும் என்னை வருத்துதலை யுடையன காண் !;

இரண்டாம் கூட்டத்து எதிர்ச்சியில் தலைவன் சொல்லியது. - **மருதன் இளநாகனார்**

**நற்றிணை - 159. நெய்தல்**

**"மணி துணிந்தன்ன மா இரும் பரப்பின்**
**உரவுத் திரை கொழீஇய பூ மலி பெருந் துறை,**
**நிலவுக் குவித்தன்ன மோட்டு மணல் இடிகரை,**
**கோடு துணர்ந்தன்ன குருகு ஒழுக்கு எண்ணி,**
**எல்லை கழிப்பினம்ஆயின், மெல்ல**
**வளி சீத்து வரித்த புன்னை முன்றில்,**
**கொழு மீன் ஆர்கைச் செழு நகர்ச் செலீஇய,**
**'எழு' எனின், அவளும் ஒல்லாள்; யாமும்,**
**'ஒழி' என அல்லம் ஆயினம்; யாமத்து,**
**உடைதிரை ஒலியின் துஞ்சும் மலி கடற்**
**சில் குடிப் பாக்கம் கல்லென**

**அல்குவதாக, நீ அமர்ந்த தேரே!"**

நீல மணியை நெரித்து வைத்தது போன்று அலை மோதும் கடல் துறை. அங்கே நிலா வெளிச்சத்தைக் குவித்து வைத்தது போன்ற மணல் குவியல். துறைக் கரையில் அமர்ந்துகொண்டு அங்குப் பறக்கும் குருகுப் பறவைகளை ஒன்று இரண்டு என்று எண்ணிப் பார்த்துக்கொண்டு பகல் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தோம். வீட்டு முற்றத்தில் புன்னை மரம். காற்றில் உதிர்ந்த புன்னைப் பூக்கள் முற்றத்தில் கொட்டிக் கிடக்கும்.. வீட்டுக்குச் சென்றால் மீன் உணவு. உண்ணச் செல்லலாம் என்றால் வேண்டாம் என்று துறையிலேயே இருக்கிறோம். இரவில் ஊரே உறங்கும். அலை மோதும் ஒலியைக் கேட்டுக்கொண்டே உறங்கும். நீ தேரில் வந்துள்ளாய். உன் தேர் எங்கள் ஊரில் (சிறுகுடிப் பாக்கம்) தங்கட்டுமே. – தோழி தலைவிக்காக இதனைத் தெரிவிக்கிறாள்.

தலைவியின் ஆற்றாமையும் உலகியலும் கூறி, வரைவு கடாயது. - **கண்ணம்புல்லனார்**

**நற்றிணை - 192. குறிஞ்சி**

**"குருதி வேட்கை உரு கெழு வய மான்**

**வலி மிகு முன்பின் மழ களிறு பார்க்கும்**

**மரம் பயில் சோலை மலிய, பூழியர்**

**உருவத் துருவின், நாள் மேயல் ஆரும்**

**மாரி எண்கின் மலைச் சுர நீள் இடை,**

**நீ நயந்து வருதல் எவன்?' எனப் பல புலந்து,**

**அழுதனை உறையும் அம் மா அரிவை!**

**பயம் கெழு பலவின் கொல்லிக் குட வரைப்**

**பூதம் புணர்த்த புதிது இயல் பாவை**

**விரி கதிர் இள வெயில் தோன்றி அன்ன, நின்**

**ஆய் நலம் உள்ளி வரின், எமக்கு**

**ஏமம் ஆகும், மலைமுதல் ஆறே.**

"இரத்தம் குடிக்க ஆவல் கொண்ட சிங்கம் (வயமான்) வலிமை மிக்க ஆண்யானையைக் குறிவைத்துப் பார்க்கும் மரம் அடர்ந்த சோலையில் பூழியர் மக்களின் செந்நிறக் குரும்பை ஆடுகள் (உருவத் துருவை) பகல் வேளையில் வயிறார மேயும். மழைக் காலத்தில் அங்குக் கரடிகள் (எண்கு) மேயும். இப்படிப்பட்ட அச்சம் தரும் மலைச்சாரல் வழியில் என்னை நயந்து ஏன் வருகிறாய்" என்று பலவாறு வெறுப்புற்றுக் (புலந்து) கேட்டுக்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கும் அழகிய மாமை நிறம் கொண்ட அரிவையே! பலாப்பழம் பயன் தரும் கொல்லிமலையின் மேற்குத் திசைப் பாறையில் அணங்கு (பூதம்) உருவம் பொதித்துப் புதிதாக எழுதப்பட்ட பாவை, காலை இளவெயிலில் தோன்றுவது போல உன் அழகு நலம் பொலிவுடன் தோன்றுகிறது. அதனை நினைத்துக்கொண்டு வருதல் என் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஒரு பாதுகாப்பு (ஏமம்). எனவே வருகிறேன், என்கிறான், தலைவன் தலைவியிடம்.

இரவுக்குறி மறுக்கப்பட்டு ஆற்றானாய தலைமகன் சொல்லியது **ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**நற்றிணை - 243. பாலை**

**“தேம் படு சிலம்பில் தெள அறல் தழீஇய**
**துறுகல் அயல தூ மணல் அடைகரை,**
**அலங்கு சினை பொதுளிய நறு வடி மாஅத்துப்**
**பொதும்புதோறு அல்கும் பூங் கண் இருங் குயில்,**
**'கவறு பெயர்த்தன்ன நில்லா வாழ்க்கை இட்டு**
**அகறல் ஓம்புமின், அறிவுடையீர்!' என,**
**கையறத் துறப்போர்க் கழறுவ போல,**
**மெய் உற இருந்து மேவர நுவல,**
**இன்னாது ஆகிய காலை, பொருள்வயிற்**
**பிரியல் ஆடவர்க்கு இயல்பு எனின்,**
**அரிது மன்றம்ம, அறத்தினும் பொருளே?”**

தேன் உண்டாகின்ற பக்கமலையிலே தெளந்த நீர் சூழ்ந்த துறுகல்லின் அயலிலுள்ள தூய மணல் அடுத்த கரையின் கண்ணே; அசைகின்ற கிளைகளிலே தளிர்த்துத் தழைத்த நறிய வடுக்களையுடைய மாமரமிக்க சோலைதோறும் தங்குதல்கொண்ட; சிவந்த கண்ணுடைய கரிய குயில்கள் சூதாடு கருவி பெயர்ந்து விழுமாறு போன்ற நிலையில்லாத பொருளீட்டும் வாழ்க்கையை ஏதுவாகக்

கொண்டு; "அறிவுடையீர் நீங்கள் நுங்களுடைய காதலிமாரை விட்டுப்பிரியாது கலந்தேயிருங்கோள்!"; என்று செயலறும்படி கைவிட்டுத் துறந்து செல்வோரை இடித்துரைப்பனபோலத் தாம் தாம் ஆணும் பெண்ணும் மெய்யொடு மெய் சேரவிருந்து பொருந்துதல் வரக் கூவாநிற்ப; பிரியும் பொழுதே இன்னாமையைத் தருவதாகிய இளவேனிற் காலத்துப் பொருள்வயிற் பிரிவது ஆடவர்க்கு இயல்பாகு மென்னில்; அடைந்தோம் என்பாரைக் கைவிடேம் என்று கூறிப் பாதுகாக்கும் அறத்தினுங் காட்டில் தௌ¤வாகப் பொருள் அரியது போலும்? இது மிக்க வியப்பு;

பிரிவிடை மெலிந்த தலைமகள் சொல்லியது. - **காமக்கணிப் பசலையார்**

**நற்றிணை - 283. நெய்தல்**

**ஒள் நுதல் மகளிர் ஓங்கு கழிக் குற்ற**

**கண் நேர் ஒப்பின கமழ் நறு நெய்தல்**

**அகல் வரிச் சிறு மனை அணியும் துறைவ!-**

**வல்லோர் ஆய்ந்த தொல் கவின் தொலைய,**

**இன்னை ஆகுதல் தகுமோ- ஓங்கு திரை**

**முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி,**

**ஏமுற விளங்கிய சுடரினும்,**

**வாய்மை சான்ற நின் சொல் நயந்தோர்க்கே?**

அழகிய முகம் கொண்ட மகளிர் கடலோரக் கழியில் அவர்களின் கண் போல் பூத்திருக்கும் நெய்தல் மலரைப் பறித்துவருவர். துறைவ நீ அவற்றை

அவர்கள் மணலில் கட்டிய சிறுமனையில் அமர்ந்துகொண்டு தலைவி தலையில் அழகாக வைத்து அணி செய்வாய். அப்படிப்பட்ட துறைவன் நீ. இவள் (என் தலைவி) நூல் வல்லவர்கள் ஆராய்ந்து பார்க்கும் அழகு கொண்டவள். அத்தகைய அழகு தொலையும்படி இவளை மணந்துகொள்ளாமல் காலம் கடத்தி இவளை வாட விடுதல் உனக்குத் தகுமா? நீ திரை உலாவும் கடலில் பலரும் தொழும்படிக் காலையில் தோன்றிப் பாதுகாக்கும் ஞாயிற்றைக் காட்டிலும் கடமை தவறாதவன் ஆயிற்றே. உன் சொல்லை நம்பி உன்னை விரும்பியவர்களை இவ்வாறு அழகு தொலைய விடுதல் தகுமா?

பகற்குறி வந்த தலைமகனைத் தோழி வரைவு கடாயது; கடிநகர் புக்க தோழி பிற்றை ஞான்று, ''வேறுபடாது ஆற்றினாய்'' என்று சொல்லியதூஉம் ஆம்.

**மதுரை மருதன் இளநாகனார் பாடல்**

**நற்றிணை - 329. பாலை**

**“வரையா நயவினர் நிரையம் பேணார்,**

**கொன்று ஆற்றுத் துறந்த மாக்களின் அடு பிணன்**

**இடு முடை மருங்கில், தொடும் இடம் பெறாஅது,**

**புனிற்று நிரை கதித்த, பொறிய முது பாறு**

**இறகு புடைத்து இற்ற பறைப் புன் தூவி**

**செங் கணைச் செறித்த வன்கண் ஆடவர்**

**ஆடு கொள் நெஞ்சமோடு அதர் பார்த்து அல்கும்,**

**அத்தம் இறந்தனர் ஆயினும், நத் துறந்து**

**அல்கலர் வாழி- தோழி!- உதுக் காண்:**

**இரு விசும்பு அதிர மின்னி,**

**கருவி மா மழை கடல் முகந்தனவே!"**

நம் தலைவர் அளவில்லாத நன்மை செய்பவர். உன்னைத் தனியே தவிக்க வைக்கும் தகாத செயலை விரும்பாதவர். அவர் சென்றிருக்கும் வழியில் வன்கண் ஆடவர் இரக்கம் இல்லாமல் வழிப்போக்கர்களைக் கொன்று வழியில் போட்டுவிட்டுச் செல்வர். அந்த உடல் முடைநாற்றம் வீசும். முட்டையிட்டதும் இரை தேடி வந்திருக்கும் வயது முதிர்ந்த கழுகு அதனை உண்ணப் பறக்கும். அதன் சிறகிலிருந்து தூவி உதிரும். அந்தத் தூவியைக் குறி தவறாமல் பாயும் அம்பு தொடுக்கும் வில்லில் அந்த வன்கண் ஆடவர் கட்டியிருப்பர். அவர்கள் மேலும் வெற்றி கொள்ளவேண்டும் என்னும் எண்ணத்துடன் வழியைப் பார்த்துக்கொண்டு பதுங்கியிருப்பர். அந்த வழியில் அவர் சென்றுள்ளார். எனினும் நம்மை (உன்னை) விட்டுவிட்டு அங்கே தங்கமாட்டார். அங்கே பார். வானம் இடி முழக்கத்துடன் மின்னுகிறது. அது கடலில் நீரை முகந்துகொண்டு வந்துள்ள மேகம். அது பொழியும்போது, அவர் சொன்னபடி வந்துவிடுவார். கவலை வேண்டாம் என்று சொல்லித் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி பருவம் காட்டி வற்புறுத்தது. - **மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்**

**நற்றிணை - 345. நெய்தல்**

**கானற் கண்டல் கழன்று உகு பைங் காய்**

**நீல் நிற இருங் கழி உட்பட வீழ்ந்தென,**

**உறு கால் தூக்க, தூங்கி ஆம்பல்,**

**சிறு வெண் காக்கை ஆவித்தன்ன,**

**வெளிய விரியும் துறைவ! என்றும்,**

**அளிய பெரிய கேண்மை நும் போல்,**

**சால்பு எதிர்கொண்ட செம்மையோரும்**

**தேறா நெஞ்சம் கையறுபு வாட,**

**நீடின்று விரும்பார் ஆயின்,**

**வாழ்தல் மற்று எவனோ? தேய்கமா தெளவே!**

கானல் நிலத்தில் இருக்கும் பச்சைநிறக் கண்டல்-காய் பெருங்காற்றில் காம்பு அற்று, நீலநிற கழிமுக நீருக்குள் பாயும்படி விழும். அதனால், அக் கழியில் வெண்காக்கை வாயைப் பிளந்து கொட்டாவி விடுவது போல ஆம்பல் மலரின் வெண்ணிற இதழ்கள் விரியும். இப்படிப்பட்ட நீர்த்துறையை உடைய தலைவனே! உன்னைப்போலப் பெருநட்பு கொண்டோரையும், சான்றாண்மையை எதிர்நோக்கும் செம்மை உடையவர் ஆராய்ந்து தெளிந்தபின் நட்பு கொள்ளாவிட்டால், செய்வதறியாமல் வாடுவர். நட்பு நீடிக்க விரும்பாமல் வாடுவர். நீ சால்பும் செம்மையும் பூண்டொழுகாவிட்டால் நான் வாழ்வதால் என்ன பயன்? நான் உன்னைத் தெளிந்தது (நம்பியது) தேயட்டும்.

தெளவிடை விலங்கியது. - **நம்பி குட்டுவனார்**

**நற்றிணை - 364. முல்லை**

**“சொல்லிய பருவம் கழிந்தன்று; எல்லையும்**
**மயங்கு இருள் நடு நாள் மங்குலோடு ஒன்றி,**
**ஆர் கலி வானம் நீர் பொதிந்து இயங்க,**
**பனியின் வாடையொடு முனிவு வந்து இறுப்ப,**
**இன்ன சில் நாள் கழியின், பல் நாள்**
**வாழலென் வாழி- தோழி!- ஊழின்**
**உரும் இசை அறியாச் சிறு செந் நாவின்**
**ஈர் மணி இன் குரல் ஊர் நணி இயம்ப,**
**பல் ஆ தந்த கல்லாக் கோவலர்**
**கொன்றைஅம் தீம் குழல் மன்றுதோறு இயம்ப,**
**உயிர் செலத் துனைதரும் மாலை,**
**செயிர் தீர் மாரியொடு ஒருங்கு தலைவரினே”**

கார்காலத்தில் திரும்பி வந்துவிடுவேன் என்று அவர் சொல்லிச் சென்ற பருவம் கழிந்துவிட்டது. பகலிலும், மயங்கும் இருளோடு கூடிய நள்ளிரவிலும், மேகக் கூட்டத்தோடு தோன்றி, இடி முழங்கும் வானம், மழை பொழிகிறது. பனியோடு கூடிய வாடைக்காற்று சினம் கொண்டது போல் வீசுகிறது. இன்னும்

சிலநாள் அவர் வராமல் பனிக்காற்று வீசிக்கொண்டிருந்தால், தோழி, நான் உயிர் வாழமாட்டேன்.பசுவின் கழுத்தில் மணி கட்டியிருக்கின்றனர். அந்த மணி முறையாக (ஊழின்) ஒலிக்கும். இடி போல் முழங்காத இனிய இசையுடன் ஒலிக்கும். அந்த இசை ஊரெல்லாம் கேட்கிறது. பசுக்களை மேய்க்கும் கோவலர் அவற்றை ஓட்டிக்கொண்டு இல்லம் திரும்புகின்றனர். இசை கற்காத அந்தக் கோவலர் கொன்றைக் காயில் செய்த குழலை ஊதுகின்றனர், அவர்கள் குழல் ஊதும் இசை ஊரின் பொதுமன்றத்தில் ஆங்காங்கே ஒலிக்கிறது. இந்த ஒசை என் உயிரை விரைந்து செல்லும்படி முடுக்குகிறது (துனைதரும்). இது மாலை வேளை. அத்தோடு குற்றமற்ற பதமான மழையும் பொழிகிறது. இவை அனைத்தும் ஒருங்கு வந்து தாக்கினால் என் உயிர் நிற்குமா?

**வினாக்கள்**

1. நற்றிணை, குறுந்தொகை - விளக்கம் தருக.
2. நற்றிணை கூறும் பரணர் பாடல் செய்தியை விளக்குக.
3. நற்றிணை குறிப்பிடும் முல்லைப்பாடல் தரும் செய்தியை விளக்குக.
4. நற்றிணை குறிப்பிடும் நெய்தல் பாடலை விளக்குக.
5. நற்றிணை கூறும் பாலைப்பாடலை விளக்குக.

## அலகு - 2

## குறுந்தொகை

தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று தான் குறுந்தொகை. இந்நூல் எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்து சுட்டும் வகையில் இந்நூல் “நல்ல குறுந்தொகை” என சிறப்பித்து பாடப்படுகிறது. இந்த குறுந்தொகையின் சிறப்புகளை இந்த பதிவின் மூலம் படித்து தெரிந்துகொள்வோம் வாங்க. குறுந்தொகை நூல் குறிப்பு: இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இந்நூலை தொகுத்தவர் பூரிக்கோ. தொகுப்பித்தவர் பெயர் இதுவரை அறியப்படவில்லை.

இந்நூல் குறைந்த அடிகளால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால் “குறுந்தொகை” என பெயர் பெற்றது. இந்த நூல் அகம் சார்ந்த பொருளினை அகவற்பாவினால் கூறுவதால் இந்நூல் அகநூல் என்று கூறப்படுகிறது. கடவுள் வாழ்த்துடன் 401 பாடல்களை கொண்டுள்ளது. இந்நூலின் பாடல்கள் 4 அடி முதல் 8 அடி வரை உள்ளன. இந்நூல் குறைந்த அளவாக 4 அடிகளையும், அதிக அளவாக 8 அடிகளையும் கொண்டுள்ளது. இந்நூல் அதிக மேற்கோள்கள் காட்டப்பட்ட நூல் ஆகும். இந்நூல் எட்டுத்தொகை நூல்களில் முதலில் தொகுக்கப்பட்ட நூல் ஆகும்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கடவுள் முருகப்பெருமான் ஆவார். முருகபெருமானை பாட்டுடைத் தலைவனாக கொண்டு கடவுள் வாழ்த்து பாடல் பாடப்பட்டுள்ளது. இந்நூலுக்கு கடவுள் வாழ்த்து பாடலை பாடியவர் "பாரதம் பாடிய பெருந்தேவனார்" ஆவார். இந்நூலில் அமைந்துள்ள 401 பாடல்களை 206 புலவர்கள் பாடியுள்ளனர். பழந்தமிழர் வாழ்வினைக் காட்டும் காலக்கண்ணாடி என்று இந்நூல் அழைக்கப்படுகிறது. இந்நூலில் உணர்வு மிகுந்தும் வருணைகள் குறைந்தும் காணப்படுகின்றன. இந்நூலில் 20 பாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். இந்த தகவலை "சீவக சிந்தாமணி சிறப்பாயிரத்தில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்".

**குறுந்தொகை நூலை பாடியவர்கள்:**

இந்த நூலில் 10 பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அதனால், அந்த பாடல்களின் தொடக்க வரிகளையே ஆசிரியர் பெயர்களாக அமைத்துள்ளனர். உவமைச் சிறப்பால் பெயர் பெற்ற 18 ஆசிரியர்கள் இந்நூலில் காணப்படுகிறார்கள். இந்நூலை முதலில் வெளியிட்டவர் சௌரிப்பெருமாள் அரங்கனார் ஆவார். சி.வை. தாமோதரம் பிள்ளை என்பவர் இந்நூலை முதன் முதலில் பதிப்பித்துள்ளார். இந்நூலை ஆராய்ச்சி பதிவு செய்தவர் உ.வே. சாமிநாத ஐயர்.

அணிலாடு முன்றிலார்.

செம்புலப்பெயல் நீரார்.

குப்பைக் கோழியார்.

காக்கைப் பாடினியார்.

விட்ட குதிரையார்.

மீனெறி தூண்டிலார்.

ஓரேருழவனார்.

காலெறி கடிகையார்.

கல்பொரு சிறுநுரையார்.

வெள்ளி வீதியார்.

**குறுந்தொகை - 3. குறிஞ்சி - தலைவி கூற்று**

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**

**நீரினும் ஆரள வின்றே சாரல்**

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**

**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"**

- தேவகுலத்தார்.

மலைச்சாரலில் கருநிறக் கோலில் பூத்துள்ள குறிஞ்சிப் பூவிலுள்ள பெருந்தேனைக் கூட்டில் சேர்த்து வைக்கும் தேனிழை கொண்ட நாடன் அவன். அவனுக்கும் எனக்கும் இடையே இழையோடியிருக்கும் நட்பு இந்த மண் பரப்பினைக் காட்டிலும் பெரிது. வான் உயர்வைக் காட்டிலும் உயர்ந்தது. கடல் நீரின் அளவைக் காட்டிலும் மிகுதியானது. தலைவி தன் தோழியிடம் இவ்வாறு கூறுகிறாள்.

**குறுந்தொகை - 8 மருதம் - காதற் பரத்தை கூற்று**

**“கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்**

**பழன வாளை கதூஉ மூரன்**

**எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்**

**கையும் காலும் தூக்கத் தூக்கும்**

**ஆடிப் பாவை போல**

**மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே”**

**- ஆலங்குடி வங்கனார்.**

கழனி ஓரத்தில் இருக்கும் மாமரத்திலிருந்து விழும் மாம்பழத்தை அந்த வயலில் மேயும் வாளை மீன் கவ்வும்படியான ஊரின் தலைவன் அவன். (அவள் மாம்பழம். அவன் வாளைமீன். – இறைச்சிப்பொருள்) அவன் என் இல்லத்தில் இருக்கும்போது தன்னைப் பற்றிப் பெருமையாகப் பீத்திக்கொண்டான். தன் வீட்டுக்குத் திரும்பியதும் தன் மகனின் தாய் ஆட்டியபடியெல்லாம் ஆடுகிறான். பொம்மலாட்டத்தில் ஆட்டக்காரன் ஆட்டுவது போல் கையையும், காலையும் தூக்கி ஆடும் பொம்மை போல் ஆடுகிறான்.

**குறுந்தொகை - 11. பாலை - தலைவி கூற்று**

**“கோடீர் இலங்குவளை ஞெகிழ நாடொறும்**

**பாடில கலிழும் கண்ணொடு புலம்பி**

**ஈங்கிவண் உறைதலும் உய்குவம் ஆங்கே**

**எழுவினி வாழியென் னெஞ்சே முனாஅது**

**குல்லைக் கண்ணி வடுகர் முனையது**

**வல்வேற் கட்டி நன்னாட் டும்பர்**

**மொழிபெயர் தேஎத்த ராயினும்**

**வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே”**

**- மாமூலனார்**

அவள் தனக்குள் தன் நெஞ்சோடு பேசிக்கொள்கிறாள். சங்கில் அறுத்த வளையல் என் புயத்தோளிலிருந்து நழுவுகிறது. நாள்தோறும் கண்கள் தூங்காமல் கண்ணீர் வடித்துப் புலம்புகின்றன. இப்படி இங்கு உயிரோடு வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆங்கே செல்வோம். அவர் சென்ற நாட்டுக்கே செல்வோம். கட்டி அரசன் ஆளும் வடுகர் வேற்றுமொழி பேசும் நாடாயினும் செல்வோம். நெஞ்சே, வாழி, இனி எழுக. (புறப்படுக). வடுகர் – குல்லை என்னும் பூவைக் குடியின் அடையாளப் பூவாகச் சூடிக்கொள்பவர்கள்.

**குறுந்தொகை - 15. பாலை - செவிலி கூற்று**

**“பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு**

**தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய**

**நாலூர்க் கோசர் நன்மொழி போல**

**வாயா கின்றே தோழி ஆய்கழற்**

**சேயிலை வெள்வேல் விடலையொடு**

**தொகுவளை முன்கை மடந்தை நட்பே”**

**- அவ்வையார்.**

அவன் விடலை (வீரக் காளை). காலிலே வீரக் கழலையும். கையிலே சேம்பு இலை போன்ற வெண்ணிற வேலையும் கொண்டவன். அவள் மடந்தை. முன்கையில் வளையல்களைத் தொகுதியாக அணிந்தவள். இருவருக்கும் இடையே நட்புறவு. அது ஊரெங்கும் பேசப்படுகிறது. வரி தண்டுவதற்காக, கோசர் பறை முழக்கத்துடன், சங்கொலி முழங்கி, நன்கு மொழி பேசிக்கொண்டு ஊரின் பொது மன்றத்து ஆல மரத்தடியில் தோன்றியது ஊரார் வாய்களில் பேசப்படுவது போல, அவனுக்கும் அவளுக்கும் இடையே உள்ள உறவு ஊரார் வாயிலெல்லாம் பேசப்படுகிறது.

**குறுந்தொகை - 16. பாலை - தோழி கூற்று**

**“உள்ளார் கொல்லோ தோழி கள்வர்**
**பொன்புனை பகழி செப்பங் கொண்மார்**
**உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்**
**செங்காற் பல்லி தன்றுணை பயிரும்**
**அங்காற் கள்ளியங் காடிறந் தாரே”**

**- பாலைபாடிய பெருங்கடுங்கோ.**

தலைவி தன் தோழியிடம் கூறுகிறாள். அவர் கள்ளிக் காட்டின் வழியே செல்கிறார். கள்ளி தன் வேரை ஊன்றிப் பதித்துக்கொண்டுள்ள காடு அது. அங்குப் பல்லி தன் துணைப்பல்லியை அழைக்கும். அது சிவந்த காலை உடைய

காட்டுப்பல்லி. அந்தப் பல்லி துணையை அழைக்கும் ஓசையானது, கள்வர் இரும்பாலான தன் அம்புமுனையை விரல் நகத்தில் புரட்டித் தீட்டும்போது தோன்றும் ஒலி போல் கேட்கும். இப்படி ஓசை கேட்கும்போது அவர் நம்மை (அவரது துணையை) நினைக்கமாட்டாரோ?

**குறுந்தொகை - 18. குறிஞ்சி - தோழி கூற்று**

**"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**
**சாரல் நாட செவ்வியை ஆகுமதி**
**யார தறிந்திசி னோரே சாரல்**
**சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்**
**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"**

**- கபிலர்.**

இவள் உயிர் மிகச் சிறியது. உன் நாட்டில் மூங்கில்முள் வேலி போட்ட பலா மரத்தின் சிறிய கிளையில் பெரிய பலாப்பழம் தொங்குவது போல இவளது (சிறிய உயிரில் பெரிய காம உணர்வு) ஒட்டிக்கொண்டு தொங்குகிறது. நீ செம்மைப் பண்பு உடையவனாக மாறிவிடு. (மணந்துகொண்டு இவளைப் பெறுவாயாக) இல்லாவிட்டால் இவள் உயிருக்கு ஆகப்போவது யாருக்குத் தெரியும்?

**குறுந்தொகை - 25. குறிஞ்சி - தலைவி கூற்று**

**"யாரும் இல்லைத் தானே கள்வன்**
**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ**

**தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால**

**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**

**குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.**

**- கபிலர்.**

அவளோடு உறவு கொண்டவன் அவளை அறியேன் என்று பொய் சொல்லுகிறான். தலைவி தன் தோழியிடம் இதனைக் கூறுகிறாள். அவன் என்னோடு இருந்தான். அப்போது யாரும் இல்லை. அவன்தான் திருடன். திருடன் பொய் சொன்னால் நான் என்ன செய்வேன்? அவன் என்னோடு உறவு கொண்டபோது குருகு பார்த்துக்கொண்டிருந்தது. குருகு – தினைத் தட்டை போன்ற கால்களைக் கொண்டது. ஓடும் நீரில் வரும் ஆரல் மீன் இரைக்காகக் காத்துக்கொண்டிருந்தது.

**குறுந்தொகை - 118. நெய்தல் - தலைவி கூற்று**

**“புள்ளு மாவும் புலம்பொடு வதிய**

**நள்ளென வந்த நாரில் மாலைப்**

**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்**

**வருவீர் உளீரோ எனவும்**

**வாரார் தோழிநங் காத லோரே”**

**- நன்னாகையார்.**

வரைவு நீட்டித்தவழி, தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது நன்னாகையார் பாடல் புள்ளினங்களும் விலங்கினங்களும் தம் துணை வருகைக்காகப் புலம்பிக்கொண்டு காத்திருக்கும் மாலை நேரம் வந்துவிட்டது. உள்ளே வருபவர் யாரேனும் உண்டா எனக் கோட்டை வாயிலை மூடுவோர் அழைக்கின்றனர். நம் காதலர் வரவில்லை போலும்.

**குறுந்தொகை - 189. பாலை - தலைவன் கூற்று**

**"இன்றே சென்று வருவது நாளைக்**
**குன்றிழி அருவியின் வெண்டேர் முடுக**
**இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி**
**விசும்புவீழ் கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்**
**காலியற் செலவின் மாலை எய்திச்**
**சின்னிரை வால்வளைக் குறுமகள்**
**பன்மா ணாக மணந்துவக் கும்மே"**

**- மதுரை ஈழத்துப் பூதன்தேவனார்.**

செல்லவேண்டிய இடத்துக்கு இன்றே சென்று மீண்டுவிடவேண்டும். நாளை என் மனைவியுடன் நான் மகிழவேண்டும். அவள் கையில் சில வளையல்கள் மட்டுமே எஞ்சியிருக்கும். தேர் குன்றிலிருந்து விழும் அருவி போல விரைந்து

செல்லட்டும். பிறை போன்ற அதன் சக்கர விளிம்பு வானிலிருந்து விழும் எரிமீன் போலப் பயிரினங்களைத் துணித்துக்கொண்டு காற்றைப் போல விரையட்டும்.

**குறுந்தொகை - 249. குறிஞ்சி - தலைவி கூற்று**

**"இனமயில் அகவு மரம்பயில் கானத்து**
**நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்பப்**
**படுமழை பொழிந்த சாரலவர் நாட்டுக்**
**குன்ற நோக்கினென் தோழி**
**பண்டை யற்றோ கண்டிசின் நுதலே"**

**- கபிலர்.**

தோழி! (அவரை நினைத்து நிறம் மாறிய) என் நெற்றி அவர் மலையைப் பார்த்ததும் பழைய பொலிவைப் பெற்றுவிட்டது, என்கிறாள் தலைவி தன் தோழியிடம். பெருமழை பொழிந்த மலைச்சாரலில் மயிலினம் அகவும். அதே நேரத்தில் நரைத்த முகம் கொண்ட ஊகம் இனக் குரங்கு தன் குட்டிகளோடு நடுங்கும். இப்படிப்பட்டது அவர் மலை.

**வினாக்கள்**

1. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று" பாடலை விளக்குக.
2. குறுந்தொகை குறிப்பிடும் மாமூலனார் பாடலை விளக்குக.
3. "உன்னார் கொல்லோ தோழி கள்வர்" பாடலை விளக்குக.
4. "யாரும் இல்லைத் தானே கள்வன்" பாடலை விளக்குக.

5. குறுந்தொகை கூறும் தலைவன் கூற்று பாடலை விளக்குக.

6. குறுந்தொகையில் தலைவி கூற்றுப் பாடலை விளக்குக.

## அலகு - 3

# ஐங்குறுநூறு

## ஐங்குறுநூறு - 2. வேழப்பத்து

### வேழப் பத்து

வேழம் என்பது ஆற்றங்கரையில் கரும்பு போல் வளரும் பேய்க்கரும்பு. வேழத்தை வயலைக் கொடி சுற்றும். வேழம் கரும்பு போல் பூக்கும். அதன் பூ வெண்குதிரையின் பிடரிமயிர் போல இருக்கும். வேழம் வளர்ந்து அருகிலுள்ள மாந்தளிரை மடக்கும். புனலாடும் மகளிர் புணர மறைவிடமாகி உதவும். அப்போது அவர்களின் நெற்றிக் குங்குமம் அதன் வேரில் ஒட்டிக்கொள்ளும். அதன் பூ வானத்தில் பறக்கும் குருகின் சிறகு போல் இருக்கும். செருந்திப் பூவோடு வேழம் மயங்கிக் கிடக்கும். உதிர்ந்த மாம்பூ புணர்ந்தோர் உடம்பு மணம் கமழ, அதன்மேல் வேழப்பூ உதிர்ந்து மணத்தை மறைக்கும்.மாம்பூவில் மொய்க்கும் வண்டின் சிறகு போல் பூக்கும்.

### செய்தி

வேழம் பூக்கும் ஊரன் அவன். அவனை எண்ணி என் தோள், கண் முதலான உறுப்புக்கள் நலன் இழந்தன - என்கிறாள் தலைவி.

**மருதம்**

கணவன் கட்டழகியரை நாடும் மருதத் திணைப் பாடல்கள் இவை.

**வேழம்**

- வேழம் என்பது பேக்கரும்பு
- ஆற்றோரங்களில் வளர்ந்துகிடக்கும்.
- அக்காலத்தில் வீட்டு மனைகளிலும் வேலிக்காக இதனை வளர்த்தனர்.
- காதலர் மறைமுகமாகப் புணர்ந்து மகிழ இந்த வேழப் புதர் பயன்படும்.
- இதனைப்பற்றிப் பாடும் பாடல்கள் இவை.

**பாடல்: 11**

**"மனை நடு வயலை வேழம் சுற்றும்**

**துறை கேழ் ஊரன் கொடுமை நாணி,**

**'நல்லன்' என்றும், யாமே;**

**'அல்லன்' என்னும், என் தட மென் தோளே"**

வீட்டில் நடப்பட்ட வயலைக்கொடி (பசலைக்கொடி) வேழக்கரும்பைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஆற்றுத்துறையை உடையவன் ஊரன். அவன் வாராத

கொடுமையை மறைக்க நாணங்கொண்டு நான் நல்லவன் என்கிறேன். என் தோள்களோ வாட்டமுற்று நல்லவன் அல்லன் என்று காட்டிக்கொடுத்து விடுகின்றன.

பாணன் முதலாயினார்க்குத் தலைமகன் கொடுமை கூறி வாயில் மறுத்த தலைமகள், கழறிய பாங்கற்கு வாயில் நேர்வாள், சொல்லியது. 'தலைவன் எவ்வாறு தப்பி ஒழுகினும், அவன் கொடுமை நின்னால் புலப்படுதல் தகாது' என்று கழறிய பாங்கிக்குத் தலைமகள் சொல்லியதூஉம் ஆம்

**பாடல்: 12**

**“கரை சேர் வேழம் கரும்பின் பூக்கும்**

**துறை கேழ் ஊரன் கொடுமை நன்றும்**

**ஆற்றுக தில்ல, யாமே;**

**தோற்க தில்ல, என் தட மென் தோளே”**

கரையில் இருக்கும் வேழம் கரும்பைப்போல் பூத்து ஏமாற்றும் துறையை உடையவன் ஊரன். அவன் என்னிடம் வாராதிருக்கும் பொடுமையை நான் ஆற்றிக்கொள்கிறேன். அவனை நினைத்து வாடும் என் தோள் தோற்றுப்போகிறது.

உழையர் நெருங்கிக் கூறிய திறமும் தனது ஆற்றாமையும் நினைந்து, வாயில் நேரக் கருதிய தலைமகள், 'பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான்' என்பது கேட்டு, பொறாளாய்க் கருத்து அழிந்து, தன்னுள்ளே சொல்லியது.

**பாடல்: 13**

**“பரியுடை நல் மான் பொங்குஉளை அன்ன**

**அடைகரை வேழம் வெண் பூப் பகரும்,**

**தண் துறை ஊரன் பெண்டிர்,**

**துஞ்சு ஊர் யாமத்தும், துயில் அறியலரே”**

பாய்ந்தோடும் குதிரையின் பிடரிமயிர் போன்று பூப் பூக்கும் துறையை உடையவன் ஊரன். அவன் காமப்பெண்டிர் நள்ளிரவில் தூங்காமல் கிடப்பார்களே! – அவன் மனைவி சொல்கிறாள், அவனுக்காகத் தூது வந்தவர்களிடம்.

வாயிலாய்ப் புக்கார்க்குத் தலைமகள், 'அவன் பெண்டிர் நள்ளென் யாமத்தும் துயிலார்; அவர் அறியாமல் அவன் வரும் திறம் யாது?' எனச் சொல்லி வாயில் மறுத்தது.

**பாடல்: 14**

**“கொடிப் பூ வேழம் தீண்டி, அயல**

**வடிக்கொள் மாஅத்து வண் தளிர் நுடங்கும்**

**அணித் துறை ஊரன் மார்பே**

**பனித் துயில் செய்யும் இன் சாயற்றே”**

கொடியில் பூக்கும் பூக்கள் படர்வதற்காக வேழத்தைத் தொடும். பின்னர் அங்கிருந்து வடிவழகு கொண்ட மாந்தளிரைப் பற்றி அதனை வளைக்கும். இப்படிப்பட்ட துறையை உடையவன் ஊரன். அவன் மார்பு பனிக்காலத்தில் இன்பமாகச் சாய்ந்து உறங்க ஏந்தாக இருக்கும்.

தலைமகள் புணர்ச்சி வேட்கையைக் குறிப்பினான் உணர்ந்த தோழி, 'அவன் கொடுமை நினையாது அவன் மார்பை நினைந்து ஆற்றாயாகின்றது என்னை?' என்றாட்கு, அவன் கொடியனேஆயினும், அவன் மார்பு குளிர்ந்த துயிலைச் செய்யும் இனிய சாயலை உடைத்து' ஆதலால் காண்' எனச் சொல்லியது

**பாடல்: 15**

**“மணல் ஆடு மலிர்நிறை விரும்பிய, ஒண் தழை**

**புனல் ஆடு மகளிர்க்குப் புணர் துணை உதவும்**

**வேழ மூதூர் ஊரன்**

**ஊரன் ஆயினும், ஊரன் அல்லன்னே”**

ஊரனின் ஊர் வேழம் மிகுதியாக உடையது. அங்குள்ள மணலை விரும்பிப் படர்ந்து பூத்துக்கிடக்கும் கொடியிலுள்ள தழையானது நீராடிய மகளிர் உடுத்திக்கொள்ளும் தழையாடையாக உதவும். ஊரனோ ஊரில் இருந்தும் (தேரில்) ஊர்ந்து வருபவன் அல்லன் ஆகிவிட்டான்.

சேணிடைப் பிரிந்து வந்து உடன் உறைகின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகின்றது என்று குறிப்பினான் உணர்ந்து, தலைமகள் வேறுபட்டாளாக, தோழி அதனை அறியாது, ' அவன் உடன்உறையவும் வேறுபடுகின்றது என்னை?' என்றட்கு அவள் சொல்லியது.

**பாடல்: 16**

**“ஓங்கு பூ வேழத்துத் தூம்புடைத் திரள்கால்**

**சிறு தொழுமகளிர் அஞ்சனம் பெய்யும்**

**பூக் கஞல் ஊரனை உள்ளி,**

**பூப் போல் உண்கண் பொன் போர்த்தனவே”**

அஞ்சனம் என்பது மகளிர் தலையில் செருகிக்கொள்ளும் பூ. உள்ளே துளை கொண்ட வேழத்துப் பூ அவ்வாறு செருகிக்கொள்ள உதவும். இந்த வேழப் பூ மண்டிக்கிடக்கும் துறையை உடையவன் ஊரன். வாராத அவனை எண்ணி எண்ணிப் பூப்போல் இருந்த என் கண் பசலை பூத்துப் பொன்னிறம் (மஞ்சள்)நிறம் பெற்றுக் கிடக்கின்றன.

வாயிலாய்ப் புகுந்தார்க்குத் தோழி, 'அவன் வரவையே நினைத்து இவள் கண்ணும் பசந்தன; இனி அவன் வந்து பெறுவது என்னை?' எனச் சொல்லி, வாயில் மறுத்தது.

**பாடல்: 17**

**“புதல் மிசை நுடங்கும் வேழ வெண் பூ**

**விசும்பு ஆடு குருகின் தோன்றும் ஊரன்**

**புதுவோர் மேவலன் ஆகலின்,**

**வறிது ஆகின்று, என் மடம் கெழு நெஞ்சே”**

புதரில் ஆடிக்கொண்டிருக்கும் வேழத் தட்டையின் வெள்ளைநிறப் பூ வானத்தில் குருகுப் பறவை பறப்பது போல் தோன்றும் ஊரன் அவன். அவன் புதிய

பெண்ணை விரும்பிச் சென்றதால் என் மடத்தனமான நெஞ்சு வெறிச்சோடிக் கிடக்கிறது.

தலைமகன் பரத்தையிற் பிரிந்த வழி, 'இவ்வாறு ஒழுகுதலும் ஆடவர்க்கு இயல்பு அன்றே; நீ இதற்கு நெஞ்சு அழிகின்றது என்னை?' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**பாடல்: 18**

**“இருஞ் சாய் அன்ன செருந்தியொடு வேழம்**

**கரும்பின் அலமரும் கழனி ஊரன்,**

**பொருந்து மலர் அன்ன என் கண் அழ,**

**பிரிந்தனன் அல்லனோ, 'பிரியலென்' என்றே?”**

பருத்திருக்கும் நாணல் புல் போல வளர்ந்திருக்கும் செருந்தியோடு ஒப்பிட்டு நோக்கும்படி அந்தச் செருந்தியோடு சேர்ந்து வேழமானது கரும்போடு ஒப்பிட்டு நோக்கும்படிப் பருத்து வளர்ந்திருக்கும் ஊரன் அவன். உன்னை விட்டுவிட்டு என்றும் பிரியமாட்டேன் என்று சொல்லிய அவன் மலர் போன்ற என் கண் அழும்படி விட்டுவிட்டுப் பிரிந்து வாழ்கிறானே!

பரத்தையிற் பிரிந்து வந்து தெளித்துக் கூடிய தலைமகற்குப் பின் அவ் ஓழுக்கம் உளதாயவழி, அவன் வரவிடுத்த வாயில்கட்குத் தலைமகள் சொல்லியது.

**பாடல்: 19**

**“எக்கர் மாஅத்துப் புதுப் பூம் பெருஞ் சினை,**

**புணர்ந்தோர் மெய்ம் மணம் கமழும் தண் பொழில்,**

**வேழ வெண் பூ வெள் உளை சீக்கும்**

**ஊரன் ஆகலின் கலங்கி,**

**மாரி மலரின் கண் பனி உகுமே”**

உடலுறவு கொண்டவரின் மேனி போல் மாம்பூ மணம் கமழும் பொழில் சூழ்ந்த ஊரன் அவன். இப்போது வேழம் விளைந்திருக்கும் வெள்ளைப் பூக்களை வேறொருத்தியோடு (கோழி மண்ணைச் சீய்ப்பது போல்) சீய்த்துத் தேன் உண்டவண்ணம் இருக்கிறானே!

'பல் நாள் அவன் சேணிடைப் பிரியவும் ஆற்றியுளையாகிய நீ சில் நாள் அவன் புறத்து ஒழுகுகின்ற இதற்கு ஆற்றாயாகின்றது என்னை?' என்ற தோழிக்கு, 'எதிர்ப்பாடு இன்றி ஓர் ஊர்க்கண்ணே உறைகையினாலே ஆற்றேனாகின்றேன்' எனத் தலைமகள் சொல்லியது

**பாடல்:** 20

ஆறு கால்களையும் அழகிய சிறகுகளையும் உடைய தும்பி நூற்றுக்கணக்கான இதழ்களை உடைய தாமரை மொட்டை உள்ளே நுழையச் சீய்க்கும். அந்தத் தாமரையின் தண்டு போல் உள்ளே துளை கொண்டதாய் இருக்கும் வேழம் விளைந்திருக்கும் துறையை உடைய ஊரன் அவன். அவனை நினைத்துக்கொண்டு என் கணுக்கை வளையல்கள் கழன்று அவனிடம் ஓடுகின்றனவே!

**“அறு சில் கால அஞ்சிறைத் தும்பி**

**நூற்றிதழ்த் தாமரைப் பூச் சினை சீக்கும்,**

**காம்பு கண்டன்ன தூம்புடை, வேழத்துத்**

**துறை நணி ஊரனை உள்ளி, என்**

**இறை ஏர் எல் வளை நெகிழ்பு ஓடும்மே”**

தலைமகளை வாயில் நேர்வித்தற் பொருட்டாக, 'காதலர் கொடுமை செய்தாராயினும், அவர் திறம் மறவாதொழியல் வேண்டும்' என்று முகம்புகுகின்ற தோழிக்கு, 'என் கைவளை நில்லாதாகின்றது அவரை நினைந்ததன் பயன் அன்றே; இனி அமையும்' எனத் தலைமகள் சொல்லியது.

**2. மஞ்ஞைப் பத்து**

**திணை – குறிஞ்சி - கபிலர்**

மயில்கள் வாழும் நாட்டை உடையவன் தலைவன். தலைவி மயில் போன்றவள். உள்ளுறை உவமம் நிறைந்த இந்தப் பத்துப் பாடல்களிலும் மயில் பேசப்படுகிறது.

**பாடல்: 291**

வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

**“மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்**

**துறுகல் அடுக்கத்ததுவே பணைத் தோள்,**

**ஆய் தழை நுடங்கும் அல்குல்,**

**காதலி உறையும் நனி நல் ஊரே”**

பொருளீட்டச் செல்லும்போது தலைவன் தன் பாங்கனிடம் சொல்கிறான். மயில்கள் ஆடும். ஆந்தை மயில் ஆட்டத்துக்கு முழவு முழக்குவது போல ஒலி எழுப்பும். இப்படிப்பட்ட பெரும் பாறைகள் நிறைந்த மலையடுக்கம் தான் என் காதலி வாழும் நல்ல ஊர். என் காதலி பருத்த தோளினை உடையவள். தன் அல்குல் மறைய ஆய்ந்தெடுத்த தழைகளாலான ஆடை அணிந்தவள்.

**பாடல்: 292**

பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவை முடித்தவளை இல்லத்துக் கொண்டு புகுந்துழி, தலைமகள் உவந்து சொல்லியது.

**“மயில்கள் ஆல, பெருந் தேன் இமிர,**

**தண் மழை தழீஇய மா மலை நாட!**

**நின்னினும் சிறந்தனள், எமக்கே நீ நயந்து**

**நல் மனை அருங் கடி அயர,**

**எம் நலம் சிறப்ப, யாம் இனிப் பெற்றோளே”**

பெரும் பணக்காரியை இரண்டாம் தாரமாகக் கணவன் மணந்துகொண்டு வந்தபோது மனைவி கணவனிடம் சொல்கிறாள். மயில்கள் ஆடும். அந்த ஆட்டத்திற்கு ஏற்ப மலைப் பாறைகளில் கூடு கட்டும் பெருந் தேனீக்கள் யாழிசை போல இசை கூட்டித் தரும். இப்படிப்பட்ட பெருமலை நாடன் நீ. என் நலம் சிறப்பதற்காக நீ மற்றொருத்தியைத் திருமணம் செய்துகொண்டு வந்திருக்கிறாய். அவள் உன்னைக் காட்டிலும் சிறந்தவள்.

**பாடல்: 293**

பகற்குறியிடம் புக்க தலைமகன், தலைவி பின்னாக மறைய வந்து கண் புதைத்துழி, சொல்லியது.

**சிலம்பு கமழ் காந்தள் நறுங் குலை அன்ன**

**நலம் பெறு கையின் என் கண் புதைத்தோயே!**

**பாயல் இன் துணை ஆகிய பணைத் தோள்**

**தோகை மாட்சிய மடந்தை!**

**நீ அலது உளரோ என் நெஞ்சு அமர்ந்தோரே?**

காதலி பின்புறமாக வந்து காதலனின் கண்ணைக் கையால் மறைத்தபோது காதலன் சொல்கிறான். மலையெல்லாம் மணம் கமழும் காந்தள் மலர் போன்ற நலம் மிக்க உன் கைகளால் என் கண்களைப் புதைத்தாய். படுப்பதற்குப் பாயாகிய பருத்த தோளை உடைய மயிலின் மாட்சிமை கொண்ட மடந்தை நீ. உன்னைத் தவிர என் நெஞ்சில் நிறைந்திருப்பவர் வேறு யாராக இருக்க முடியும்?

**பாடல்: 294**

வதுவை செல்லாநின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியது.

**எரி மருள் வேங்கை இருந்த தோகை**

**இழை அணி மடந்தையின் தோன்றும் நாட!**

**இனிது செய்தனையால்; நுந்தை வாழியர்!**

**நல் மனை வதுவை அயர, இவள்**

**பின் இருங் கூந்தல் மலர் அணிந்தோயே!**

திருமணத்துக்குப் பின்னர் தோழி தலைவனிடம் சொல்கிறாள். தீ பற்றி எரிவது போல வேங்கை மரம் பூத்திருக்கிறது. அதில் ஏறியிருக்கும் மயில் ஒப்பனை செய்யப்பட்ட மயில் போல் காணப்படுகிறது. அப்படிப்பட்ட மலைநாட்டின் தலைவன் நீ. நீ இனியது செய்தாய். இவளை – என் தோழியை – உனக்குத் திருமணம் செய்துவைத்த உன் தந்தை வாழ்க. பின்னிய இவள் கூந்தலில் மலர் சூட்டினாயே, அந்தத் திருமணம் வாழிய.

**பாடல்: 295**

தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்துழி, உடன்சென்ற நெஞ்சினைத் தலைமகள் நினைந்து கூறியது.

**வருவதுகொல்லோ தானே வாராது**

**அவண் உறை மேவலின், அமைவது கொல்லோ**

**புனவர் கொள்ளியின் புகல் வரும் மஞ்ஞை,**

**இருவி இருந்த குருவி வருந்துற,**

**பந்து ஆடு மகளிரின் படர்தரும்**

**குன்று கெழு நாடனொடு சென்ற என் நெஞ்சே?**

தலைவி தன் நெஞ்சைக் கேட்கிறாள். மரத்தை வெட்டிக் கொளுத்திய நிலம் புனம். புனம் கொளுத்தும் தீப் பந்தம் போல் மயில் ஆங்காங்கே ஆடும். புனத்தில் கதிர் அறுத்த ‘இருவி’த் தட்டையில் இருந்துகொண்டு குருவி தவ்வித் தவ்விக் குதிக்கும். குருவி மகளிர் ஆடும் பந்து போல் தவ்வும். அவர் பொருளீட்டச் சென்றுள்ளார். என் நெஞ்சு அவர் பின்னேயே சென்றிவிட்டது. சென்ற என் நெஞ்சம் திரும்பி என்னிடம் வருமா வராதா? அங்கேயே இருக்க விரும்புமோ? பந்தாடுவது போலக் குருவி தவ்வுகிறதே, அப்படியல்லவா என் நெஞ்சம் தவ்வுகிறது.

**பாடல்: 296**

இரவுக்குறி வருகின்ற தலைமகற்குத் தோழி ஆற்றருமை கூறி மறுத்தது.

**கொடிச்சி காக்கும் பெருங் குரல் ஏனல்**

**அடுக்கல் மஞ்ஞை கவரும் நாட!**

**நடுநாள் கங்குலும் வருதி;**

**கடு மா தாக்கின், அறியேன் யானே.**

இரவில் வரவேண்டாம் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள். கொடிச்சி தினைப் புனம் காப்பாள். அந்தத் தினையை மயில் கவரும். அப்படிப்பட்ட நாட்டின் தலைவன் நீ. இரவில் நள்ளிருளில் இவளைத் தேடி வருகிறாய். கரு நிற யானை இருளில் உன் கண்ணுக்குத் தெரியாது. அப்போது உன்னை யானை தாக்கினால் என் தலைவி என்ன செய்வாள்?

**பாடல்: 297**

ஒருவழித் தணந்து வரைய வேண்டும் என்ற தலைமகற்குத் தோழி கூறியது

**விரிந்த வேங்கைப் பெருஞ் சினைத் தோகை**

**பூக் கொய் மகளிரின் தோன்றும் நாட!**

**பிரியினும், பிரிவது அன்றே**

**நின்னொடு மேய மடந்தை நட்பே.**

திரும்பிவிடுவேன் என்னும் தலைவனிடம் தோழி கூறுகிறாள். பூத்து விரிந்திருக்கும் வேங்கை மரத்தில் இருக்கும் மயில்கள் பூப் பறிக்கும் மகளிர் போல் தோன்றும். அப்படிப்பட்ட நாட்டை உடையவன் நீ. நீ பிரிந்தாலும் என் தலைவி நட்பை நீ பிரிக்க முடியாது.

**பாடல்: 298**

தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்திய வழி, அவள் நாணத்தினால் மறைத்து ஒழுகிய அதனைக் கூறக்கேட்ட தலைமகன் சொல்லியது.

**மழை வரவு அறியா மஞ்ஞை ஆலும்**

**அடுக்கல் நல் ஊர் அசைநடைக் கொடிச்சி**

**தான் எம் அருளாள்ஆயினும்,**

**யாம் தன் உள்ளுபு மறந்தறியேமே!**

தலைவன் தோழியிடம் கூறுகிறான். மழை வருவதை அறிந்துகொண்டு மயில் ஆடும். இப்படிப்பட்ட மலையடுக்கம் கொண்ட ஊரில் வாழ்பவள் கொடிச்சி.

அவள் எனக்கு அருள் புரியாவிட்டாலும் நான் அவளை நினைத்துக்கொண்டே இருக்கிறேன். மறக்க முடியவில்லை.

**பாடல்: 299**

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய நிலைமைக்கண், தலைமகள் ஆய வெள்ளத்தோடு கூடி நிற்கக் கண்ட தலைமகன் மகிழ்ந்த உள்ளத்தானாய்த் தன்னுள்ளே சொல்லியது.

**குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்,**

**பைஞ் சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்**

**அம் சில் ஓதி அசைநடைக் கொடிச்சி**

**கண்போல் மலர்தலும் அரிது; இவள்**

**தன் போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே.**

தலைவனின் மகிழ்ச்சி. குன்ற நாடன் என் அரசன். அவன் குன்றுகளுக்கு இடையே உள்ள மலைப் பிளவில், சுனையில் குவளைப் பூக்கள் இவள் கண்களைப் போன்று இதழ்களை விரித்துப் பூக்க முடியாது. மலையிலுள்ள மயிலும் இவளைப் போல ஒசிய முடியாது.

**பாடல்: 300**

தலைமகன் தானே வரைவு வேண்டிவிட, சுற்றத்தார் கொடை நேர்ந்தமை தலைமகட்குத் தோழி சொல்லியது.

**கொடிச்சி கூந்தல் போலத் தோகை**

**அம் சிறை விரிக்கும் பெருங் கல் வெற்பன்**

**வந்தனன்; எதிர்ந்தனர் கொடையே;**

**அம் தீம் கிளவி! பொலிக, நின் சிறப்பே!**

திருமணம் பற்றித் தோழி தலைவிக்குக் கூறுதல். கொடிச்சியின் கூந்தலைப் போல மயில் தோகையை விரிக்கும். இப்படிப்பட்ட நாட்டை உடையவள் உன் காதலன் வெற்பன். அவன் பெண் கேட்டு வந்தான். உன் பெற்றோரும் உன்னைக் கொடையாகத் தர ஒப்பியுள்ளனர். நீ பொலிவு பெறுவாய்; சிறப்படைவாய்.

## அகநானூறு

அகப்பொருள் பற்றித் தொகுக்கப்பட்ட ஐந்து தொகை நூல்களிலும் சிறப்பாக அகப்பொருளைச் சித்திரிக்கும் எழுதப்பட்ட நூலாதலால் இது அகநானூறு எனப்பட்டது. இந்நானூறு பாடல்களைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மனார். தொகுப்பித்தவர் உக்கிரப்பெருவழுதியார். கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். பாடல்கள் 13 அடிச் சிற்றெல்லையும் 31 அடிப் பேரெல்லையும் கொண்டுள்ளமையாலும் கலித்தொகை நீங்கலான பிற தொகை நூலில் காணப்படும் பாடல்களைக் காட்டிலும் நெடியனவாக இருப்பதாலும் இதற்கு 'நெடுந்தொகை' என்ற பெயரும் உண்டு. முதல் 120 பாடல்களைக் கொண்ட பகுதி 'களிற்றியானை நிரை' என்றும் அடுத்த

180 பாடல்களைக் கொண்ட பகுதி ‘மணிமிடை பவளம்’ என்றும் இறுதி 100 பாடல்களைக் கொண்ட பகுதி ‘நித்திலக் கோவை’ என்றும் அமைந்துள்ள முப்பெரும் பிரிவுகளை இந்நூலில் காணலாம். இப்பாடல்களைப் பாடியுள்ள புலவர்களின் எண்ணிக்கை 145.

இப்பாடல்களின் அமைப்பு முறையில் ஓர் ஒழுங்கு முறையினைக் காணமுடிகிறது. 1,3,5,7 என்னும் ஒற்றைப்படை எண் கொண்ட பாடல்கள் பாலைத் திணைப் பாடல்கள். 2,8 என முடியும் எண்கொண்ட பாடல்கள் குறிஞ்சித்திணையைக் குறிப்பன. 4, 14 என நான்கில் முடியும் எண் கொண்ட பாடல்கள் முல்லைத்திணைப் பாடல்கள். 6, 16 முதலான ஆறில் முடியும் எண் பெற்றவை மருதத்திணையைக் குறிப்பன. 10, 20 எனப் பத்தில் முடியும் எண் பெற்றவை நெய்தல்திணையைக் குறிப்பன.

இதன்படி பாலைத்திணை 200, குறிஞ்சித் திணை 80, முல்லைத்திணை 40, மருதத்திணை 40, நெய்தல்திணை 40 என ஐந்திணைகளும் அகநானூற்றில் பாட்டெண்ணிக்கை பெறும்.

இந்நூலில் அகத்திணை ஒழுக்கங்கள், இயற்கை வருணனைகள், வரலாற்றுக் குறிப்புகள், குடவோலைத் தேர்தல் முறை, மணமுறை ஆகியவை பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

### தனக்கென வாழாப் பிறர்குரியாளன் பண்ணன்

வினை முடித்து மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.- **மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்**

தலைவன் தன் தேர்ப் பாகனிடம் சொல்கிறான்.

**பார்வை**

**அகநானூறு - 54. முல்லை**

**விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப,**

**வேந்தனும் வெம்பகை தணிந்தனன். தீம் பெயற்**

**காரும் ஆர்கலி தலையின்று. தேரும்**

**ஓவத்தன்ன கோபச் செந் நிலம்,**

**வள் வாய் ஆழி உள் உறுபு உருள,**

**கடவுக. காண்குவம் பாக! மதவு நடைத்**

போரிட்ட மன்னர் விருந்தினர் ஆயினர். அரிய பொருள்களைத் திறையாகத் தந்தனர். அதனால் நம் வேந்தனும் கொடிய பகை உணர்வு தணிந்தான். கருமேகம் சூழ்கிறது. இடி முழக்கத்துடன் பெருமழை பொழிகின்றது. கோபப் பூச்சிகள் செம்மண் நிலத்தில் ஓவியம் போல ஊர்கின்றன. பாக! வலிமை மிக்க சக்கரம் இந்த நிலத்தில் பதிந்து உருள, தேரை ஓட்டுக.

**தாம்பு அசை குழவி வீங்குசுரை மடிய,**

**கனைஅல்அம் குரல காற் பரி பயிற்றி,**

**படு மணி மிடற்ற பய நிரை ஆயம்**

**கொடு மடி உடையர் கோற் கைக் கோவலர்**

**கொன்றைஅம் குழலர் பின்றைத் தூங்க,**

**மனைமனைப் படரும் நனை நகு மாலை,**

மனையில் தாம்புக் கயிற்றில் கட்டப்பட்டு இளமை துள்ள நடைபோட்டுக்கொண்டிருக்கும் கன்றுக்குட்டிக்குப் பால் ஊட்டுவதற்காக ஆனிரை மந்தை மீண்டுகொண்டிருக்கிறது. பால் வீங்கும் மடியோடு வருகிறது. கன்றை எண்ணிக் கனைக்கும் குரலோடு வருகிறது. காலைப் பரித்து விரையும் நடை போட்டுக்கொண்டு வருகிறது. கழுத்தில் இருக்கும் மணி ஒலிக்கும்படி வருகிறது. அவற்றை மேய்க்கும் கோவலர் அவற்றின் பின்னே வருகின்றனர். ஆடையை மடித்துக் கட்டிக்கொண்டு வருகின்றனர். கையில் வைத்திருக்கும் குழலை ஊதிக்கொண்டு வருகின்றனர். அந்தக் குழல் கொன்றை நெற்றால் செய்யப்பட்டது. கோவலரும் ஆனிரைகளும் மனை நோக்கி வருகின்றனர்.

**தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன்**

**பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண் இலைப்**

**புன் காழ் நெல்லிப்பைங் காய் தின்றவர்**

**நீர் குடி சுவையின் தீவிய மிழற்றி,**

வள்ளல் பண்ணன் தனக்கென வாழாது பிறருக்கு உரிமையாளனாக வாழ்பவன். அவன் ஊர் சிறுகுடியில் சிறிய இலைகளுடன் நெல்லிக்காய் மிகுதியாக இருக்கும். அவற்றைத் தின்றபின் தண்ணீர் குடித்தால் எவ்வாறு இனிக்குமோ அவ்வாறு இனிக்கும் சொற்களை என் மனைவி பேசிக்கொண்டிருப்பாள்.

**'முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!**

**பொன்னுடைத் தாலி என் மகன் ஒற்றி,**

**வருகுவைஆயின், தருகுவென் பால்' என,**

**விலங்கு அமர்க் கண்ணள் விரல் விளி பயிற்றி,**

**திதலை அல்குல் எம் காதலி**

**புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.**

என் மகனைக் கையால் தொட்டு ஒற்றிப் பேசிக்கொண்டிருப்பாள். என் மகன் பொன்னாலான தாலி அணிந்திருப்பான். அது பிறைநிலா வடிவில் இருக்கும். “என்னிடம் வந்தால் பால் தருவேன்” என்று இனிக்குமாறு அவள் பேசுவாள். வளைந்த கண்ணைக் காட்டிப் பேசிக்கொண்டிருப்பாள். என் மகன் அவளை ஏமாற்றிக்கொண்டிருப்பான். அவள் பூங்கொடி போன்றவள். திதலை அல்குல் கொண்டவள் அவள். என் புதல்வன் அவளை ஏமாற்றிக்கொண்டிருக்கும் நிலையைக் காணவேண்டும். பாக, விரைந்து தேரை ஓட்டுக. – தலைவன் சொல்கிறான்.

## அகநானூறு - 117

## சிலம்பு நக இயலி

## திணை – பாலை

மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது. **ஆசிரியர் பெயர் அழிந்துபோயிற்று**.

காட்டு வழியில் அவன் அவளுக்குப் பூச் சூட்டிப் பின்னிவிட்ட கூந்தல் அவள் பிடரியில் தொங்குமோ என்னவோ – செவிலித்தாய் நினைத்துக் கலங்குகிறாள்,

**மௌவலொடு மலர்ந்த மாக் குரல் நொச்சியும்,**

**அவ் வரி அல்குல் ஆயமும், உள்ளாள்,**

**ஏதிலன் பொய்ம்மொழி நம்பி, ஏர் வினை**

**வளம் கெழு திரு நகர் புலம்பப் போகி,**

வீட்டு வெளியில் என் மகள் மௌவல், நொச்சி ஆகிய பூக்கள் பூத்துக்கிடப்பதைப் பற்றி நினைக்கவில்லை. அவற்றைப் பறித்துத் தழையாடை ஆக்கி அவளது இடையில் சூட்டிவிட்ட விளையாட்டுத் தோழிமாரையும் நினைக்கவில்லை. வேறொரு புதியவன் சொன்ன பொய்யான சொற்களை நம்பி, விளையாடிய அழகிய இல்லம் புலம்பும்படி விட்டுவிட்டுப் போய்விட்டாள்.

**வெருவரு கவலை ஆங்கண், அருள்வர,**

**கருங் கால் ஓமை ஏறி, வெண் தலைப்**

**பருந்து பெடை பயிரும் பாழ் நாட்டு ஆங்கண்,**

**பொலந்தொடி தெளிர்ப்ப வீசி; சேவடிச்**

**சிலம்பு நக இயலிச் சென்ற என் மகட்கே**

அச்சம் தரும் பிரிவுப்பாதையில் ஓமை மரத்தில் இருந்துகொண்டு வெள்ளைத் தலையை உடைய பருந்து தன் பெட்டையை அழைக்கும் பாழ்நாட்டு வழியாகச் செல்கிறாள். அவள் செல்லும்போது அவளது கைவளையல்கள் ஒலித்தன. காலின் சிலம்பு ஆடிச் சிரித்தது. (நான்தானே அறியாதவள் போல அனுப்பிவைத்தேன்)

**சாந்து உளர் வணர் குரல் வாரி, வகைவகுத்து;**

**யான் போது துணைப்ப, தகரம் மண்ணாள்,**

**தன் ஓரன்ன தகை வெங் காதலன்**

**வெறி கமழ் பல் மலர் புனையப் பின்னுவிட,**

**சிறுபுறம் புதைய நெறிபு தாழ்ந்தனகொல்**

நான் அவளது தலைமுடியில் (குரல்) மணச்சாந்து பூசி உலர்த்தி, வணக்கி, வகைவகையாகப் பிரித்து வாரி, மலரும் பூவைச் சூட்டிவிடுவேன். இப்போது தகரம் (மண எண்ணெய்) பூசிக் குளித்திருக்க மாட்டாள். அவளைப் போலவே அவள் விரும்பும் காதலனும் தகரம் பூசிக் குளித்திருக்க மாட்டான். என்றாலும் மணமுள்ள மலர்களைச் சூட்டிவிடுவான். பின்னிவிடுவான். அந்தப் பின்னல் அவளது பிடரியில் தொங்கும் போலும்.

**நெடுங் கால் மாஅத்து ஊழுறு வெண் பழம்**

**கொடுந் தாள் யாமை பார்ப்பொடு கவரும்**

**பொய்கை சூழ்ந்த, பொய்யா யாணர்,**

**வாணன் சிறுகுடி வடாஅது**

**தீம் நீர்க் கான்யாற்று அவிர்அறல் போன்றே?**

நீண்ட அடிமரம் கொண்ட மா மரத்திலிருந்து விழும், நன்கு பழுத்த (வெண்) பழத்தை, வளைந்த கால்களை உடைய ஆமையும், அதன் குட்டிகளும் உண்ணும் பொய்கையும், பொய்யாப் புது வருவாயும் கொண்டது வாணன் வாழும் சிறுகுடி. அந்த ஊருக்கு வடக்கில் இனிய ஊற்றுநீர் ஓடும் கான்யாறு (காட்டாறு). அந்தக் காட்டாற்று மணல்படிவு (அறல்) போன்று நெளிநெளியாய் அவள் கூந்தல் இருக்கும். அதில் பூச்சூட்டி அவன் பின்னிவிட்ட கூந்தல் அவள் பிடரியில் தொங்குமோ என்னவோ?

**அகநானூறு - 129. பாலை**

பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது. **குடவாயிற் கீரத்தனார் பாடல்**

**"உள்ளல் வேண்டும் ஒழிந்த பின்" என**

**நள்ளென் கங்குல் நடுங்கு துணை ஆயவர்**

**நின் மறந்து உறைதல் யாவது? "புல் மறைந்து**

“நான் உயிரோடு இல்லாமல் போய்விட்டால்தானே, நீ ஏதாவது நினைக்கவேண்டும், நான்தான் இருக்கிறேனே” என்று நள்ளிரவில் நடுங்கும்படி கூறியவர் உன்னை மறந்து எப்படி வாழ்வார்?

**அலங்கல் வான் கழை உதிர்நெல் நோக்கி,**

**கலை பிணை விளிக்கும் கானத்து ஆங்கண்,**

**கல் சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்**

**தாழிமுதற் கலித்த கோழிலைப் பருத்திப்**

**பொதி வயிற்று இளங் காய் பேடை ஊட்டி,**

**போகில் பிளந்திட்ட பொங்கல் வெண் காழ்**

**நல்கூர் பெண்டிர் அல்கற் கூட்டும்**

பெருங்காற்று ஆட்டுவதால் வானளாவிய மூங்கிலிலிருந்து உதிர்ந்த நெல்லைப் பார்த்த ஆண்மான் தன் பெண்மானை உண்ண அழைக்கும் கானம் அது. அங்குக் கல்லுப் பாறையின் ஓரமாக இருந்தது ஒரு கூரைக் குடிசை. அதில் வாழும் பெண் பானையில் வைத்துத் தான் வளர்த்த கொழுத்த இலை கொண்ட பருத்திச் செடியின் வயிறு தள்ளிய இளங்காயை தன் வளர்ப்பு மானுக்கு ஊட்டுவாள். நெற்றாகி (போகில்) வெடித்த வெள்ளைப் பஞ்சைப் பறித்துத் தன் மடியில் சேகரிப்பாள்.

**கலங்குமுனைச் சீறூர் கை தலைவைப்ப,**

**கொழுப்பா தின்ற கூர்ம் படை மழவர்,**

**செருப்புடை அடியர், தெண் சுனை மண்டும்**

**அருஞ் சுரம் அரிய அல்ல; வார் கோல்**

**திருந்து இழைப் பணைத் தோள், தேன் நாறு கதுப்பின்,**

**குவளை உண்கண், இவளொடு செலற்கு" என**

**நெஞ்சு வாய் அவிழ்ந்தனர் காதலர்**

**அம் சில் ஓதி ஆயிழை! நமக்கே.**

இப்படிப்பட்ட சிற்றூர் மக்கள் மழவர். பிறர் தலையில் கை வைக்கும்படி அவர்கள் போரிடுவர். கொழுப்பை உண்பர். காலில் செருப்பு அணிந்திருப்பர். சுனையில் நீராடுவர். “இவர்கள் வாழும் சுரத்தில் இவளை அழைத்துக்கொண்டு கடந்து செல்லுதல் எனக்கு அரிய செயல் அன்று” என்று தன் உள்ளக் கிடக்கையை வாயால் அவர் தெரிவிக்கிறார்.

தலைவி – அழகிய சிலவாகிய நீண்ட அழகான கூந்தலை உடையவள். தேன் மணக்கும் கூந்தலை உடையவள். தோள் நிறைய அணிகலன்களைப் பூண்டவள். குவளைமலர் போன்ற கண்ணை உடையவள்.

**அகநானூறு - 174.**

**திணை - முல்லை**

**பூக்கோள்**

பாசறையில் இருக்கும் தலைவன் தனிமையில் இல்லத்தில் இருக்கும் தன் மனைவியைப் பற்றி எண்ணுகிறான்.

**"இரு பெரு வேந்தர் மாறு கொள் வியன் களத்து,**

**ஒரு படை கொண்டு, வருபடை பெயர்க்கும்**

**செல்வம் உடையோர்க்கு நின்றன்று விறல்" என,**

**பூக் கோள் ஏய தண்ணுமை விலக்கிச்**

**செல்வேம் ஆதல் அறியாள், முல்லை”**

இருபெரு வேந்தர்கள் தமக்குள் மாறுபாடு கொண்டு போரிடும் களத்தில், ஒரு படையில் நின்று போராடும் காலத்தில், எதிர்த்து வரும் படையைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யும் வீரச்செல்வம் உடையவர் மேல்தான் வெற்றிப்புகழ் நிலைக்கும். இந்த உண்மையை அறிந்து மேற்கொண்டிருப்பவன் நான். மாற்றான் நாட்டைக் கைப்பற்றப் போகிறோம் (பூக்கோள்) என்று தண்ணுமை முழக்கம் கேட்டதும் போருக்குச் செல்வேன் என்பது அவளுக்குத் தெரியாது.

**“நேர் கால் முது கொடி குழைப்ப, நீர் சொரிந்து,**

**காலை வானத்துக் கடுங் குரற் கொண்மூ**

**முழங்குதொறும் கையற்று, ஒடுங்கி, நப் புலந்து,**

**பழங்கண் கொண்ட பசலை மேனியள்,**

**யாங்கு ஆகுவள்கொல் தானே வேங்கை”**

இப்போது நான் போர்ப்பாசறையில் இருக்கிறேன். அவள் இருக்குமிடத்தில் முல்லைகொடி தழைக்கும்படி மழை பொழியும். மழை பொழிய மேகம் முழங்கும். அந்த இடி முழக்கத்தைக் கேட்கும்போதெல்லாம், அன்று பறையொலி கேட்டதும் நான் அவளைப் பிரிந்து வந்துவிட்டதும் அவள் நினைவுக்கு வரும். எனவே இடியொலி கேட்கும்போதெல்லாம் நடுங்குவாள். பசலைநோய்த் துன்பத்துடன் இருக்கும் அவள் என்ன ஆவாளோ?

**“ஊழுறு நறு வீ கடுப்பக் கேழ் கொள,**

**ஆகத்து அரும்பிய மாசு அறு சுணங்கினள்,**

**நல் மணல் வியலிடை நடந்த**

**சில் மெல் ஒதுக்கின், மாஅயோளே?"**

மணமுள்ள மலர்கள் மண்ணில் விழுந்து கிடப்பது போன்று மார்பகத்தில் சுணங்குடன் மணல்வெளியில் மெல்ல அசைந்து வருவாளே, அந்த என் மாயோள் என்ன ஆவாளோ?

**அகநானூறு - 334.**

**திணை - முல்லை**

**மதுரைக் கூத்தனார் பாடல்**

**"ஓடா நல் ஏற்று உரிவை தைஇய**

**ஆடு கொள் முரசம் இழுமென முழங்க,**

**நாடு திறை கொண்டனம் ஆயின் பாக!**

**பாடு இமிழ் கடலின் எழுந்த சும்மையொடு**

**பெருங் களிற்றுத் தடக் கை புரையக் கால் வீழ்த்து,**

**இரும் பிடித் தொழுதியின் ஈண்டுவன குழீஇ,**

**வணங்கு இறை மகளிர் அயர்ந்தனர் ஆடும்**

**கழங்கு உறழ் ஆலியொடு கதழ் உறை சிதறி,**

**பெயல் தொடங்கின்றால், வானம்; வானின்"**

பாக! பின்வாங்காமல் (புலியோடு) போரிட்ட ஆண் விலங்கின் (ஆண்யானையின்) தோல் போர்த்திய நம் வெற்றி முரசை 'இழும்' என்னும் இடைவிடா ஓசையுடன் முழக்கிப் பகைநாட்டு அரசர்கள் கொடுத்த திறையைப் பெற்றுக்கொண்டோம். கடலலை முழக்கத்தோடு தானும் சேர்ந்து முழங்கும் மேகமானது, யானைக் கூட்டம் போல ஒன்று கூடி அவற்றின் கைகள் போல மழைக்காலை இறக்கி, மகளிர் விளையாடும் கழங்கு போல ஆலங்கட்டிகள் (ஆலி) சிதறும்படி மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

**"வயங்கு சிறை அன்னத்து நிரை பறை கடுப்ப,**

**நால்கு உடன் பூண்ட கால் நவில் புரவிக்**

**கொடிஞ்சி நெடுந் தேர் கடும் பரி தவிராது,**

**இன மயில் அகவும் கார் கொள் வியன் புனத்து,**

**நோன் சூட்டு ஆழி ஈர் நிலம் துமிப்ப,**

**ஈண்டே காணக் கடவுமதி பூங் கேழ்ப்**

**பொலிவன அமர்த்த உண்கண்,**

**ஒலி பல் கூந்தல் ஆய் சிறு நுதலே!"**

வெண்ணிறம் (வால் < வானின் = வெண்மை "வாலறிவன்") கொண்டு விளங்கும் அன்னத்தின் சிறகு போன்ற நிறம் கொண்டதும் தாவும் கால்நடையில் வல்லதுமான நான்கு (நால்கு) குதிரைகளைக் கொடித்தளம் (கொடிஞ்சி) கொண்ட

தேரில் பூட்டு. அவை கால் பரிந்து ஓடும் ஓட்டம் தப்பாமல் ஓடட்டும். மயில்கள் கூவும் கார்காலத்தில், இரும்புக் கட்டுப் போட்ட தேர்ச் சக்கரம் ஈர நிலத்தை அறுத்துக்கொண்டு பாயும்படி ஓடட்டும். தழைத்த கூந்தலுக்கு இடையே தோன்றும் முகத்தில் (நுதல் – ஆகுபெயர்) பூவைப் போல் (குவளைப் பூவைப் போல்) பொலியும் கண்ணோடு காத்திருக்கும் என் மனைவியை இப்பொழுதே நான் காணவேண்டும்.

**அகநானூறு - 369.**

**திணை - பாலை**

**நக்கீரர் பாடல்**

**செவிலித்தாய் இவ்வாறு சொல்லிப் புலம்புகிறாள்.**

**“கண்டிசின் மகளே! கெழீஇ இயைவெனை:**

**ஒண் தொடி செறித்த முன்கை ஊழ் கொள்பு,**

**மங்கையர் பல பாராட்ட, செந் தார்க்**

**கிள்ளையும் தீம் பால் உண்ணா; மயில் இயல்**

**சேயிழை மகளிர் ஆயமும் அயரா;**

**தாழியும் மலர் பல அணியா; கேழ் கொளக்**

**காழ் புனைந்து இயற்றிய வனப்பு அமை நோன் சுவர்ப்**

**பாவையும் பலி எனப் பெறாஅ; நோய் பொர,**

**இவை கண்டு, இனைவதன் தலையும், நினைவிலேன்,"**

மகளே! என் நிலைமையை எண்ணிப் பார். வளையல் அணியந்த மகளிர் முறை முறையாக வந்து உன்னைப் பாராட்டுவர். அவர்கள் இப்போது தவிக்கின்றனர். நீ ஊட்டாததால் நீ வளர்த்த கிளி பால் உண்ண மறுக்கிறது. மயில் போல் நடக்கும் உன் தோழிமாரும் விளையாடவில்லை. நீ நீர் ஊற்றாததால் நீ தாழியில் வளர்த்த செடிகளும் பூக்கவில்லை. அழகு தவழ வயிரம் பதித்து வைதிருக்கும் உன் சுவர் ஓவியத் தெய்வத்துக்கும் படையல் செய்யப்படவில்லை. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நான் வருந்திக்கொண்டிருக்கிறேன். அத்துடன் பழைய நினைவுகள் பல என் நினைவுக்குச் சரியாக வரவில்லை.

**"கொடியோள் முன்னியது உணரேன், ''தொடியோய்!**

**இன்று நின் ஒலி குரல் மண்ணல்'' என்றதற்கு,**

**எற் புலந்து அழிந்தனள் ஆகி, தற் தகக்"**

கொடியவள் ஆகிவிட்ட நீ நினைத்திருப்பதை அப்போது உணராமல் போய்விட்டேன். வளையல் அணிந்தவளே! "இன்று நீ தலை முழுகும் நாள்" என்றேன். (வீட்டு விலக்காகியபின்னர் நீராடவேண்டிய நாள் – என்றேன். அவள் தன்னைத் தாய் தலைமுழுகப் போகும் நாள் என்று தாய் குறிப்பிடுவதாக நினைத்துக்கொண்டு) சினந்து வருந்தினாய்.

**"கடல்அம் தானை கை வண் சோழர்,**

**கெடல் அரு நல் இசை உறந்தை அன்ன,**

**நிதியுடை நல் நகர்ப் புதுவது புனைந்து,**

**தமர் மணன் அயரவும் ஒல்லாள், கவர்முதல்”**

கடல் போல் பெரும்படையும், கைவளக் கொடையும் கொண்ட சோழர் போல் உன் பெற்றோர் நிதியம் படைத்தவர். அவர்கள் தம் இல்லத்தைப் புதுமையாக்கி உறவினர் சூழத் தம் பெருமைக்குத் தக்கவாறு திருமணம் செய்துவைக்க நீ விட்டுத் தரவில்லை.

**“ஓமை நீடிய உலவை நீள் இடை,**

**மணி அணி பலகை, மாக் காழ் நெடு வேல்,**

**துணிவுடை உள்ளமொடு துதைந்த முன்பின்**

**அறியாத் தேஎத்து அருஞ் சுரம் மடுத்த**

**சிறியோற்கு ஒத்த என் பெரு மடத் தகுவி,”**

கிளைகளுடன் ஓமை மரம் காய்ந்து கிடக்கும் நீண்ட வழியில் மணி கட்டிய பலகையுடன் வேல் நடப்பட்டிருக்கும் வழியில், துணிவோடு கல் நெஞ்சத்துடன் நீ அறியாத நாட்டுக்கு, வலிமை மிக்க உன் காதலனுக்கு ஒத்தவளாக, தகைமை இன்றி உன்னை அழைத்துச் செல்லும் சிறுமைக் குணம் படைத்தவனுக்கு ஒத்தவளாகச் சென்றுவிட்டாய். இதுதான் உன் மடமைத் தகுதி.

**"சிறப்பும் சீரும் இன்றி, சீறூர்**

**நல்கூர் பெண்டின் புல் வேய் குரம்பை**

**ஓர் ஆ யாத்த ஒரு தூண் முன்றில்**

**ஏதில் வறு மனைச் சிலம்பு உடன் கழீஇ,**

**மேயினள்கொல்?" என நோவல் யானே"**

சீரும் சிறப்பும் இல்லாத அவன் மனை. ஏழைப் பெண்கள் வாழும் புல் வேய்ந்த குடிசை. அதன் முற்றத்துத் தூணில் ஒரே ஒரு பசு மட்டும் கட்டியிருக்கும். ஏதுமில்லாது வறுமையில் வாடும் அந்த மனையில் சிலம்பைக் கழற்றி வைக்கும் திருமணம் நடப்பதை என் மகள் விரும்பினாள் போலும். இதனை எண்ணி நான் வருந்துகிறேன். செவிலித்தாய் இவ்வாறு சொல்லிப் புலம்புகிறாள்.

**வினாக்கள்.**

1. ஐங்குறுநூறு வேழப்பத்து பாடல் தரும் செய்திகளை விளக்குக.
2. ஐங்குறுநூறு மஞ்ஞைப் பத்து பாடலை விளக்குக.
3. அகநானூற்றில் முல்லைத் திணைப் பாடலை விளக்குக.
4. அகநானூறு பாலைத்திணைப் பாடலை விளக்குக.
5. அகநானூறு முல்லைத்திணைப் பாடல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

## அலகு - 4

## கலித்தொகை

கலித்தொகை என்பது சங்ககால தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாகும். கலி என்பது வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி ஆகிய நால்வகைப் பாக்களுள் ஒன்றாகிய கலிப்பாவுக்கு இலக்கியமாகத் திகழும் நூல் இது ஒன்றே. பல புலவர்களின் பாடல்கள் அடங்கிய தொகுப்பு நூலான கலித்தொகையில் ஓசை இனிமையும், தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் சிறப்பான அமைப்புகளால் அமைந்த கலிப்பாவினால் பாடப்பட்ட 150 பாடல்கள் உள்ளன.

அகப்பொருள் துறை பாட ஏற்ற யாப்பு வடிவங்களாக கலிப்பாவையும் பரிபாடலையும் தொல்காப்பியர் கூறுகிறார். துள்ளலோசையால் பாடப்பட்டு பாவகையால் பெயர்பெற்ற நூல் கலித்தொகை ஆகும். பிற அகத்திணை நூல்கள் எடுத்துரைக்காத கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல் ஆகியவை கலித்தொகையில் மட்டுமே இடம் பெறுகின்றன. கலித்தொகை காதலர்தம் அகத்தொகை எனவும் கூறலாம். இப்பாடல்களின் மூலம் பண்டைக் கால ஒழுக்க வழக்கங்கள், நிகழ்ச்சிகள், மரபுகள், காலத்தின் தன்மை, நல்லவர் தீயவர் பண்புகள்,

விலங்குகள், பறவைகள், மரங்கள், செடி கொடிகளின் இயல்புகள் ஆகியனவற்றை அறிந்து கொள்ளலாம்.

**கலித்தொகையின் உருவம்:**

தினை – அகத்திணை

பாவகை – கலிப்பா

பாடல்கள் – 150

அடி எல்லை – 11 – 80

பாடியவரின் எண்ணிக்கை – 5

**பெயர்க்காரணம்:**

கலிப்பா வகையால் பாடப்பெற்ற ஒரே தொகை நூல் இதுவே.

**வேறு பெயர்கள்:**

கலி

குறுங்கலி

கற்றறிந்தோர் ஏத்தும் கலி

கல்விவலார் கண்ட கலி

அகப்பாடல் இலக்கியம்

தொகுப்பு, உரை, பதிப்பு:

இந்த நூலை தொகுத்தவர்: நல்லந்துவனார்

இந்த நூலை தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை.

இந்நூலின் முதலில் உள்ள கடவுள் வாழ்த்தையும் இறுதியில் உள்ள நெய்தற்கலியையும் நல்லந்துவனாரே பாடி நூல் முழுவதையும் தொகுத்தார் என்பார் நச்சினார்கினியர். இந்த நூல் முழுமைக்கும் நச்சினார்கினியர் உரை உள்ளது. இந்நூலை முதலில் பதிப்பித்தவர்: சி. வை. தாமோதரம்பிள்ளை.

**கடவுள் வாழ்த்து:**

இந்த நூலில் கடவுள் வாழ்த்தை பாடியவர்: பாரதம் பாடிய பெருந்தேவனார்

கடவுள் வாழ்த்தில் குறிப்பிடும் தெய்வம்: சிவன்.

**கலித்தொகை நூல் பாடியவர்கள்:**

பாலை திணை பாடியவர்: பெருங்கடுங்கோண் (35 பாடல்கள்)

மருதம் திணை பாடியவர்: மருதம் இளநாகனார் (35 பாடல்கள்)

நெய்தல் திணை பாடியவர்: நல்லந்துவனார் (33 பாடல்கள்)

குறிஞ்சி திணை பாடியவர்: கபிலர் (29 பாடல்கள்)

முல்லை தினை பாடியவர்: சோழன் நல்லுருத்திரன் (17 பாடல்கள்)

**கலித்தொகை - பாலைக் கலி - 5**

**பாடியவர் – பாலைபாடிய பெருங்கடுங்கோ**

**பாடல் – சொல் பிரிப்புப் பதிவு**

**திணை - பாலை**

**கி.மு. காலத்துப் பாடல்**

**தோழி கூற்று**

**“பாஅல் அம் செவிப் பணைத் தாள் மா நிரை**
**மாஅல் யானையொடு மறவர் மயங்கித்**
**தூறு அதர்பட்ட ஆறு மயங்கு அருஞ் சுரம்**
**இறந்து, நீர் செய்யும் பொருளினும், யாம் உமக்குச்**
**சிறந்தனம் ஆதல் அறிந்தனிர்ஆயின்,”**

மதப் - பால் ஒழுகும் காதுகளையும், பருத்த கால்களையும் கொண்ட மிகப்பெரிய யானைகளை மறக்குடி மக்கள் ஏமாற்றி [மயக்கி]ப் புதர்த் தூறுகள் நிறைந்த வழியில் ஓட்டிச் செல்லும் வழியில் செல்லவேண்டும். அப்படிப்பட்ட வழியில் சென்று நீர் தேடிவரும் பொருளைக் காட்டிலும் உமக்கு நாங்கள் சிறந்தவர்கள் என்பதை அறிந்துகொள்க.

அறிந்துகொண்டால்,

**நீள் இரு முந்நீர் வளி கலன் வௌவலின்**
**ஆள்வினைக்கு அழிந்தோர் போறல் அல்லதைக்,**
**கேள் பெருந் தகையோடு எவன் பல மொழிகுவம்?**
**நாளும் கோள் மீன் தகைத்தலும் தகைமே,**

**கல்லெனக் கவின் பெற்ற விழவு ஆற்றுப்படுத்த பின்,**
**புல்லென்ற களம் போலப் புலம்பு கொண்டு, அமைவாளோ?**

வீசும் காற்று பாய்மரங்களை வீழ்த்தியதால் அதில் ஏறிப் பொருளீட்டச் சென்றவர் அழிவது போல அழிய வேண்டியதல்லை. நண்பராகிய [கேள்] பெருந்தகை உனக்குப் பலப்பல சொல்லவேண்டியது இல்லை. திருமணம் செய்யும் நாள், கோள், மீன் (நட்சத்திரம்) ஆகியவை கணித்துத் தக்கன செய்க. ஊர்த்திருவிழா முடிந்து அதனை வழியனுப்பிய [ஆற்றுப்படுத்திய] பின்னர் ஊரே பொலிவற்றுக் கிடப்பது போல இவள் பொலிவிழந்து தனிமை பெற்று அமைதியாக வாழ்ந்துகொண்டிருப்பாளோ?

**ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடு போல்,**
**பாழ்பட்ட முகத்தோடு, பைதல் கொண்டு, அமைவாளோ?**
**ஓர் இரா வைகலுள், தாமரைப் பொய்கையுள்**
**நீர் நீத்த மலர் போல, நீ நீப்பின், வாழ்வாளோ?**
**எனவாங்கு,**

நாட்டை ஆள்பவர் கலக்கும்போது நாடே அலைக்கலைவது போல, இவள் தன் பாழ் பட்ட முகத்தோடு துன்பத்துடன் வாழ விரும்புவாளா? ஒரே இரவில் நீரெல்லாம் வடிந்துபோன குளத்தில் கிடக்கும் தாமரைப் பூ போல, நீ விட்டுவிட்டுப் போன பின்னர் உயிருடன் வாழ்வாளோ? என இப்படி இருந்தால்.

**பொய்ந் நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு,**

**எந் நாளோ, நெடுந் தகாய்! நீ செல்வது,**

**அந் நாள் கொண்டு இறக்கும், இவள் அரும் பெறல் உயிரே.**

பிரியமாட்டேன் என்று முன்பு பொய் சொல்லியிருக்கிறாய். இவளைக் காப்பாற்றுவதை விட்டுவிட்டு எந்த நாளில் நீ பிரிகிறாயோ அந்த நாளிலேயே இவள் இறந்துவிடுவாள். முருகன் போன்ற நெடுந்தகையே! இதனை உணர்ந்துகொள்.

**கலித்தொகை - பாலைக் கலி - 9**

**பாடியவர் – பாலைபாடிய பெருங்கடுங்கோ**

**பாடல் – சொல் பிரிப்புப் பதிவு**

**திணை - பாலை**

**கி.மு. காலத்துப் பாடல்**

காதலனுடன் செல்லும் தன் மகளைச் செவிலித்தாய் தேடிக்கொண்டு செல்கிறாள். வழியில் வரும் அந்தணரிடன் கண்டீரோ என வினவுகிறாள். அவர்கள் அவளுக்கு அறிவுரை கூறுகின்றனர்.

**எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடை நீழல்,**

**உறித் தாழ்ந்த கரகமும், உரை சான்ற முக்கோலும்,**

**நெறிப்படச் சுவல் அசைஇ, வேறு ஓரா நெஞ்சத்துக்**

**குறிப்பு ஏவல் செயல் மாலைக் கொளை நடை அந்தணீர்!-**

**வெவ் இடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர்; இவ் இடை,**

என் மகள் ஒருத்தியும், பிறள் மகன் ஒருவனும்,

தம்முள்ளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்;

அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!'

'காணேம் அல்லேம்; கண்டனம், கடத்திடை;

ஆண் எழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய

மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்;

பல உறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,

மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்?

நினையுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

சீர் கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை,

நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்?

தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

ஏழ் புணர் இன் இசை முரல்பவர்க்கு அல்லதை,

யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம் என் செய்யும்?

சூழுங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!

எனவாங்கு,

**இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்;**

**சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;**

**அறம் தலைபிரியா ஆறும் மற்று அதுவே.**

**-- பாலை பாடிய சேரமான் பெருங்கடுங்கோ**

தலைவி, தான் விரும்பிய தலைவனுடன் உடன்போக்கு (ஓடிப்போதல்) நிகழ்த்திவிட்டாள். அவர்களைத்தேடி தலைவியின் செவிலித்தாய் செல்கிறாள். அவ்வாறு உடன்போக்கு நிகழ்த்துவோர் பாலைநிலத்திற்குச்செல்வர். பாலைநிலவழியே கள்வர்களும் முக்கோற்பகவர்களும் (துறவிகளும்) செல்வர். தலைவியை தேடிவரும் செலிவித்தாய் எதிர்ப்படும் முக்கோற்பகவரிடம் தம்மகளைப்பற்றி வினவுவதாக அமைந்துள்ளது இப்பாட்டு. வெயிலில் நிழலுக்காக குடை பிடித்தும், நீர்க்கரகமும், கையிலே முக்கோலையும் பிடித்துக்கொண்டுவரும் துறவிகளே, "என் மகள் ஒருத்தியும், பிறளின் மகன் ஒருவனும் தங்களுக்குள் காதல்கொண்டவர்கள். அப்படிப்பட்ட இருவரை இவ்வழியே காண்டீர்களா பெருமானே?" துறவி சொல்கிறார், "காணாமலில்லை. கண்டோம். ஆண் என்பதற்கே உரிய அழகான ஒருவனோடு, சிறந்த அணிகலன்களை அணிந்தபெண்ணின் தாய் நீரே போலும்".

"மலையில் இருக்கும் ஆரம்(சாந்து, சந்தனம்), மலையிலே பிறந்தாலும், அந்த ஆரத்தால் மலைக்கு என்ன பயன்? அதை அரைத்து நறுமணம்வீச பூசிக்கொள்பவர்க்கு அல்லவா சந்தனம் உரிமையுடையது. அப்படி நினைத்தால்,

உம்மகள் உங்களுக்கு அத்தகையவளே. கடலில் பிறக்கும் முத்து, அதை அணிந்துகொள்பவர்களுக்கு அல்லது, கடலிலே பிறந்தாலும், அந்த முத்தால் கடலுக்கு என்ன பயன்? அப்படித்தேர்ந்தால், உம்மகள் உங்களுக்கு அத்தகையவளே. ஏழிசையானது அதைக்கேட்டு இன்புறுபவர்களுக்கன்றி, அவ்வேழிசை யாழிலே பிறந்தாலும் அந்த யாழுக்கு அவ்வேழிசையால் என்ன பயன்? அப்படிப்பார்த்தால், உம்மகள் உங்களுக்கும் அத்தகையவளே. அதனால், நீங்கள் துன்பம் கொள்ளாதீர். உம்மகள் அவள் விரும்பிய சிறந்த ஆண்மகனோடே சென்றாள். அவ்வுடன்போக்கு அறமே. அவர்களை வாழ்வாங்கு வாழ்கவென வாழ்த்தியனுப்பினோம் நாங்கள். நீர் துன்பப்படாது வீடு திரும்புக." என்று அறங்கூறியனுப்பினர்.

**கலித்தொகை: 43**

**குறிஞ்சிக் கலி 7 - தோழி கூற்று**

**பாடியவர் – கபிலர்**

**திணை - குறிஞ்சி**

திருமணக் காலம் தள்ளிப் போய்க்கொண்டிருந்தது. தலைவியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. வருந்தினாள். முருகன் பெருமையைப் பாடுபவர் போலத் தலைவனை உள்ளத்தில் கொண்டு தலைவியும், தோழியும் வள்ளைப்பாட்டுப் பாடினர். அவனைப் பாடும்போது, அவனுடன் உறவு கொண்டது போன்ற உணர்வில் தலைவி விம்மிதம் கொண்டு மகிழ்கிறாள்.

**தோழி வள்ளைப் பாட்டுப் பாடத் தலைவியை அழைத்தல்**

**வேங்கை தொலைத்த வெறி பொறி வாரணத்து**

**ஏந்து மருப்பின், இன வண்டு இமிர்பு ஊதும்**

**சாந்த மரத்தின், இயன்ற உலக்கையால்,**

**ஐவன வெண் நெல் அறை உரலுள் பெய்து, இருவாம்,**

**ஐயனை ஏத்துவாம் போல, அணிபெற்ற**

**மை படு சென்னிப் பய மலை நாடனை,**

**தையலாய்! பாடுவாம், நாம்**

வேங்கைப் புலியைத் துரத்திய யானையின் கொம்பினை ஒருவர் உலக்கையாகக் கொள்வோம். பொறிகளை உடைய வண்டுகள் மொய்க்கும் சந்தன மரத்தாலான உலக்கையை மற்றொருவர் பயன்படுத்துவோம். பாறை உரலில் இட்டு ஐவன நெல்லைக் குற்றுவோம். முருகனையும், முருகன் போன்ற உன் காதலன் தலைவனையும் வாழ்த்துவோம். அவன் மேகம் தவழும் முகடுகளை உடைய மலையின் தலைவன். தையலாய் நாம் பாடுவோம்.

**இயல்பைப் போற்றும் தோழியின் பாடல்**

**தகையவர் கைச் செறித்த தாள்போல, காந்தள்**

**முகையின்மேல் தும்பி இருக்கும் பகை எனின்,**

**கூற்றம் வரினும் தொலையான், தன் நட்டார்க்குத்**

**தோற்றலை நாணாதோன் குன்று**

தகைமை உடையவர் கையில் இருக்கும் 'தாள்' என்னும் மோதிரம் போலக் காந்தள் மொட்டில் வண்டு அமர்ந்திருக்கும் நாட்டை உடையவன் நம் தலைவன்.

பகை என்றால், கூற்றுவனே எதிர்த்து நின்றாலும் தொலைப்பவன் அவன். தன் நண்பர்களிடம் தோற்றுப்போவதற்கு நாணம் கொள்ளாதவன் அவன்.

**தலைவியைப் பாடுமாறு தோழி வேண்டுதல்**

**வெருள்பு உடன் நோக்கி, வியல் அறை யூகம்,**
**இருள் தூங்கு இறு வரை ஊர்பு இழிபு ஆடும்**
**வருடைமான் குழவிய வள மலை நாடனைத்**
**தெருள தெரியிழாய்! நீ ஒன்று பாடித்தை**

மருண்டு பார்த்துக்கொண்டு அகன்ற பாறைமீது 'யூகம்' என்னும் குரங்கு இருண்ட மலைக் காட்டில் ஏறி இறங்கி விளையாடும். வருடை-மான் குட்டிகளும் விளையாடும். இப்படி விளையாடும் குன்ற நாட்டின் தலைவன் அவன். அவனை விளங்கிக்கொள்ளுமாறு நீ ஒன்று பாடுக.

**தலைவி பாடுகிறாள்**

**நுண் பொறி மான் செவி போல, வெதிர் முளைக்**
**கண் பொதி பாளை கழன்று உகும் பண்பிற்றே**
**மாறு கொண்டு ஆற்றார்எனினும், பிறர் குற்றம்**
**கூறுதல் தேற்றாதோன் குன்று**

புள்ளிமான் காதுபோல் நிலத்தில் முளைக்கும் மூங்கிலின் பாளை விரியும் பாங்கினைக் கொண்டது அவன் மலை. தன்னை எதிர்த்து நிற்க மாட்டாதவர்

என்றாலும், அவரது குற்றத்தைக் கூறத் தெரியாதவன் அதன் தலைவனான நம் தலைவன்.

**தலைவன் இயல்பை மறுத்துப் பாடுமாறு தோழி தலைவியை வேசடுகிறாள்.**

**புணர் நிலை வளகின் குளகு அமர்ந்து உண்ட**

**புணர் மருப்பு எழில் கொண்ட வரை புரை செலவின்**

**வயங்கு எழில் யானைப் பய மலை நாடனை**

**மணம் நாறு கதுப்பினாய்! மறுத்து ஒன்று பாடித்தை**

நெருக்கமாகத் தழைத்திருக்கும் ‘வளகு’ என்னும் செடியின் தழைகளை விரும்பி உண்ட இணை-தந்தம் கொண்ட அழகிய ஆண்-யானை மலை போன்ற தோற்றம் கொண்டதாகப் பெருமிதத்துடன் நடக்கும் மலையின் நாடன் அவன். மணக்கும் கூந்தலை உடையவளே அவன் இயல்பினை மறுத்து ஒன்று பாடுக.

**தலைவி பாடுகிறாள்.**

**கடுங் கண் உழுவை அடி போல வாழைக்**

**கொடுங் காய் குலைதொறூஉம் தூங்கும் இடும்பையால்**

**இன்மை உரைத்தார்க்கு அது நிறைக்கல் ஆற்றாக்கால்,**

**தன் மெய் துறப்பான் மலை**

**என ஆங்குக்**

சினம் கொண உழுவைப் புலியின் காலடி போல வாழைக்காய்ச் சீப்பு சீப்பாகக் காய்த்திருக்கும் நாட்டின் தலைவன் அவன். துன்பத்தில் உழல்பவர் தன்னிடம் வந்து சொல்லும்போது அதனைப் போக்க முடியாவிட்டால், தன் உயிரையே மாய்த்துக்கொவள்ளும் பண்பினை உடையவன் அவன்.

**தோழி சொல்லி முடிக்கிறாள்**.

**கூடி அவர் திறம் பாட, என் தோழிக்கு**
**வாடிய மென் தோளும் வீங்கின**
**ஆடு அமை வெற்பன் அளித்தக்கால் போன்றே**

என்றெல்லாம் நானும் தலைவியும் கூடி அவனுடைய திறப்பாட்டைப் பாடும்போது, மூங்கில் மலைக் காட்டின் தலைவனாகிய அவளது காதலன் அவளுக்குத் தலையளி செய்தது போன்று அவள் மார்பகம் பெருமிதத்தில் விம்மிப் பருத்தது.

**கலித்தொகை 51**

**பாடியவர்** - கபிலர்

**திணை** - குறிஞ்சி

**துறை** - “புகாஅக்காலைப் புக்கு எதிர்ப்பட்டுழி பகாவிருந்தின் பகுதிக்கண்” தலைவி தோழிக்குக் கூறியது.

**துறை விளக்கம்**

தலைவன் தலைவியைக் காண வேண்டும் என ஆசையுற்றான். அதனால் தான் புகுதற்குத் தகுதியில்லாத பகற்பொழுதில் தலைவன், உணவு நேரத்தில் தலைவியின் வீட்டுக்குள் புகுதல். அவ்வாறு புகுந்தவனைத் தலைவி காட்டிக்கொடுக்காமல் தாயின்முன் சமாளித்து ஏற்றுக்கொள்ளல்.

**புகாஅக்காலை:** உணவு உண்ணும் நேரம். பகல் சாப்பிடும் நேரம் பார்த்து ஒரு வீட்டிற்குள் புகுதல்.

**பகாஅ விருந்து** - ஆனால் தலைவன் விலக்கப்படாத விருந்தாக தலைவி (காதலி) ஏற்றுக் கொள்கிறாள்.

**பாடல்**

**சுடர்த்தொடீஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்**

**மணற் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய**

**கோதை பரிந்து, வரி பந்து கொண்டு ஓடி,**

**நோ தக்க செய்யும் சிறு, பட்டி, மேல் ஓர் நாள்,**

**அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே!**

**உண்ணு நீர் வேட்டேன்' என வந்தாற்கு, அன்னை,**

**'அடர் பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்!**

**உண்ணு நீர் ஊட்டி வா' என்றாள்: என, யானும்**

**தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை**
**வளை முன்கை பற்றி நலிய, தெருமந்திட்டு,**
**'அன்னாய்! இவனொருவன் செய்தது காண்' என்றேனா,**
**அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்,**
**'உண்ணு நீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்**
**தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்**
**கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி, நகைக் கூட்டம்**
**செய்தான், அக் கள்வன் மகன்.**

ஒளிமிக்க வளையல் அணிந்த தோழியே! நான் சொல்வதைக் கேள். தெருவில் நாம் மணலால் செய்த சிறுவீட்டைத் தன்காலால் கலைத்தும், நாம் கூந்தலில் சூடிய மலர்மாலையை அறுத்தும், வரியை உடைய நாம் விளையாடிக் கொண்டிருந்த பந்தைப் பறித்துக் கொண்டு ஓடியும் நாம் வருந்தத் தக்க செயல்களைச் செய்யும் சிறியவனாகக் கட்டுக்கடங்காமல் திரிந்தான். முன்பு ஒருநாள் தாயும் (அம்மாவும்) நானும் வீட்டில் இருந்தபோது வந்தான். வீட்டின் வாசலில் நின்று, “வீட்டில் இருப்பவர்களே! உண்ணும் நீரை உண்ண விரும்பினேன்” என்று குரல் கொடுத்தான். அவ்வாறு வந்து கேட்டவனுக்கு என் தாய், என்னிடம், “ஒளி வீசும் அணிகலன்களை அணிந்தவளே. தங்கத்தாலான குவளையில் கொண்டு போய் நீர் கொடுத்து வா” என்றாள். அவ்வாறு தாய் சொன்னதால் வந்தவன் சிறு பட்டியாய் இருக்கும் தன்மை அறியாமல் தண்ணீர் கொண்டு

போனேன். நான் சென்றதும் வளையல் அணிந்த முன் கையைப் பிடித்து இழுத்தான். (சிறுபட்டி எனில் பட்டியில் அகப்படாத மாடு போன்றவன் எனப் பொருள்) அதனால் நான் வருந்தி அம்மா என அலறி இவன் செய்த செய்த செயலைப் பார்த்தாயா? என்றேன். அம்மா அலறிக்கொண்டு ஓடி வந்தாள். நான் அவன் செய்த குறும்புச் செயலை மறைத்து, இவன் நீர் குடிக்கும் போது விக்கல் எடுத்து வருந்தினான், அதனால் கத்தினேன்" என்றேன். நான் மறைத்துக் கூறியதை ஏற்று அம்மாவும் அவன் முதுகைப் பலமுறை தடவிக் கொடுத்தாள். அப்போது அக்கள்வன் மகன் (அந்தத் திருடன்) தன் கடைக்கண்ணால் என்னைக் கொல்வது போல் திருட்டுப்பார்வை பார்த்தான். தன் புன்முறுவலால் என்னை மயக்கி என்னுள்ளத்தில் புகுந்தான்" என்று தன் தோழியிடம் தலைவி கூறுகின்றாள்.

கலித்தொகை - மருதக் கலி 80

பரத்தையிடமிருந்து திரும்பி வந்திருக்கும் தன் கணவன் வெளியில் தயங்கி நிற்கும்போது தலைவி தன் மகனிடம் கூறுகிறாள்.

**நயம் தலை மாறுவார் மாறுக; மாறா,**

**கயந் தலை மின்னும் கதிர் விடு முக் காழ்,**

**பயந்த எம் கண் ஆர யாம் காண நல்கி**

**திகழ் ஒளி முத்து அங்கு அரும்பாகத் தைஇப்**

**பவழம் புனைந்த பருதி சுமப்ப,**

**கவழம் அறியா நின் கை புனை வேழம்**

**புரி புனை பூங் கயிற்றின் பைபய வாங்கி,**

**அரி புனை புட்டிலின் ஆங்கண் ஈர்த்து, ஈங்கே**

**வருக! எம் பாக மகன்!**

நயம் தெரிந்து நடந்துகொள்வதிலிருந்து மாறுபவர் மாறிவிட்டுப் போகட்டும். மாறாத என் யானைக் கன்றே! வருக. கதிர் விட்டு மின்னும் மும்மணி மாலை அணிந்திருக்கும் கண்ணே! வருக. என் கண்ணார நடந்து காட்டு. கையில் வேழம் (யானைப் பொம்மை) வைத்திருக்கும் கண்ணே வருக. முத்தை அரும்பாக வைத்துத் தைத்துப் பவழம் பதித்துச் செய்த வேழம் வைத்திருப்பவனே வருக. சோற்றுக் கவளம் அறியாத வேழத்தைக் கையில் வைத்திருப்பவனே வருக. புரி முறுக்கிய கயிற்றில் கட்டி இழுத்துக்கொண்டு வருக. நீ வைத்ததிருக்கும் அம்பறாத் தூணிப் புட்டிலில் கட்டி இழுத்துக்கொண்டு வருக. என் வெல்லக் கட்டியே வருக.

**கிளர் மணி ஆர்ப்ப ஆர்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும்**

**தளர் நடை காண்டல் இனிது; மற்று, இன்னாதே,**

**'உளம்' என்னா நுந்தைமாட்டு எவ்வம் உழப்பார்**

**வளை நெகிழ்பு யாம் காணுங்கால்**

நீ அணிந்திருக்கும் ஒளி திகழும் மணியொலி கேட்கும்படிச் சாய்ந்து சாய்ந்து தளர் நடை போட்டு நீ செல்வதைக் காணும்போது எனக்கு இனிமையாக இருக்கிறது. ஆனால், நெஞ்சமே இல்லாமல் நடந்துகொள்ளும் உன் தந்தையால்

வளையல் கழன்று வேதனைப் படுபவரைக் காணும்போதுதான் துன்பமாக இருக்கிறது.

**ஐய! காமரு நோக்கினை, 'அத்தத்தா' என்னும் நின்**
**தே மொழி கேட்டல் இனிது; மற்று, இன்னாதே,**
**உய்வு இன்றி நுந்தை நலன் உணச் சாஅய்ச் சாஅய்மார்**
**எவ்வ நோய் யாம் காணுங்கால்**

என் ஐயனே! அன்பு ததும்ப நீ பார்க்கிறாய். "அத்தா அத்தா" என்று அழைக்கிறாய். இந்தத் தேன் மொழியைக் கேட்க இன்பமாக இருக்கிறது. ஆனால் உன் தந்தை என்னை உயிருடன் வாழ விடாமல் என் உடல் நலம் சாயச் சாய எனக்குத் துன்பம் தந்துவிட்டு வேறொருத்தியோடு வாழ்கிறாரே அதுதான் துன்பமாக இருக்கிறது.

**ஐய! 'திங்கட் குழவி, வருக!' என, யான் நின்னை**
**அம்புலி காட்டல் இனிது; மற்று, இன்னாதே,**
**நல்காது நுந்தை புறம் மாறப்பட்டவர்**
**அல்குல் வரி யாம் காணுங்கால்**

என் ஐயனே வருக! பிறை நிலாவே என் ஐயனிடம் வருக! என்று நான் அழைத்து உனக்கு அம்புலி காட்டுவது இனிமையாக இருக்கிறது. ஆனால் உன் தந்தை எனக்கு அளி செய்யாமல் புறத்தே ஒருத்தியிடம் மாறுபட்டிருக்கிறார்.

அதனால் என் அல்குல் வரிமடிப்பு வாடுகிறது. இது எனக்குத் துன்பமாக இருக்கிறது.

நிலா காட்டல்

**ஐய! எம் காதில் கனங் குழை வாங்கி, பெயர்தொறும்,**
**போது இல் வறுங் கூந்தல், கொள்வதை, நின்னை யாம்**
**ஏதிலார் கண் சாய நுந்தை வியல் மார்பில்**
**தாது தேர் வண்டின் கிளை பட, தைஇய**
**கோதை பரிபு ஆட; காண்கும்**

என் ஐயனே! நீ என் காதில் உள்ள குழையை விளையாட்டாகப் பறித்துக்கொண்டு ஓடுகிறாய். அப்போதெல்லாம் என் கூந்தல் பூ இல்லாமல் வெறுங்கூந்தலாக இருப்பதைப் பார். உன்னை எந்த உறவுமில்லாதவர் கண்ணெடுத்துப் பார்க்கின்றனர். உன் தந்தை மார்பில் உள்ள மாலையில் வண்டுச் சுற்றம் மோதுகிறது. இவற்றையே நான் காணவேண்டியுள்ளது. இப்படிஎன் நிலைமை ஆய்விட்டதே!

## கலித்தொகை

### கலித்தொகை – மருதக் கலி

பாடியவர் – மருதன் இளநாகனார்

திணை - மருதம்

கி.மு. காலத்துப் பாடல்

தலைவி கூற்று

தலைவி தன் புதல்வனுடன் சென்ற தோழி நீட்டித்து வந்தமை பற்றி வினாவுதல்

**பெருந் திரு நிலைஇய வீங்கு சோற்று அகல் மனை,**

**பொருந்து நோன் கதவு ஒற்றிப் புலம்பி யாம் உலமர,**

**இளையவர் தழூஉ ஆடும் எக்கர் வாய் வியன் தெருவின்**

**விளையாட்டிக்கொண்டு வரற்கு எனச் சென்றாய்,**

**உளைவு இலை;**

**ஊட்டலென் தீம் பால் பெருகும் அளவெல்லாம்**

**நீட்டித்த காரணம் என்?**

பெருஞ் செல்வமும் உண்ண முடியாமல் வீங்கிக் கிடக்கும் உணவுப் பொருள்களும் மிக்க அகன்ற வளமனையில் பொருத்தப்பட்டிருக்கும் கதவினைக் கொஞ்சமாகத் திறந்து எட்டிப் பார்த்துக்கொண்டே புலம்பியவண்ணம் நான் துன்புற்றுக் கொண்டிருக்கிறேன். இளம் பெண்கள் தெருவில் ‘தழூஉ’ விளையாடிக் கொண்டிருக்கின்றனர். என் மகனுக்கு விளையாட்டுக் காட்டி அழைத்துக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிச்சென்றாய். கொஞ்சமும் வருத்தம் தெரியாதவள். என் மகனுக்குப் பால் ஊட்டாமல் பெருக்கெடுத்து வழியும் வரையில் காலம் நீட்டித்த காரணம் என்ன? - தலைவி தன் தோழியைக் கேட்டாள்.

தோழியின் மறுமொழி

**கேட்டீ**

**பெரு மடற் பெண்ணைப் பிணர்த் தோட்டுப் பைங் குரும்பைக்**

**குட வாய்க் கொடிப் பின்னல் வாங்கி, தளரும்**

**பெரு மணித் திண் தேர்க் குறுமக்கள் நாப்பண்,**

**அகல் நகர் மீள்தருவானாக, புரி ஞெகிழ்பு**

தோழி விளக்குகிறாள் - சொல்கிறேன், கேள். பெரிய மடல்களை உடைய தென்னம்பாளை போல் சிரிப்பும் வளைந்த வாய் கொண்ட கொடிப் போன்ற பின்னலும் கொண்ட சிறுவர்கள் பெரிய மணி மாட்டிய வலிமையான தேரை உருட்டிக்கொண்டு விளையாடுவோருடன் சேர்ந்து தெருவில் விளையாட விட்டுகொண்டு திருப்பி அழைத்துவந்தேன்.

**நீல நிரைப் போது உறு காற்கு உலைவன போல்,**

**சாலகத்து ஒல்கிய கண்ணர், 'உயர் சீர்த்தி**

**ஆல் அமர் செல்வன் அணி சால் மகன் விழாக்**

**கால்கோள்' என்று ஊக்கி, கதுமென நோக்கி,**

**திருந்துஅடி நூபுரம் ஆர்ப்ப இயலி, விருப்பினால்,**

**'கண்ணும், நுதலும், கவுளும், கவவியார்க்கு**

**ஒண்மை எதிரிய அம் கையும், தண் எனச்**

**செய்வன சிறப்பின் சிறப்புச் செய்து, இவ் இரா**

**எம்மொடு சேர்ந்து சென்றீவாயால்; செம்மால்!**

**நலம் புதிது உண்டு உள்ளா நாணிலி செய்த**

**புலம்பு எலாம் தீர்க்குவேம் மன்' என்று இரங்குபு,**

**வேற்று ஆனாத் தாயர் எதிர்கொள்ள, மாற்றாத**

**கள்வனால் தங்கியது அல்லால், கதியாதி,**

**ஒள்ளிழாய்! யான் தீது இலேன்**

நீல மலர் மொட்டு வரிசையாகக் காற்றில் ஆடுவது போல சன்னல் வழியாகக் கண்ணை நுழைத்து இவனைப் பார்த்த மகளிர் சிவபெருமானின் மகன் முருகனுக்கு இன்று காப்புக்கட்டுத் திருவிழா என்று சொல்லிக்கொண்டு விரைந்தோடி வந்து இவனைப் பார்த்தனர். காலில் அணிந்திருக்கும் சிலம்பு ஒலிக்க இவனிடம் வந்தனர். சிலர் இவன் கண்ணைப் பார்த்தனர். சிலர் இவன் நெற்றியைத் தடவினர். சிலர் கன்னத்தில் முத்தமிட்டனர். இவன் அவர்களுக்குத் தன் கையை நீட்டினான். 'தண்' என்று இருந்த இவன் கைகளைத் தொட்டுத் தன் கண்ணில் அவர்கள் ஒற்றிக்கொண்டனர். "இன்று இரவு என்னோடு சேர்ந்திரு செம்மலே" என்றனர். உன் அப்பா என் பெண்மை நலத்தைப் புதிதாக உண்டான். பின் நினைக்காமல் திரும்பிவிட்டான் அந்த நாணம் இல்லாதவன். அவன் எங்களைத் தனிமைப் படுத்திய துன்பத்தையெல்லாம் உன்னைப் பார்த்து ஆறுதல் பெறுவோம்" என்று வருந்திக் கூறினர். அவர்கள் இவனுக்கு வேற்றுத் தாயர். அவர்களை எதிர்கொண்டதால், உன் கணவனாகிய கள்வனால் உன் மகன்

தங்கினானே அல்லாமல், உன் மகனுக்கு வேறு கதி என்ன இருக்கிறது? நான் குற்றமற்றவள் - என்று தோழி சொல்லி முடிக்கிறாள்.

தலைவி தன் புதல்வனைக் கடிந்தும், அப்பொழுது அங்குவந்த தலைவனொடு புலந்தும் கூறுதல்

**எள்ளலான், அம் மென் பணைத் தோள் நுமர் வேய்ந்த கண்ணியோடு**

**எம் இல் வருதியோ? எல்லா! நீ தன் மெய்க்கண்**

**அம் தீம் சொல் நல்லார் அணிந்த கலம் காட்டி,**

**முந்தை இருந்து மகன் செய்த நோய்த்தலை**

**வெந்த புண் வேல் எறிந்தற்றால், வடுவொடு**

**தந்தையும் வந்து நிலை**

விளையாட்டிக்கொண்டு வரற்குச் சேடியரோடு மகற் போக்கிய தலைவி, அவன் நீட்டித்துவந்தவழி, 'தாயார் கண்ணிய நல் அணிப் புதல்வனை, மாயப் பரத்தை உள்ளியவழி,'சிறைப்புறமாகக் கேட்டு வந்த தலைவனைக் கண்டு, அவள் தன்னுள்ளே புலந்தது

**கலித்தொகை முல்லைக் கலி 109**

கலித்தொகை – முல்லைக் கலி

பாடியவர் – நல்லுருத்திரன்

திணை - மருதம்

கி.மு. காலத்துப் பாடல்

வினை வல பாங்கின் தலைவன் கூற்று

**கார் ஆரப் பெய்த கடி கொள் வியன் புலத்துப்**
**பேராது சென்று, பெரும் பதவப் புல் மாந்தி,**
**நீர் ஆர் நிழல குடம்சுட்டு இனத்துள்ளும்,**
**போர் ஆரா ஏற்றின், பொரு நாகு, இளம் பாண்டில்**
**தேர் ஊர, செம்மாந்தது போல், மதைஇனள்**
**பேர் ஊரும் சிற்றூரும் கௌவை எடுப்பவள் போல்,**
**மோரோடு வந்தாள் தகை கண்டை; யாரோடும்**
**சொல்லியாள் அன்றே வனப்பு**

மண் மணக்கும்படிக் கார்மழை நிறைந்து பெய்து இடம் பெயராமல் மேயும் குடம் நிறையப் பால் கறக்கும் பசு இனத்தில் போரிடாமல் சென்ற காளையோடு போரிடும் பசு (நாகு) இளங்காளை இழுக்கும் தேரில் ஊர்ந்து செம்மாப்புடன் வருவது போல மதமதப்புடன் வருகிறாள். பேரூரும் சிற்றூரும் அழகைப் பாராட்டிப் பேசும்படி வருகிறாள். மோர் விற்றுக்கொண்டு வருகிறாள். இவள் அழகை யாரோடும் சொல்லிக்கொள்ளாமல் வருகிறாள்.

**பண்ணித் தமர் தந்து, ஒரு புறம் தைஇய**
**கண்ணி எடுக்கல்லாக் கோடு ஏந்து அகல் அல்குல்**
**புண் இல்லார் புண்ணாக நோக்கும்; முழு மெய்யும்**

**கண்ணளோ? ஆயர் மகள்**

இவளது உறவுக்காரர்கள் தைத்த துணியால் அழகுபடுத்தி மாலை அணிவிக்காமல் இருக்கும் அல்குல் கொண்ட இவள் மனத்தில் புண் இல்லாதவர் புண் படும்படிப் பார்க்கிறாள். இவன் மேனியெல்லாம் என் கண்ணைத் தின்னும் அழகு இவளுக்கு.

**இவள்தான் திருத்தாச் சுமட்டினள், ஏனைத் தோள் வீசி,**
**வரிக் கூழ வட்டி தழீஇ, அரிக் குழை**
**ஆடல் தகையள்; கழுத்தினும் வாலிது**
**நுண்ணிதாத் தோன்றும், நுசுப்பு**
**இடை தெரியா ஏஎர் இருவரும் தத்தம்**
**உடை வனப்பு எல்லாம் இவட்கு ஈத்தார்கொல்லோ?**
**படை இடுவான்மன் கண்டீர், காமன் மடை அடும்**
**பாலொடு கோட்டம் புகின்**

இவள் ஒழுங்கில்லாத சும்மாட்டு கட்டி மோரைச் சுமந்து வருகிறாள். தோளை வீசிக்கொண்டு நடந்து வருகிறாள். கக்கத்திலே கூடை வைத்திருக்கிறாள். இவள் காதுகளில் உள்ள குழை ஆடுகிறது. கழுத்தைக் காட்டிலும் மெலிந்த இடையைப் பெற்றிருக்கிறாள். திருமகள், இரதி ஆகிய அழகுத் தெய்வங்கள் இருவரும் தாம் பெற்றிருக்கும் உடலழகை இவளுக்குத் தந்தார்களோ? இவள்

மடைப்கள்ளிக்குப் பால் தரக் கோயிலுக்கு வருவாளாயின் காமக் கடவுள் காமன் தன் கணைகளைத் தொடுப்பான்.

**இவள் தான், வருந்த நோய் செய்து இறப்பின் அல்லால், மருந்து அல்லள்**

**'யார்க்கும் அணங்காதல் சான்றாள்' என்று, ஊர்ப் பெண்டிர்,**

**'மாங்காய் நறுங் காடி கூட்டுவேம்; யாங்கும்**

**எழு நின் கிளையொடு போக' என்று தத்தம்**

**கொழுநரைப் போகாமல் காத்து, முழு நாளும்,**

**வாயில் அடைப்ப, வரும்**

இவள் பிறரை வருத்திக் காமநோய் உண்டாக்கவே வருகிறாள். காம நோய்க்கு மருந்து ஆகமாட்டாள். தன் சால்பினால் எல்லாரையும் வருத்துபவள். ஊரிலுள்ள பெண்கள் எல்லாரும் "நான் மோர்-மாங்காய் தின்னவேண்டும் (கருவுற்றிருக்கிறேன்) எங்குச் சென்றாலும் உன் சுற்றத்தாரோடு செல்க. (தனியே செல்ல வேண்டாம்)" என்று தம் தம் கணவரை வீட்டின் வாயிலை அடைத்துக் காப்பாற்றிக்கொள்ளும்படி வருகிறாள்.

வினை வல பாங்கின் தலைவியைக் கண்ட வினை வல பாங்கின் தலைவன் 'காமம் சாலா இளமையோள் வயின்,ஏமம் சாலா இடும்பை எய்தி', கூறியது

## கலித்தொகை – முல்லைக் கலி - 115

கலித்தொகை – முல்லைக் கலி

பாடியவர் – நல்லுருத்திரன்

திணை - மருதம்

கி.மு. காலத்துப் பாடல்

தலைவி கூற்றும் தோழி கூற்றும்

**'தோழி! நாம், காணாமை உண்ட கடுங் கள்ளை, மெய் கூர,**

**நாணாது சென்று நடுங்க உரைத்தாங்கு,**

**கரந்ததூஉம் கையொடு கோட்பட்டாம் கண்டாய் நம்**

தலைவி சொல்கிறாள் - தோழி! யாருக்கும் தெரியாமல் கள்ளைக் குடித்த நான் நாணம் இல்லாமல் பிறரிடம் எடுத்துச் சொல்வது போல மறைத்தது தெரியும்படிக் கையும் களவுமாக மாட்டிக்கொண்டேன்.

**புல்லினத்து ஆயர் மகன் சூடி வந்தது ஓர்**

**முல்லை ஒரு காழும் கண்ணியும், மெல்லியால்!**

**கூந்தலுள் பெய்து முடித்தேன்மன்; தோழி! யாய்**

என்மையான இயல்பை உடையவளே! அவன் ஆடு மேய்க்கும் இடையர் மகன். அவன் முல்லைப் பூக் கண்ணிமாலை அணிந்துகொண்டு வந்தான். அதில் ஒரு கெட்டியான கண்ணியை நான் கூந்தலில் வைத்து முடித்துக்கொண்டேன்.

**வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே,**

**அன்னையும் அத்தனும் இல்லரா, யாய் நாண,**

**அன்னை முன் வீழ்ந்தன்று, அப் பூ**

தோழி, கேள். தாய் வெண்ணெய் பூசி வளர்த்த கூந்தல் அது. என் தயந்தையும் தாயும் இல்லத்தில் இருந்தனர். என் தாய் நாணும்படியாக என் தலையில் இருந்த அவன் பூ என் தாய் முன்னர் விழுந்துவிட்டது.

**அதனை வினவலும் செய்யாள், சினவலும் செய்யாள்,**

**நெருப்புக் கை தொட்டவர் போல விதிர்த்திட்டு,**

**நீங்கிப் புறங்கடைப் போயினாள்; யானும், என்**

அந்தப் பூவைப் பார்த்த தாய் என்னை எதுவும் கேட்கவில்லை. நெருப்பைக் கையில் தொட்டவள் போல கையால் நெட்டி முரித்துவிட்டுப் புழக்கடைப் பக்கம் போய்விட்டாள்.

**சாந்து உளர் கூழை முடியா, நிலம் தாழ்ந்த**

**பூங் கரை நீலம் தழீஇ, தளர்பு ஒல்கி,**

**பாங்கு அருங் கானத்து ஒளித்தேன்.' 'அதற்கு, எல்லா!**

**ஈங்கு எவன் அஞ்சுவது?**

நானும் என் மண எண்ணெய் பூசிய கூந்தலை வாரி முடித்துக்கொண்டு, நிலத்தைத் தொடும்படி உடுத்தியிருந்த பூக்கரை போட்ட நீல நிற ஈடையைக்

கையில் தாங்கிக்கொண்டு காட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டேன். அதற்கு, தோழியே, நாம் ஏன் அஞ்சவேண்டும்?

**அஞ்சல் அவன் கண்ணி நீ புனைந்தாய்ஆயின், நமரும்**

**அவன்கண் அடைசூழ்ந்தார், நின்னை; அகன் கண்**

**வரைப்பில் மணல் தாழப் பெய்து, திரைப்பில்**

**வதுவையும் ஈங்கே அயர்ப; அதுவேயாம்,**

**அல்கலும் சூழ்ந்த வினை.'**

அஞ்ச வேண்டாம். நீ அவன் சூடிய கண்ணியை உன் தலையில் அணிந்தாய் ஆயின், நம்மவரும் உன்னை அவனுக்கே திருமணம் செய்து தர எண்ணிக்கொண்டிருக்கின்றனர். வீட்டுப் பரப்பில் புதுமணலைக் கொண்டுவந்து பரப்பிக்கொண்டிருக்கின்றனர். திரை பின்னணியில் திருமணசெ சடங்கும் நிகழ்த்துவர். இதுவே நாள்தோறும் நம் இல்லத்தில் நடந்துகொண்டிருக்கிறது. - தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

**கலித்தொகை – நெய்தல் கலி -130**

கலித்தொகை – நெய்தல் கலி

பாடியவர் – நல்லந்துவனார்

திணை - நெய்தல்

கி.மு. காலத்துப் பாடல்

வாயில்கள் கூற்று

**'நயனும், வாய்மையும், நன்னர் நடுவும்,**

**இவனின் தோன்றிய, இவை' என இரங்க,**

**புரை தவ நாடி, பொய் தபுத்து, இனிது ஆண்ட**

**அரைசனோடு உடன் மாய்ந்த நல் ஊழிச் செல்வம் போல்,**

**நிரை கதிர்க் கனலி பாடொடு பகல் செல,**

**கல்லாது முதிர்ந்தவன் கண் இல்லா நெஞ்சம் போல்,**

**பல் இருள் பரத்தரூஉம் புலம்பு கொள் மருள் மாலை**

நயம், வாய்மை, நடுவுநிலைமை ஆகியவை இவை என நாடி நன்கு ஆராய்ந்து பொய்யை விலக்கி நாட்டை இனிது ஆண்ட அரசனோடு நல்லூழிச் செல்வம் மாண்டுபோனது போல, ஒளிச் செல்வன் கதிரவன் மறையப் பகலும் மறைந்தது. கல்லாது முதிர்ந்தவனின் இரக்கமற்ற நெஞ்சம் போல இருள் பரவிக்கொண்டிருக்கும் மாலைக்காலம்.

**இம் மாலை,**

**ஐயர் அவிர் அழல் எடுப்ப, அரோ, என்**

**கையறு நெஞ்சம் கனன்று தீ மடுக்கும்!**

இந்த மாலை வந்ததும் ஐயர் தீ வளர்த்தனர். அந்தத் தீ எரிவது போல அவர் இல்லாமல் வருந்தும் என் நெஞ்சமும் கனன்று எரிந்துகொண்டிருக்கிறது.

**இம் மாலை,**

**இருங் கழி மா மலர் கூம்ப, அரோ, என்**

**அரும் படர் நெஞ்சம் அழிவொடு கூம்பும்!**

இந்த மாலை வந்ததும் கழியில் உள்ள மலர் கூம்பும். அது போல என் நெஞ்சமும் கூம்பும்.

**இம் மாலை,**

**கோவலர் தீம் குழல் இனைய, அரோ, என்**

**பூ எழில் உண்கண் புலம்பு கொண்டு இனையும்!**

இந்த மாலை வந்ததும் கோவலர் குழல் ஊதுவர். என் நெஞ்சமும் புலம்பும்.

**என ஆங்கு,**

**படு சுடர் மாலையொடு பைதல் நோய் உழப்பாளை,**

**குடி புறங்காத்து ஓம்பும் செங்கோலான் வியன் தானை**

**விடுவழி விடுவழிச் சென்றாங்கு, அவர்**

**தொடுவழித் தொடுவழி நீங்கின்றால் பசப்பே.**

என்றெல்லாம் சொல்லும்படி மாலை வந்ததும் அவள் புலம்பலானாள். குடிமக்களைப் பேணிக் காப்பாற்றும் செங்கால் அரசனின் படை செல்லச் செல்ல மக்கள் துன்பம் நீங்குவது போல அவளது காதலன் திரும்பி வந்து அவளைத் தொடத் தொட அவள் மேனியிலிருந்த பசலை நோய் நீங்கியது.

பிரிவிடை ஆற்றாத தலைவியது ஆற்றாமை தலைவன் வந்து சார்தலின் நீங்கினமை கண்டு, வாயில்கள் தம்முள்ளே கூறியது

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம்.

**கலித்தொகை நெய்தற்கலி - 150**

**தோழி கூற்று**

**அயம் திகழ் நறுங் கொன்றை அலங்கல் அம் தெரியலான்**
**இயங்கு எயில் எயப் பிறந்த எரி போல, எவ்வாயும்,**
**கனை கதிர் தெறுதலின், கடுத்து எழுந்த காம்புத் தீ**
**மலை பரந்து தலைக் கொண்டு முழங்கிய முழங்கு அழல்**
**மயங்கு அதர் மறுகலின், மலை தலைக் கொண்டென,**
**விசும்பு உற நிவந்து அழலும், விலங்கு அரு, வெஞ் சுரம்**

தேன் ஊற்று திகழும் கொன்றை மாலை அணிந்த சிவபெருமான் வானத்தில் இயங்கிய முப்புரக் கோட்டைகளை எய்தபோது எழுந்த தீயைப் போல கதிரவன் தாக்கிய வெயிலால் மூங்கிலில் தீ பற்றி வெடிக்கும் முழக்கத்துடன் வழி நெடுக வானளாவத் தீ பற்றி எரியும் கொடுமையான காடு அது.

**இறந்து தாம் எண்ணிய எய்துதல் வேட்கையால்,**
**அறம் துறந்து ஆயிழாய்! ஆக்கத்தில் பிரிந்தவர்**
**பிறங்கு நீர் சடைக் கரந்தான் அணி அன்ன நின் நிறம்**
**பசந்து, நீ இனையையாய், நீத்தலும் நீப்பவோ?**

இப்படிப்பட்ட காட்டு வழியைக் கடந்து சென்று பொருளை ஈட்டிவர வேண்டும் என்னும் ஆசையால் உன்னிடம் நடந்துகொள்ளும் அறநெறியைக் கைவிட்டுவிட்டுச் சென்றுள்ளார். கங்கை நீரைத் தன் சடையில் மறைத்து வைத்திருக்கும் சிவபெருமானைப் போன்று பொன் நிறம் கொண்டிருந்த உன் மேனியில் பசலை பாயும்படி விட்டிருக்கிறார். உன்னை முற்றிலும்மாக விட்டுவிடுவாரா? விடமாட்டார்.

**கரி காய்ந்த கவலைத்தாய், கல் காய்ந்த காட்டகம்,**

**'வெரு வந்த ஆறு' என்னார், விழுப் பொருட்கு அகன்றவர்,**

**உருவ ஏற்று ஊர்தியான் ஒள் அணி நக்கன்ன, நின்**

**உரு இழந்து இனையையாய், உள்ளலும் உள்ளுபவோ?**

யானை பசியால் காய்ந்து திரியும் வழியில், கல்லில் வெயில் சூடு பறக்கும் காட்டில், அச்சம் தரும் வழி என்று எண்ணாமல், விழுமிய பொருள் ஈட்டிவரச் சென்றுள்ளார். அச்சம் தரும் காளை மேல் ஏறி வரும் சிவபெருமான் சிரிப்புப் போன்ற சிவந்த உன் உருவழகை இழந்து இவ்வாறு இருக்கும்போது அவர் உன்னையே எப்படி நினைத்துக்கொண்டிருக்க முடியும்?

**கொதித்து உராய்க் குன்று இவர்ந்து, கொடிக் கொண்ட கோடையால்,**

**'ஒதுக்கு அரிய நெறி' என்னார், ஒண் பொருட்கு அகன்றவர்,**

**புதுத் திங்கட் கண்ணியான் பொன் பூண் ஞான்று அன்ன, நின்**

**கதுப்பு உலறும் கவினையாய், காண்டலும் காண்பவோ?**

வெயில் கொதிக்கும் குன்றில் ஏறிப் படரும் கொடி கொண்ட குன்று வழியில் அவர் செல்கிறார். ஒதுங்குவதற்க்குக் கூட இடமில்லாத வழி அது. விழுமிய பொருளை ஈட்டிக்கொண்டு வரவேண்டும் என்னும் ஆசையால் அந்த வழியில் அவர் சென்றுள்ளார். புது நிலாவாகிய பிறையைச் சிவபெருமான் தன் தலையில் கண்ணியாகச் சூடிக்கொண்டதும் அது வளர்ந்தது போல நீ உன் கூந்தல் அழகுடன் திகழப்போகிறாய். நீ வருந்தும் இந்த நிலையில் அவர் உன்னைக் காண்பாரா?

**ஆங்கு**

**அரும் பெறல் ஆதிரையான் அணி பெற மலர்ந்த**

**பெருந் தண் சண்பகம் போல, ஒருங்கு அவர்**

**பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்**

**மை ஈர் ஓதி மட மொழியோயே!**

இப்படி எண்ணித் தெளிவு பெறு. பெறற்கரிய திருவாதிரை நாளுக்கு உரியவனாகிய சிவபெருமான் அணிகலனாக அணிந்துகொண்டிருக்கும் குளுமையான சண்பகப் பூ போல அவர் வாக்கு பொய் படாமல் வந்துவிடுவார் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்வோம். இருண்ட ஈரமான கூந்தலும், மடப்பத் தன்மையும் கொண்டவளே! அவர் வந்துவிடுவார் என்னும் உண்மையைத் தெளிவுபடுத்திக் கொள்வோம்.

**வினாக்கள்**

1. கலித்தொகை பாலைக்கலி பாடல் செய்தியை விளக்குக.

2. கலித்தொகை குறிஞ்சிப்பாடல் தரும் செய்தி யாது?

3. கலித்தொகையில் கபிலர் பாடலை விளக்குக.

4. தோழி வள்ளைப்பாட்டு பாட தலைவியை அழைக்கும் செய்தியைக் கூறுக.

5. ”சுடர்தொடீஇ கேளாய்” பாடலை விளக்குக.

6. கலித்தொகையில் முல்லைக்கலிப் பாடலை விளக்குக.

## அலகு - 5

## பட்டினப் பாலை

(சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது)

பட்டினப்பாலை என்பது சங்ககாலத்துத் தமிழ் நூல் தொகுப்பான பத்துப்பாட்டில் அடங்கிய ஒரு நூல் பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவரே இதனையும் இயற்றியுள்ளார். பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பு,அதன் செல்வ வளம், கரிகாலனுடைய வீரச்செயல்கள், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்து இயம்பும். இப் பாடல் 301 அடிகளால் அமைந்துள்ளது. இப் பாடலில் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் பெருமைகளை எடுத்துக்கூறுகிறார் புலவர். கரிகால் சோழன் திரைக்கடலில் நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப்புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். கரிகால் சோழனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப் பாலை ஆகும்.

**நூலின் சிறப்பு**

சங்க நூலாகிய பத்துப்பாட்டு வரிசையில் ஒன்பதாவது பாட்டு பட்டினப்பாலையாகும். பட்டினப்பாலையின் செய்யுள்கள் இடையிடையே வஞ்சிப்பாவின் அடிகள் விரவி இருந்தாலும் ஆசிரியப்பாவால் இயன்றவை.

**பட்டினம்**

துறைமுகத்தை ஒட்டியுள்ள பெரு நகரங்கள் பட்டினம் என அழைக்கப்பட்டன. காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் பழம்பெரும் நகரமாகும். தலைநகரமாக விளங்கிய துறைமுகப்பட்டினம். இது தமிழகத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்க்கோடியிலே காவிரி நதி கடலோடு கலக்கும் இடத்தில் உள்ளது. இப்போது இது ஒரு சிறிய ஊராகும். ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த நகரம் கடலிலே மூழ்கி விட்டதாகச் சொல்லப்படுகிறது. ஐம்பெருங்காப்பியங்களிலே ஒன்றான மணிமேகலையில் காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கிய செய்தி காணப்படுகிறது.

**பாட்டின் அமைப்பு**

பொருள் தேடப் பிரிந்து செல்ல நினைக்கின்றன் தலைவன். பிரிந்து சென்றால் தன் காதலியின் நிலை என்ன அகும்? அவள் தன் பிரிவைப் பொறுப்பாளா? தான் திரும்பும்வரை அவள் உயிர்கொண்டு உறைவாளா? என்றஐயம் அவன் உள்ளத்திலே எழுந்து அவனை வாட்டு கின்றன. பிரிந்து சென்றால் தானும் மன அமைதியோடு சென்ற இடத்தில் செயலாற்ற முடியாது. வேதனைதான் மிஞ்சும்; வேதனையோடு செய்யும் செயலில் வெற்றிகாண முடியாது. ஆகையால்

பிரிவு காதலிக்குத் துன்பம் தருவதோடு தனக்கும் துன்பத்தைத் தரும் என நினைக்கிறான் இதனால்

"நான் பிரிந்து செல்ல நினைக்கும் காட்டு மார்க்கம், கரிகாற்சோழன் தன் பகைவர்களின் மேல் வீசிய வேல்படையைக் காட்டினும் கொடுமையானது. என்காதலியின் மெல்லிய தோள்கள் அந்தக் கரிகாற்சோழனுடைய செங்கோலைக் காட்டினும் குளிர்ச்சியைத் (நன்மையை, இன்பத்தை) தருவன. ஆதலால் நீங்காத சிறப்பினையுடைய காவிரிப்பூம் பட்டினமே கிடைப்பதா இருந்தாலும் கூட என் காதலியை விட்டுப் பிரிந்து வரமாட்டேன். என் மனமே! பிரிந்து போகவேண்டும் என எண்ணுவதை மறந்துவிடு". என்ற முடிவுக்கு வருகிறான். இதுவே பட்டினப்பாலையின் அகப்பொருள்கருத்தாகும். இதனை

**"திருமாவளவன்**

**தெவ்வர்க்கு ஓங்கிய**

**வேலினும் வெய்ய கானம்;**

**அவன், கோலினும் தண்ணிய**

**தடம்மெல் தோளே.**

**முட்டாச் சிறப்பின்**

**பட்டினம் பெறினும்**

**வாரிரும் கூந்தல்**

**வயங்கிழை ஒழிய**

**வாரேன் வாழிய செஞ்சே."**

என்று வரும் பட்டினப்பலை அடிகளால் அறியலம்.

**நூலின் பொருள்**

காவிரியாற்றின் சிறப்பு; சோழநாட்டின் நிலவளம்; காவிரிப்பூம்பட்டினத்தின் சுற்றுப்புறங்களின் செழிப்பு; காவிரித்துறையின் காட்சி; செம்படவர்களின் வாழ்க்கை; பொழுதுபோக்கு இவைகளை இந்நூல் விரிவாகக் கூறுகிறது. காவிரிப்பூம்பட்டினத்திலே அக்காலத்தில் நடைபெற்ற வாணிகம்; அந்நகரத்திலே குவிந்திருந்த செல்வங்கள்; அங்கு நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி வாணிகம்; வாணிகர்களின் நடுவுநிலைமை; பண்டங்களைப் பாதுகாக்கும் முறை இவைகளையெல்லாம் இந்நூலிலே காணலாம்.

இந்த நகரத்தின் தலைவனான கரிகாற்சோழனின் பெருமை, வீரம், கொடை முதலியவற்றையும் இந்நூல் எடுத்துரைக்கிறது. இந்நூல் பாலைத்திணை என்னும் அகப்பொருளைப் பற்றியதாயினும் புறப்பொருள் செய்திகளே இதில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

1. காவிரியின் சிறப்பு
2. சோழ நாட்டின் சிறப்பு
3. நகரச் சிறப்பு
4. மக்களின் விளையாட்டுக்கள்
5. இரவில் துயிலும் நிலை

6. கடற்கரையில் பகல் விளையாட்டு

7. ஏற்றுமதி இறக்குமதி நிகழும் பண்ட சாலை முற்றம்

8. மகளிர் வெறியாடி விழாக்கொண்டாடும் ஆவணம்

9. பலவகைக் கொடிகளின் காட்சி

10. வளம் பல நிறைந்த தெருக்கள்

11. வணிகர்களின் வாழ்க்கை முறை

12. பற்பல மொழி பேசுவோர் உறையும் பட்டினம்

13. தலைவனது அவல நிலை

14. திருமாவளவன் அரச உரிமை பெற்ற வகை

15. பகைவர்மேல் போருக்கு எழுதல்

16. பகைவரது நாட்டைப் பாழ்படுத்துதல்

17. திருமாவளவனது ஆற்றல்

18. சோழ நாட்டையும் உறையூரையும் சிறப்புறச் செய்தல்

19. தலைவன் தலைவியைப் பிரிதற்கு அருமை கூறல்

**1.காவிரியின் சிறப்பு**

**வசையில்புகழ் வயங்குவெண்மீன்**

**திசைதிரிந்து தெற்கேகினும்**

**தற்பாடிய தளியுணவிற்**

**புட்டேம்பப் புயன்மாறி**

**வான்பொய்ப்பினும் தான்பொய்யா**

**மலைத்தலைய கடற்காவிரி**

**புனல்பரந்து பொன்கொழிக்கும்**

மழை இல்லாவிட்டாலும் காவிரியில் நீர் வந்து வயலில் பொன்போல் விளைச்சல் பெருகும். எனவே அது பொய்யாக் காவிரி. ஒளி விளங்கும் சூரியன் ஒரு வெண்மீன். திங்களைப் போல் காலம் மாறாமல், காலக் கணியாய் விளங்குவதால் அது வசையில்லாத புகழினை ஊடையது. வானம்பாடி ‘வ்வான் வ்வான்‘ என்று குரல் தந்து தன்னையே பாடிக்கொள்ளும். ‘தளி’ என்பது மேகத்திலுள்ள நீர். வானம்பாடி நீராக உண்ணுவது இந்தத் தளிநீரை மட்டுமே. சூரியன் திசைமாறித் தென்முகமாகச் சென்றாலும், வானம்பாடி நீரின்றித் தேம்பினாலும், காவிரியில் புனல் பாய்ந்து பொன் கொழிப்பது தவறுவதில்லையாம். காவிரித் தாய்க்குத் தலை. தலைக்காவிரி தோன்றும் குடகுமலை.

**2. சோழ நாட்டின் சிறப்பு**

**விளைவறா வியன்கழனிக்**

**கார்க்கரும்பின் கமழாலைத்**

**தீத்தெறுவிற் கவின்வாடி**

**நீர்ச்செறுவி னீணெய்தற்**

**பூச்சாம்பும் புலத்தாங்கட்**

கழனியில் கரும்பும் வயலில் ஆம்பலும் பூக்கும். காவிரியாற்றுக் கழனிகளில் என்றும் விளைச்சல் இருந்து கொண்டே யிருக்கும். கழனிகளில் விளைந்த கரும்பை ஆலையில் சாறு பிழிந்து வெல்லமாக்கு வதற்காகக் காய்ச்சிய புகையின் சூடு பட்டு நீர் வயல்களிலிருந்த நெய்தல் பூக்கள் சாம்பிவிடுமாம். சாம்புதல் = சூடுபட்டு வாடுதல்

**காய்ச்செந்நெற் கதிரருந்து**

**மோட்டெருமை முழுக்குழவி**

**கூட்டுநிழல் துயில்வதியும்**

**கோட்டெங்கிற் குலைவாழைக்**

**காய்க்கமுகிற் கமழ்மஞ்சள்**

**இனமாவின் இணர்ப்பெண்ணை**

**முதற்சேம்பின் முளையிஞ்சி**

விளையாடிய எருமைக் கன்றுக்குட்டி கதிர் முற்றிய நெல் வயலில் இறங்கிக் காலால் கதிர்களைத் துவட்டி விட்டு நெல்லைப் பாதுகாத்து வைத்திருக்கும் நெற்கூட்டின் நிழலில் படுத்திருக்கும். ஊரைச் சூழ்ந்துள்ள வயல் முற்றங்களில் தென்னை, வாழை பாக்குமரம் மஞ்சள், மா, பனை, சேம்பு, இஞ்சி முதலான பணப்பயிர்கள் விளைந்திருக்கும்.

**அனகர் வியன்முற்றத்துச்**

**சுடர்நுதல் மடநோக்கின்**

**நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்**

**கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை**

**பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்**

**முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்**

காயும் உணவுப்பொருள்களைக் கவர்ந்து உண்ணும் கோழிகளை, காதில் அணிந்திருக்கும் பொன்னணிகளைக் கழற்றி எறிந்து மகளிர் ஓட்டுவர். அவை குழந்தைகள் உருட்டும் நடைவண்டிகளைத் தடுக்கும் செல்வச் சீமாட்டியர் சுடரும் நெற்றியும், எதையும் பொருட்படுத்தாத கள்ளம் கபடமற்ற மடமை நோக்கமும் கொண்டவர்கள். காதிலே மதிப்புமிக்க குழைகளையும், கழுத்திலே பொருத்தமான இழைகளையும் அணிந்திருப்பர். முற்றத்தில் உணவு தானியங்களை அந்த மகளிர் காயவைத்துக் கொண்டிருப்பர். கோழிகள் அவற்றைக் கவர்ந்து உண்ணும். அந்தக் கோழிகளை அவர்கள் தம் காதுகளில் அணிந்திருக்கும் குழைகளைக் கழற்றி எறிந்து ஓட்டுவர். அவர்களுடைய பிள்ளைகள் மூன்று சக்கர வண்டியை அவ்விடங்களில் உருட்டிக்கொண்டு செல்லும்போது அந்தக் குழைகள் தடுக்கும். தடையையோ, குழையின் மதிப்பையோ பொருட்படுத்தாமல் பிள்ளைகள் தம் தேர் வண்டியை உருட்டிச் செல்வர். முக்கால் சிறுதேர் = நடைவண்டி உணங்கு உணா = காய வைத்திருக்கும் உணவுப் பண்டம் புரவியின் உருட்டும் = குதிரைபோல் இழுத்துச் செல்வர்

**விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்**

**கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்**

**குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு**

விலங்கு-பகை அல்லது மக்களை மக்கள் தாக்கும் பகை இல்லாதது சோழநாடு. சோழ நாட்டில் பயிர்களை உண்ணும் விலங்குபகை உண்டு. உட்பகை, வேற்றுநாட்டுப் பகை போன்ற எந்தப் பகையும் இல்லை. கொழுத்துக் கிடக்கும் செல்வக் குடிகள் பலவாகப் பெருகியிருந்தன. இவர்கள் வாழும் செழுமையான சிற்றூர்கள் பலவற்றைக் கொண்டது சோழநாடு.

**3. நகரச் சிறப்பு**

**வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி**

**நெல்லொடு வந்த வல்லாய்ப் பஃறி**

**பணைநிலைப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்**

காவிரிப்பூம்பட்டினத்தில் நிலவாணிகம் - உப்பேற்றிக்கொண்டு ஆற்றின் வழியே சென்ற பஃறி மிதவை பண்டமாற்றாக விற்பனை செய்த நெல்லோடு மீண்டது. ஆற்றோரங்களில் குதிரைகளைக் கட்டும் முளைக்கம்பத்தில் அந்தப் பஃறிகள் தண்ணீர் அடித்துக்கொண்டு ஓடாமல் இருப்பதற்காகக் கட்டப்பட்டிருந்தன.

கழிசூழ் படப்பைக் கலியாணர்ப்

பொழிற் புறவிற் பூந்தண்டலை

மழைநீங்கிய மாவிசும்பின்

மதிசேர்ந்த மகவெண்மீன்

உருகெழுதிறல் உயர்கோட்டத்து

முருகமர்பூ முரண்கிடக்கை

வரியணிசுடர் வான்பொய்கை

இருகாமத் திணையேரிப்

காதலர் குளம் - சிவன் கோயிலுக்கு எதிரில் ஆணும் பெண்ணும் தம் காமம் நிறைவேற மூழ்கி எழும் இரட்டை ஏறி இருக்கும். உப்பங்கழி, உழுநிலம், பொழில், புறவு, பூஞ்சோலை ஆகியவற்றைக் கொண்டது புகார் நகரம். மகர வெண்மீனைக் கொடியில் கொண்டவன் காமவேள். மழைமேகம் இல்லாத வானத்தில் மக(ர) வெண்மீன் தெரியும். காமவேள் கோட்டம், நிலாக்கோட்டம், குமர கோட்டம் ஆகிய கோயில்கள் மணக்கும் பூக்கள் கொண்ட அந்தச் சோலைப் பகுதியில் இருந்தன. காமவேள் கோட்டத்தில் இரண்டு குளங்கள் இருந்தன. ஒன்று ஆண் குளிக்கும் குளம். மற்றொன்று பெண் குளிக்கும் குளம். இதில் குளித்தால் பிரிந்திருக்கும் கணவன் மனைவியாகிய இருவர் காமமும் இணையுமாம். இடைக் குறிப்பு - அமரர் தருக்கோட்டம் 1 கற்பகமரக் கோயில், வெள்யானைக் கோட்டம் 2 இந்திரன்-யானைக் கோயில், புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம் 3 நாக-தெய்வங்கள் இருக்கும் கோயில், உச்சிக்கிழான் கோட்டம் 4 சூரியன் கோயில், ஊர்க்கோட்டம் 5 குலதெய்வக் கோயில், வேல் கோட்டம் 6 வேல் கோயில், வச்சிரக் கோட்டம் 7 இந்திரனின் வச்சிரப்படைப் கோயில், புறம்பணையான் வாழ் கோட்டம் 8 ஊரின் புறத்தே ஊரை அணைத்துக் காக்கும் எல்லைத்தெய்வக் கோயில், நிக்கந்தக் கோட்டம் 9 அய்யனார் கோயில் \ (கந்தன் = துணைவன் \ காதன்மை கந்தா – திருக்குறள்) (நிக்கந்தன் = பற்று அற்றவன்) அருகன் கோயில், புத்தன்

கோயிலுமாம், நிலாக் கோட்டம் 10, ஆகிய கோயில்கள் புகார் நகரத்தில் இருந்தன. மற்றும், கடலொடு காவிரி தலையலைக்கும் முன்றில், மடலவிழ் நெய்தலங்கானல் தடம் உள, சோமகுண்டம் 1 நிலாக்குளம், சூரியகுண்டம் 2, துறை மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதார், கணவரோடு தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார், (சிலப்பதிகாரம் கனாத்திறம் உரைத்த காதை).

**புலிப்பொறிப் போர்க்கதவின்**

**திருத்துஞ்சுந் திண்காப்பிற்**

**புகழ்நிலைஇய மொழிவளர**

**அறநிலைஇய அகனட்டிற்**

**சோறுவாக்கிய கொழுங்கஞ்சி**

**யாறுபோலப் பரந்தொழுகி**

**ஏறுபொரச் சேறாகித்**

**தேரொடத் துகள் கெழுமி**

**நீறாடிய களிறுபோல**

**வேறுபட்ட வினையோவத்து**

**வெண்கோயில் மாசூட்டுந்**

திருமாவளவனின் வெள்ளை மாளிகை - அரசனின் வெள்ளை-மாளிகையின் கதவில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். அங்கே மொழி வளரப் பாடுபடுவோருக்கு உணவு வழங்கப்படும். புலிச் சின்னம் - திருமாவளவன்

அரண்மனையின் கதவில் புலி உருவம் பொறிக்கப் பட்டிருந்தது. அரண்மனையில் செல்வம் பயன்படுத்த முடியாமல் தூங்கியது. மொழி வளர்க்கும் அறச்சாலை - தமிழ்மொழி நிலைபெற்ற புகழ் உடையது. அது மேலும் வளர்வதற்காக அறச்சாலை அமைக்கப்பட்டிருந்தது. சோறு – சேறு – நீறு - அறச்சாலையிலுள்ள சமையலறையில் சோறாக்கி வடித்த கஞ்சி ஆறுபோல ஓடியது. அங்கு யானைகள் போரிட்டதால் அதன் காலடியில் கஞ்சி ஓடிப் பாயும் மண் சேறாக மாறியது. அவ்வழியே தேர்கள் சென்றதால் சேற்றுமண் காய்ந்து பொடிமண் நீராக மாறியது. ஓவியம் - அரண்மனைச் சுவரில் கலைத்திற வேலைப்பாடுகளுடன் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. வெண்கோயில் - வெள்ளை மாளிகையாக விளங்கிய அரண்மனைச் சுவரிலிருந்த ஓவியங்களைத் தேர்த்துகள்களின் புழுதிகள் மாசுபடச் செய்தன.

**தண்கேணித் தகைமுற்றத்துப்**

**பகட்டெருத்தின் பலசாலைத்**

**தவப்பள்ளித் தாழ்காவின்**

**அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்**

**ஆவுதி நறும்புகை முனைஇக் குயில்தம்**

**மாயிரும் பெடையோ டிரியல் போகிப்**

**பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த்**

**தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்**

கேணி-முற்றத்தில் முனிவர் தீ வளர்த்து வேள்வி செய்வர். தவப்பள்ளி - கேணி முற்றம் - விரிந்த சடைமுடி கொண்ட முனிவர்கள் தீ வளர்த்து வேள்வி செய்தனர். கேணிக்கரையின் முற்றத்தில் செய்தனர். திருமறைப் பாட்டுப் பாடிக்கொண்டு செய்தனர். பாட்டொலி மிடற்றிலிருந்து வந்தது. தாழ்ந்த காட்டுப் பகுதியிலிருந்த முனிவர்களின் தவப் பள்ளிகள் பலவாக இருந்தபடியால் அவை 'பல்சாலை' எனப் பெயர் பெற்றிருந்தன. வேள்விப் புகையை அங்கிருந்த குயில்கள் வெறுத்தன. தம் பெண்குயிலோடு பறந்து சென்றன. பூதம் காவல் புரியும் காப்புள்ள கோயில் பகுதிக்குச் சென்றன. அங்கே தங்கியிருந்த தூதுணம் புறாக்களோடு ஒதுக்கிடங்களில் தங்கின. இடைக்குறிப்பு - பொய் வேடதாரிகளையும், பொல்லாங்கு செய்வோரையும் 'பூதம் புடைத்து உண்ணும் பூதச்சதுக்கம்' – சிலப்பதிகாரம் 5 134, பூதச் சதுக்கத்தில் 'அரசன் வெல்க' என்று பலி கொடுத்தனர். மணிகேகலை 7 78, புகார் நகரத்தில் காயசண்டிகாயை அவளது கணவன் காஞ்சணன் தேடிய இடங்கள், பூதச்சதுக்கம், பூமரச்சோலை, மாதவர் இடங்கள், மன்றம், பொதியில் , (மணிமேகலை 20 22). கணவனை அன்றி வேறு தெய்வத்தைத் தொழாத கற்புக்கரசி மருதியின் அழகில் மயங்கிய ககந்தன் மகன் தன் ஆசைக்கு இணங்கும்படி மருதியை அழைத்தான். 'பிறர் நெஞ்சு புகுந்தேன் என்னைக் கொன்றுவிடு' என்று மருதி சதுக்கப் பூதத்திடம் முறையிட்டாள். அப் பூதம் அவளது கற்பை எண்ணி அவளை உண்ண மறுத்து விட்டது. (மணிமேகலை 22 – 50, 55)

4. மக்களின் விளையாட்டுக்கள்

வரிமணல் அகந்திட்டை
இருங்கிளை யினனொக்கற்
கருந்தொழிற் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியும்
நீனிற விசும்பின் வலனேர்பு திரிதரும்
நாண்மீன் விராய கோண்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினுங் கலத்தினு மெய்யுறத் தீண்டிப்
பெருங்சினத்தாற் புறக்கொடாஅது
இருஞ்செருவின் இகல்மொய்ம்பினோர்
கல்லெறியும் கவண்வெரீஇப்
புள்ளிரியும் புகர்ப்போந்தைப்
பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி

## மேழகத் தகரொடு சிவல்விளை யாடக்

காவிரிப்பூம்பட்டினத்தில் கையாலும், கருவிகளாலும் மோதி, கவண் எறிந்து போர்ப்பயிற்சி பெறும் முரண்-களரி இருந்தது. இது வீர விளையாட்டுக்களின் பயிற்சிக்களம். இதற்கு முரண் களரி என்று பெயர். முதிர்ந்த மரங்கள் சூழ்ந்த ஆற்றோர மணல்திட்டில் 'முரண்களரி' எனப்பட்ட போர்ப் பயிற்சிக்களம் இருந்தது. கருந்தொழில் மாக்கள் - செந்தொழில் = உதவி புரியும் தொழில், கருந்தொழில் = போர்த்தொழில், கருந்தொழில் மக்களின் சுற்றத்தார் தங்களுக்குள்ளே மோதி ஆரவாரத்துடன் போர்ப்பயிற்சி செய்து கொண்டனர். சத்துணவு - கடலில் பிடித்த இறால் மீனைச் சுட்டுத் தின்றனர். வயலில் பிடித்த ஆமைக் கறியை வேகவைத்துத் தின்றனர். அடையாளப் பூ - அடையாளம் தெரிவதற்காக ஒருவர் மணல் மேட்டில் பூக்கும் அடும்பு மலரைத் தலையில் அணிந்திருந்தார். மற்றொருவர் நீரில் பூக்கும் ஆம்பல் மலரை மாலையாகக் கட்டிப் போட்டுக் கொண்டிருந்தார். நடுவர் - "நாள் மீன்' என்னும் சூரியன் போல் நடுவர் நடுவில் இருந்தார். சூரியனைச் சுற்றிக் கோள்கள் சுழல்வது போல் போர்ப்பயிற்சிகள் நடந்தன. மலர்தலை மன்றம் - மலரும் தலைமுறையினரின் (இளைஞர்களின்) மன்றம் அந்த முரண்களரி. கைப்போர் - மற்போர், குத்துச் சண்டை போன்ற சண்டைப் பயிற்சிகளில் காயால் மோதிக்கொண்டனர். இகல் மொய்ம்பினோர் - இகல் என்பது விளையாட்டுக்காக மாறுபடல். அழிக்கும் பகை அன்று. உடலின் திணவைக் காட்டுவது இகல். ஆகையால் சினங்கொண்டு பின்வாங்காமல் தாக்கினர். கவண் - கவணில் கல்லை வைத்து எறிந்து தாக்குவது. அக்காலப் போர் முறைகளில் ஒன்று. இதில் அவர்கள் பயிற்சி செய்தபோது வீசிய கற்களால் பனை

மரத்திலிருந்த பறவைகள் பறந்தோடிச் சென்றன. ஆட்டுச் சண்டை(நிகழ்வுப்படம்) \ காடைச் சண்டை \ அந்தப் பனை மரத்தடியில் செம்மறியாட்டுக் கடாவையும், சிவல் என்னும் காடைகளையும் மோதவிட்டு அவற்றின் சண்டையைப் பாரத்துக் கொண்டிருந்தனர்.

**5. கடற்கரையில் பகல் விளையாட்டு**

**கிடுகுநிரைத் தெஃகூன்றி**

**நடுகல்லின் அரண்போல**

**நெடுந்தூண்டிலிற் காழ்சேர்த்திய**

**குறுங்கூரைக் குடிநாப்பண்**

**நிலவடைந்த இருள்போல**

**வலையுணங்கு மணல்முன்றில்**

**வீழ்த்தாழைத் தாட்டழ்ந்த**

**வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்**

**சினைச்சுறவின் கோடுநட்டு**

**மனைச்சேர்த்திய வல்லணங்கினால்**

**மடற்றாழை மலர்மலைந்தும்**

**பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்**

**புன்றலை இரும்பரதவர**

**பைந்தழைமா மகளிரொடு**

**பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லாது**

**உவவுமடிந் துண்டாடியும்**

நிறை-நிலா வெளிச்சத்தில் ஆணும் பெண்ணுமாகப் பரதவர் உண்டும் ஆடியும் மகிழ்வர். காதல் விளையாட்டுகள் கூரைவீடுகளின் இடையே வேல் நட்டுக் கேடயம் மாட்டப்பட்டிருந்தது. வயிரம் பாய்ந்த மரக்கொம்புகளை நட்டு அதில் மீன்வலையைக் காய வைத்திருந்தனர். இது நடுகல் அரண் போல் விளங்கியது. வலை விரித்த மணல் அவர்களுக்கு மெத்தை. இங்கிருந்த தாழைமரத்து அடியில்-தான் காதலர்களின் களியாட்டங்கள் நிகழ்ந்தன. பூச்சூடல் - மகளிர் கூதாளம் பூவைத் தலையில் சூடிக் கொண்டிருந்தனர். மனையணங்கு வழிபாடு - நிறைமதி நாளும் மறைமதி நாளும் 'உவா' எனப்படும். அந்த நாள்களில் கடலின் கொந்தளிப்பு அதிகமாக இருக்கும். எனவே அந்த இரண்டு நாள்களிலும் பரதவர் கடலில் மீன் பிடிக்கச் செல்வதில்லை. அவரவர் மனைவிமாருடன் கூடி மனையில் அணங்குவிழாக் கொண்டாடுவர். சுறாமீன் கொம்பு - அணங்குவிழா நாளில் வீட்டில் சினையுற்றிருக்கும் சுறாமீன் கொம்பு ஒன்றில் குத்தி நடப்பட்டிருக்கும். காதலர் உண்டு களித்து உடலுறவு கொள்வதைக் காட்டும் அடையாளச் சின்னம் சுறாமீன் கொம்பு. இது மனையில் நடப்பட்டிருந்தால் அம்மனைக்குள் வேறு யாரும் செல்லமாட்டார்கள். பூ மாற்றம் - மற்ற நாட்களில் கூதாளம் பூவைச் சூடிக்கொள்ளும் மீனவப் பெண்கள் அணங்குவிழா நாளில் தாழம் பூவைத் தலையில் சூடிக்கொள்வர் பனைக்கள் - கடலுக்குள் செல்லும்போது

கள் பருகாத பரதவர் அணங்கு நாளில் பனங்கள்ளைப் பருகுவர். ஆடை மாற்றம் - பிற நாட்களில் நூலாடை உடுத்தியிருந்த பரதவப் பெண்கள் அந்த நாட்களில் தழையாடை அணிவர். உண்டாட்டு - வெட்சித்திணையின் துறைகளில் ஒன்றாகத் தொல்காப்பியம் குறிப்பிடும் உண்டாட்டு கூடிக் களிக்கும் புறத்திணையின் பாற்பட்டது (புறத்திணையியல் 2) இங்குக் கூறப்படும் உண்டாட்டு காதல் இருவர் களிப்புடன் தனிமையில் ஆடுவது.

**புலவுமணற் பூங்கானல்**

**மாமலை யணைந்த கொண்மூப் போலவும்**

**தாய்முலை தழுவிய குழவி போலவும்**

**தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கும்**

**மலியோத் தொலிகூடல்**

**தீதுநீங்கக் கடலாடியும்**

**மாசுபோகப் புனல்படிந்தும்**

**அலவ னாட்டியும் உரவுத்திரை உழக்கியும்**

**பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்**

**அகலாக் காதலொடு பகல்விளை யாடிப்**

மீனவர் கடலாடல் - காவிரி ஆறு கடலில் கலக்கும் கூடல்நிலம் கொண்டது புகார் நகரம். மலையைத் தழுவும் மேகம் போல அங்குக் காவிரி கடலைத் தழுவியது. தாயைத் தழுவும் குழந்தையைப் போலக் காவிரி கடலைத் தழுவியது.

புலவுமணல் - வைகறையில் தனித்துக் கூடிய காதலர் மாலையில் பொது இடமாகிய கருவாட்டு நாற்றம் வீசும் மணல் பரப்பில் விளையாடுவர். கடலாடல் \ புனலாடல் - கடலில் குளித்தால் செய்த தீமைகள் அகலும் என்று நம்பினர். என்றாலும் உப்பு உடலில் படிந்துவிடும் அல்லவா? அதனைப் போக்க நன்னீர் ஓடும் ஆற்றில் குளித்தனர். நண்டு விளையாட்டு - கடல் நண்டுகளை கடலோர மணலில் அங்குமிங்கும் ஓடச்செய்து அதனைப் பார்த்து மகிழ்ந்தனர். திரை விளையாட்டு - கடலலைகளில் நின்றும், ஓடியும், 'நீரா, நிலமா' என்று தொடச் சொல்லியும் விளையாடி மகிழ்ந்தனர். பொறி விளையாட்டுக் காணல் - மிதக்கும் பொருள்களைக் கடலலையில் போட்டால் அது கரைக்கு வந்துசேரும். இவ்வாறு மீள்வதைக் கண்டு களித்தல் பொறி விளையாட்டு. இது ஒருவகைக் கட்பொறி விளையாட்டு.

**6. இரவில் துயிலும் நிலை**

**பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்**

**பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைத்**

**துணைப்புணர்ந்த மடமங்கையர்**

**பட்டுநீக்கித் துகிலுடுத்தும்**

**மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும்**

**மைந்தர்கண்ணி மகளிர் சூடவும்**

**மகளிர்கோதை மைந்தர் மலையவும்**

மகளிரு , மைந்தரும் மாலை மாற்றிக்கொண்டு மகிழ்ந்து திளைப்பர். கலவி என்னும் உடலுறவுக்கு முன்னும் பின்னும் செல்வர் - பூமலி பெருந்துறை என்பது காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு பகுதி. அங்கு ஆண்டு முழுவதும் மாறிமாறிப் பொய்க்காமல் பூத்துக் கொண்டேயிருக்கும் மரங்கள் இருந்தன. அந்த இடம் வீடுபேற்றுச் சுவர்க்கம் போன்றது. அங்கிருந்த வீடுகளில் மகளிர் காலத்திற்கேற்ற கோலம் பூண்டு கூடிக்களித்து இன்புற்றனர். கணவனோடு கூடித் திளைத்த மகளிர் வெளியிலோ, வீட்டிலோ கூடித் திளைக்கும்போதும், வெளியில் உலாவும்போதும் முறையே பருத்தித்துணி உடுத்தியும், பட்டாடை உடுத்தியும் மகிழ்ந்தனர். மட்டு (சுவைநீர்) மதுமகிழ் (களிப்புநீர்) பருகல் - வெளியில் உலாவும்போது மயக்கம் தராத மட்டுகள்ளைப் பருகியவர்கள் கூடித் திளைக்கும்போது மதுக்கள்ளை உண்டு மகிழ்ந்தனர். மாலை மாற்று விளையாட்டு - மைந்தர் தலையில் சூடியிருந்த கண்ணி மகளிர் தலைக்கு மாறிவிட்டது. மகளிர் கழுத்தில் அணிந்திருந்த மாலை மைந்தர் கழுத்துக்கு மாறிவிட்டது.

**நெடுங்கால் மாடத் தொள்ளெரி நோக்கிக்**

**கொடுந்திமிற் பரதவர் குரூஉச்சுடர் எண்ணவும்**

**பாட லோர்த்தும் நாடக நயந்தும்**

**வெண்ணிலவின் பயன்றுய்த்தும்**

**கண்ணடைஇய கடைக்கங்குலான் 115**

**மாஅகாவிரி மணங்கூட்டும்**

**தூஉவெக்கர்த் துயில் மடிந்து**

நிலாமுற்றத்தில், உயர்ந்த கால் நட்டுக் கட்டப்பட்டிருந்த மாடங்களில் கூடிக் களித்த காதலர் கடலில் விளக்கு ஒளியோடு மீன் பிடித்துக் கொண்டிருக்கும் திமில்களில் எரிந்த விளக்கொளிகளை எண்ணிக் கணக்குப் போட்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர். காவிரி மணலில் வெண்ணிலாவின் பயனைத் துய்த்துக் கொண்டிருந்த மக்கள் அங்கு மேடையில் இருந்து பாடப்பட்ட பாட்டுகளைக் கேட்டு மகிழ்ந்தனர். நாடகங்களைக் கண்டு மகிழ்ந்தனர். பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் அந்த மணல் வெளியிலேயே தூங்கிவிட்டனர்.

**7. ஏற்றுமதி இறக்குமதி நிகழும் பண்டசாலை முற்றம்**

**வாலிணர் மடற்றாழை**

**வேலாழி வியந்தெருவின்**

**நல்லிறைவன் பொருள்காக்கும். 120**

**தொல்லிசைத் தொழில்மாக்கள்**

**காய்சினத்த கதிர்ச்செல்வன்**

**தேர்பூண்ட மாஅபோல**

**வைகல்தொறும் அசைவின்றி**

**உல்குசெயக் குறைபடாது 125**

உல்கு என்பது சுங்கவரி. புகார்த் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு உல்குவரி வாங்கப்பட்டது. உல்குவரி பெறப்பட்டதற்கான முத்திரையும் பொருளின்மீது இடப்பட்டது. இப்படி

முத்திரையிட்டு மாளாத அளவுக்குப் பொருள்கள் குவிந்து கிடந்தன. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் தெருக்களில் குவிந்துகிடந்தன. வெண்ணிற மடல்களை உடைய தாழைமரங்கள் மண்டிக்கிடந்த தெருக்கள் அவை. அப்பொருள்களில் அரசனுக்குச் சொந்தமான பொருள்களை ‘இறைவன் தொழில் மாக்கள்’ காவல் புரிந்தனர். வேலேற்றிய வண்டி அப் பொருள்களைக் காக்கும் இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தது. சூரியனாம் தேரை இழுத்துச் செல்லும் குதிரை போல நாள்தோறும் பகல் முழுவதும் உல்கு செய்யப்பட்டது. உல்கு செய்யச் செய்ய உல்கு செய்யப்படாத பொருள்களின் இருப்பு குறையவே இல்லை.

வான்முகந்தநீர் மலைப்பொழியவும்

மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்

மாரிபெய்யும் பருவம்போல

நீரினின்று நிலத்தேற்றவும்

நிலத்தின்று நீர்ப்பரப்பவும

அளந்தறியாப் பலபண்டம்

வரம்பறியாமை வந்தீண்டி

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி - கடலிலிருந்து மேகம் முகந்து சென்ற நீர் மலையில் பொழிவது போல நீரிலிருந்து பொருள்கள் நிலத்தில் ஏற்றப்பட்டன. மலையில் பொழிந்த நீர் கடலுக்கு வந்து பரவுவது போல நிலத்திலிருந்து பொருள்கள் நீரிலுள்ள நாவாயில் பரப்பப் பட்டன. அந்தப் பண்டங்கள் அளந்தறிய முடியாதபடி பற்பலவாகக் குவிந்துகொண்டிருந்தன.

**அருங்கடிப் பெருங்காப்பின்**

**வலியுடை வல்லணங்கினோன்**

**புலிபொறித்துப் புறம்போக்கி**

**மதிநிறைந்த மலிபண்டம்**

**பொதிமூடைப் போரேறி**

புலி முத்திரை - ஏற்றுமதிக்காகவும், இறக்குமதியிலிருந்தும் வந்த மதிப்பு மிக்க பொருள்களின்மீது புலிச் சின்னம் பொறிக்கப்பட்டது. பின்னர் அவை பொதிமூட்டைகளாகக் கட்டிக் காப்பகத்தில் அடுக்கப்பட்டன. உடல் வலிமையைக் கண்ட மாத்திரத்திலேயே அச்சம் தரும் காவலாளிகள் அவற்றைப் பாதுகாத்தனர்.

**மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்**

**வரையாடு வருடைத் தோற்றம் போலக்**

**கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்ற**

**ஏழகத் தகரோ டுகளு முன்றிற்**

மழைமேகங்கள் விளையாடும் மலையுச்சியிலும் மலையிடைப் பிளவுகளிலும் வருடை என்னும் வரையாடு ஏறி விளையாடுவது போல வேட்டையாடும் ஆண் நாய்களும், முட்டித் தாக்கும் செம்மறியாட்டுக் கடாக்களும் முற்றங்களில் அடுக்கியுள்ள மூட்டைகளின் மேல் ஏறித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

**8. மகளிர் வெறியாடி விழாக்கொண்டாடும் ஆவணம்**

**குறுந்தொடை நெடும்படிக்காற்**

**கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்**

**புழைவாயிற் போகிடைகழி**

**மழைதோயும் உயர்மாடத்துச்**

**சேவடிச் செறிகுறங்கிற்**

**பாசிழைப் பகட்டல்குல்**

**தூசிடைத் துகிர்மேனி**

**மயிலியல் மானோக்கிற்**

**கிளிமழலை மென்சாயலோர**

**வளிநுழையும் வாய்பொருந்தி**

**ஓங்குவரை மருங்கின் நுண்தா துறைக்கும்**

**காந்தளந் துடுப்பிற் கவிகுலை யன்ன**

**செறிதொடி முன்கை கூப்பிக் செவ்வேள்**

**வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்**

மாடங்களில் முருகன் வழிபாட்டு வெறியாட்டம் நடைபெறும். மூட்டைகள் அடுக்கிக் கிடக்கும் பகுதியை அடுத்து மாடி வீடுகள். அதற்கு வளைந்த தாழ்வாரம்

இறக்கிய திண்ணை. திண்ணைக்கு ஏற நீண்ட சிறுசிறு படிக்கட்டுகள். மேல்மாடி வீட்டுக்கு நுழைந்தேறக் குகை போன்ற வாயில். அதன் வழியே ஏறிச்சென்றால் 'போகிடைக் கழி'. இது அதற்கு வழி நுழையும் வாயில். மாடியில் மகளிர் குரவை விளையாடும் காட்சி தெரிகிறது. அந்தச் சாயல் அழகியர்களுக்குச் சிவந்த காலடிகள். நெருங்கிய தொடைகள். பசுமையான தழையாடை மூடிப் பகட்டிக்கொண்டிருக்கும் அல்குல். மயிலின் சாயலையுடைய அவர்களின் பவளம் போன்ற மேனியில் பட்டாடை. மான்போல் மருண்ட பார்வை. கிளிபோல் மழலைமொழி. பூப் போல் மென்மையாகத் தோன்றும் மேனிச் சாயல். இவர்கள் கைகூப்பி வெறிநடனம் ஆடினர். அது மலைமுகட்டில் மலர்த் தாதுகளைக் கொட்டிக்கொண்டு கொடியோடு கூடிய காந்தள் பூ காற்றில் ஆடுவது போல் இருந்தது. 'போகிடைக்கழி' = மாடி வீட்டுக் கூடம், வளி நுழையும் வாயில் = திறந்தவெளிச் சன்னல்.

**குழலகவ யாழ்முரல**

**முழவதிர முரசியம்ப**

**விழவறா வியலாவணத்து**

கடைத்தெருவில் ஒத்திசையின் எதிரொலி. அழகியர் வெறியாடிய நடனத்தின்போது குழலின் ஒலி அகவலோசைப் பாடல்போல் அகவிற்று. யாழின் ஒலி வண்டிசைப்பது போல் இருந்தது. முழவின் ஓசை அதிர்ந்தது. முரசின் ஓசை ஏதோ சொல்வதுபோல் இருந்தது. இந்த விழா முழக்கத்தின் ஒலி கடைத்தெருவிலும் முழங்கிற்று.

**9. பலவகைக் கொடிகளின் காட்சி**

**மையறு சிறப்பின் தெய்வஞ் சேர்த்திய**
**மலரணி வாயிற் பலர்தொழ கொடியும**

கோயிலில் கொடி - தெய்வத்தை வைத்து மலர்ப்பூசை செய்யும் கோயில் வாயிலில் வழிபாடு செய்யும் பலரும் போற்றிப் புகழும் கொடி பறந்தது. தெய்வ உருவம் எழுதப்பட்ட எழுப்பட்ட கொடி பறக்க விடப்பட்ட கம்பத்தை இக்காலத்தில் துவஸ்தம்பம் என்கின்றனர்.

**வருபுனல் தந்த வெண்மணற் கான்யாற்று**
**உருறுகெழு கரும்பின் ஒண்பூப் போலக்**
**கூழுடைக் கொழுமஞ்சிகைத்**
**தாழுடைத் தண்பணியத்து**
**வாலரிசிப் பலிசிதறிப்**
**பாகுகுத்த பசுமெழுக்கிற்**
**காழூன்றிய கவிகிடுகின்**
**மேலூன்றிய துகிற்கொடியும்**

அற-மறச் சாலைகளில் கொடிகள் - காட்டாற்று வெள்ளம் போனபின் காய்ந்து கிடக்கும் வெண்மணலின் ஓரத்தில் பேக்கரும்பின் பூ வெள்ளை வெளேரென்று பூத்துக் கிடப்பது போல் சோறு படைக்கும் அறச்சாலைமாடத்தில் ('மஞ்சிகை' யில்) கொடி கட்டப்பட்டிருந்தது. அக் கொடிக்கம்பம் நடப்பட்டிருக்கும்

இடத்தில் பலகாரமும், வெண்பொங்கலும் படையலாக வைக்கப் பட்டிருந்தன. அந்த இடம் பசுவின் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. கம்பத்தின் ஓரத்தில் வேல் ('காழ்') நட்டுக் கேடயம் மாட்டப் பட்டிருந்தது. இங்கும் கொடி பறந்தது. இவை படைவீரர்களுக்கும், காவல்-தொழில் புரிவோருக்கும் சோறு வழங்கும் அறச்சாலை எனக் காட்டும் கொடிகள்.

**பல்கேள்வித் துறைபோகிய**

**தொல்லாணை நல்லாசிரியர்**

**உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும்**

பட்டிமன்றக் கொடி - 'ஆணை' என்பது வாய்மை. 'கேள்வி' என்பது கேட்டுக் கேட்டு வளர்த்துக்கொண்ட அறிவு. வழிவழியாக வரும் வாய்மைக் கருத்துகளைக் கேட்டுக் கேட்டு மெய்ப்பொருள் காட்சியில் துறைபோய பெருமக்கள் தான் 'தொல்லாணை நல்லாசிரியர்' (Ancient philosophers). இவர்கள் தெளிவு பெறுவதற்காகக் கருத்துக்களால் முரண்பட்டு உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதன் அடையாளமாகக் கொடி கட்டப்பட்டிருந்தது.

**வெளிலிளக்குங் களிறுபோலத்**

**தீம்புகார்த் திரைமுன்றுறைத்**

**தூங்குநாவாய் துவன்றிருக்கை**

**மிசைக்கூம்பி னசைச்கொடியும்**

கடலில் கப்பலின் கொடி பறக்கும் - முளையில் கட்டப்பட்டிருக்கும் களிறு போலப் புகார்த் துறைமுகத்தில் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாவாயின் உச்சியில் கொடி கட்டப்பட்டிருந்தது. வெளில் = விலங்குகளைக் கயிற்றில் தொடுத்துக் கட்டிவைக்கும் முளைக்-குச்சி, இளக்கும் = இணக்கும் > இணைக்கும், துவன்று = பின்னிப் பிணைந்து, மிசை = உயரம், நசை = விருப்பம் \ நாவாய்க்-கப்பலின் உச்சியில் பறக்கும் விருப்பம் தரும் கொடி.

**மீந்தடிந்து விடக்கறுத்து**

**ஊன்பொரிக்கும் ஒலிமுன்றில்**

**மணற்குவைஇ மலர்சிதறிப்**

**பலர்புகுமனைப் பலிப்புதவின்**

**நறவுநொடைக் கொடியோடு**

மீன் விற்குமிடம், நறவுக்கள் விற்குமிடம் எனக் காட்டும் கொடிகள் காவிரிப்பூம்பட்டினத்தில் பறக்கும் கள்ளுக்கடையின் கொடி - பெரிய மீன்களை வெட்டி, அதன் நச்சுப்-பகுதிகளை நீக்கிவிட்டு மீன்கறியைப் பொறித்துத் தந்தனர். அந்த மணல்மேட்டு முற்றத்தில் மீன் கவிச்சல் போக மலர்களைத் தூவி வைத்திருந்தனர். அங்கே நறவுக்கள் விற்கும் கடை இருந்தது. பலர் உள்ளே செல்லும் அந்தக் கள்ளுக்கடையின் கதவில் “பலியாவீர்’ என்று காட்டும் அடையாளக் குறி பொறிக்கப்பட்டிருந்தது. அந்த இடங்களில் விற்பனையை அறிவிக்கும் தனித்தனிக் கொடிகள் பறந்தன.

**பிறபிறவு நனிவிரைஇப்**

**பல்வே றுருவிற் பதாகை நீழல்**

**செல்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பிற்**

**10. வளம் பல நிறைந்த தெருக்கள்**

செல்லா நல்லிசை யுமரர் காப்பின் இந்தப் பதாகை நிழலில்தான் தேவர் உலகம் போன்ற ஊராகக் காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுக நகரம் விளங்கியது. இந்தக் கொடிகளேயன்றி பிறபிற கொடிகளும் பல்வேறு உருவங்களில் பறந்து வெயில் நுழையாத நிழலை உண்டாக்கியது. அமர் < அமரர் = விரும்புவோர், தே < தேவர் = இனியவர். புகார் அமரர் காக்கும் நகரமாக விளங்கியது. அதன் நற்பெயர் என்றென்றும் விலகிச் செல்வதில்லை.

**நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**

**காலின் வந்த கருங்கறி மூடையும்**

**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**

**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**

**தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்**

**கங்கை வாரியும் காவிரிப் பயனும்.**

**ஈழத் துணவும் காழகத் தாக்கமும்**

**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**

**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்**

கடல்-வழி வந்த குதிரை, வண்டியில் வந்த மிளகு-மூட்டை, வடமலையில் பிறந்த மணி, குடமலையில் பிறந்த சந்தனம், தென்கடல் முத்து, கீழைக்கடல் பவளம், கங்கை-காவிரிப் படுகை விளைச்சல்கள், ஈழத்து உணவு, காழகத்து (கடாரம்-பர்மா)ச் செல்வம் இப்படிப் பல சிறியனவும், பெரியனவுமாக மண்டிக்கிடப்பதுதான் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த துறைமுகத் தெருக்கள் - போர்க்குதிரை - கடல் வழியே இறக்குமதி செய்யப்பட்டவை, மிளகு மூட்டை - தரைவழியே வண்டிகளில் வந்தவை, மணி, பொன் - வடமலைப் பகுதியிலிருந்து வந்தவை, சந்தனம் - மேற்கிலுள்ள சேரரின் குடமலையில் பிறந்தவை, அகில் - மேற்கிலுள்ள சேரரின் குடமலையில் பிறந்தவை, முத்து - பாண்டியரின் தென்கடலில் பிறந்தது, பவளம் - சோழ நாட்டுக் குணகடலில் பிறந்தது, வாரி (விளைச்சல் வருவாய்) - கங்கைச் சமவெளியிலிருந்து வந்தவை, பயன் (விளைச்சலை விற்று வந்த பயன்) - காவிரிப் படுகை விளைச்சலை விற்றுப் பெற்றவை, உணவு (பதப்படுத்தப் பட்டவை) - ஈழத்திலிருந்து வந்தவை, கலையாக்கச் செல்வம் - காழகம் = கடாரம் = பர்மாவிலிருந்து வந்தவை, தலைமயங்கல் = ஒழுங்குபடுத்தப் படாமல் இடம்மாறிக் கிடத்தல். இப்படிப்பட்ட கிடைத்தற்கரிய பொருள்களும் விலைமதிப்பு மிக்க பெரும் பொருள்களும் புகார் நகரின் வளமாக, அங்குமிங்குமாக எங்கும் ஒன்றோடொன்று மயங்கி முறைப்படுத்தப் படாமல் கிடந்தன.

**11. வணிகர்களின் வாழ்க்கை முறை**

**நீர்நாப் பண்ணு நிலத்தின் மேலும்**

**ஏமாப்ப இனிதுதுஞ்சிக் 195**

**கிளை கலித்துப் பகைபேணாது**

**வலைஞர்முன்றில் மீன்பிறழவும்**

**விலைஞர்குரம்பை மாவீண்டவும்**

வலைஞர் முற்றத்தில் மீன், விலைஞர் பட்டிகளில் குதிரை பெருகிக் கிடக்கும் நிம்மதியான வாழ்க்கை. நீருக்கிடையே நாவாயிலும் தூங்கலாம். நிலத்தில் எங்கு வேண்டுமானாலும் தூங்கலாம். என்று விரும்பிய இடத்தில் இன்பமாக நாட்டு மக்கள் உறங்கினர். சுற்றம் செழித்தது. பகையைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. வலைவீசுவோரின் நீர் முற்றத்தில் மீன்கள் மிகுதியாகப் புரண்டன. குதிரை விற்போரின் குடிசைப் பகுதியில் நாவாயில் வந்து இறங்கிய குதிரைகள் பெருகின.

**கொலைகடிந்தும் களவுநீக்கியும்**

**அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்**

**நல்லனெடு பகடோம்பியும்**

**நான்மறையோர் புகழ்பரப்பியும்**

**பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்**

**புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்**

குடிமக்களுக்கு நிம்மதி எங்கிருந்து வந்தது? அவர்களின் வாழ்க்கைப் பாங்கிலிருந்து வந்தது. வாழ்க்கைப் பாங்கு எப்படி இருந்தது? கொலைத்தொழிலை அவர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள். களவுத்தொழிலை அவர்கள் இல்லாமல்

செய்துவிட்டார்கள். தேவர்களைப் பேணிப் பாதுகாத்தனர். தேவர்களுக்கு வேள்வி உணவை ஊட்டினர். பால்மாடுகள் மட்டுமல்லாமல் காளைமாடுகளையும் அவர்கள் பேணிவந்தனர். நான்மறையாளர்களின் புகழைப் பரப்பினர். பசித்தவர்களுக்கு உணவு படைக்கும் போது சுட்ட பலகாரங்களையும் சேர்த்துப் படைத்தனர். இப்படியெல்லாம் வாழ்வதுதான் புண்ணியம் என்று கருதினர். இப்படிப்பட்ட வாழ்க்கையில் முட்டுப்பாடு இல்லாமல் பிறருக்கு ஈரநிழல் தந்து வாழ்ந்து வந்தனர்.

**கொடுமேழி நசையுழவர்**

**நெடுநுகத்துப் பகல்போல**

**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**

**வடுவஞ்சி வாய்மொழிந்து**

**தமவும் பிறவு மொப்ப நாடிக்**

**கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைகொடாத**

**பல்பண்டம் பகர்ந்துவீசும்**

வணிகர் அறம் - உழவரின் ஏரில் இரண்டு மாடுகள் பூட்டிய நுகத்தின் நடுவில் இருக்கும் பகலாணி போல நடுவுநிலை கொண்ட நன்னெஞ்சோடு வணிகர்கள் வாணிகம் செய்தனர். தமக்குப் பழி வந்துவிடுமோ என்னும் அச்சத்தோடு சொன்னசொல் மாறாமல் வாய்மையையே பேசினர். தாம் கொடுக்கும் பொருளையும், தாம் பிறரிடமிருந்து விலையாக வாங்கும்

பொருளையும் ஒத்த நிறையுடையதாகக் கருதினர். எனவே மதிப்புக்கு அதிகமாக வாங்குவதோ, குறையாகக் கொடுப்பதோ அவர்களின் வாழ்க்கையில் இல்லை. தொல்கொண்டித் துவன்றிருக்கைப்

**12. பற்பல மொழி பேசுவோர் உறையும் பட்டினம்**

**பல்லாயமொடு பதிபழகி**
**வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கற்**
**சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு**
**மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**

வேறு வேறு மொழி பேசும் மக்கள் கலந்து உறவாடிக் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தனர் - 'தொல்கொண்டி' என்பது மூதாதையரிடமிருந்து பெற்ற செல்வம். இவ்வகையில் செல்வம் பெற்று வாழும் பல்வேறு ஆயத்தார் ஊரில் ஒன்றாகப் பழகி வாழ்ந்து வந்தனர். என்றாலும் அவர்கள் செல்வ நிலையில் வெவ்வேறு உயர்வுகளைப் பெற்றிருந்தனர். இப்படிப்பட்டவர்கள் விழாக் கொண்டாடும் ஊருக்கு 'முதுவாய் ஒக்கல்' என்று போற்றப்படும் புலவர், பாணர், கூத்தர் முதலானோர் சென்று கூடியிருப்பது போல. புகார் நகரத்தில் பல்வேறு மோழிகளைப் பேசும் மக்கள் வந்து தங்கிப் போய்க்கொண்டிருந்தனர். பன்மொழி பேசுவோரில் குற்றமற்ற சிலர் புகார் மக்களோடு கலந்து இனிமையாகத் தடையின்றிப் பழகி வாழ்ந்து வந்தனர். இதுவரையில் புகார் நகரத்தைப் பாடிய புறப்பொருள் பற்றிய புறத்திணைப் பாடல் இங்கு அகத்திணையாக மாறுகிறது.

**13. தலைவனது அவல நிலை**

**முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்**
**வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய**
**வாரேன் வாழிய நெஞ்சே கூருகிர்க்**

நெஞ்சே! இப்படிப்பட்ட காவிரிப்பூம்பட்டினமே எனக்குக் கிடைப்பதாயினும் என் காதலியை விட்டுவிட்டு வரமாட்டேன் என்கிறான், தலைவன் . இச்செய்திதான் பாட்டின் பயனிலை - பொருளும் அருளும், கலையும் காமமும், வளமும் மகிழ்வும் மலர்ந்து முட்டுப்பாடின்றி மண்டிக் கிடக்கும் புகார்ப் பட்டினமே கொடையாகவோ உழைப்பின் வழியாகவோ பெறுவதாக இருந்தாலும், நெஞ்சே! நான் சொல்வதைக் கேள்! நீண்ட கூந்தலையுடைய இந்தப் பெண்ணாகிய என்னவளைத் தனியே விட்டுவிட்டுப் பொருள் தேட உன்னுடன் வரமாட்டேன். பொருளையும் இவளையும் நினைக்கும் நெஞ்சே! நீ வாழி!

**14. திருமாவளவன் அரச உரிமை பெற்ற வகை**

**கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்கும்**
**பிறர் பிணியகத் திருந்து பீடுகாழ் முற்றி**
**அருங்கரை கவியக் குத்திக் குழிகொன்று**
**பெருங்கை யானை பிடிபுக் காங்கு**
**நுண்ணிதின் உணர நாடி நண்ணார்**
**செறிவுடைத் திண்காப் பேறிவாள் கழித்து**

**உருகெழு தாயம் ஊழினெய்திப்**

கரிகாலன் அரசனானது - வரிப்புலிக்குட்டி கூட்டில் வளர்ந்தது போல் திருமாவளவனின் இளமைக் காலம் அமைந்திருந்தது. குழியில் விழுந்த ஆண்யானை குழியின் கங்குக்கரையைச் சரித்து இடித்துக்கொண்டு மேடேறித் தன் பெண் யானையோடு சேர்ந்தது போல் திருமாவளவன் தன் ஆட்சியைப் பெற்றான். நுட்பமாக எண்ணிப் பார்த்துப் போரிடத் துணிந்தான். பகைவர் செறிந்திருக்கும் கோட்டையை முற்றுகையிட்டு அவர்களுடன் வாளேந்திப் போரிட்டுத் தனக்கு உரிமையாகிய தாய ஆட்சியைப் பெற்றான். இது அவனுக்குக் கிடைத்த முறையான ஊழ்வெற்றி.

**15. பகைவர்மேல் போருக்கு எழுதல்**

**பெற்றவை மகிழ்தல் செய்யான் செற்றோர்**

**கடியரண் தொலைத்த கதவுகொல் மருப்பின்**

**முடியுடைக் கருந்தலை புரட்டு முன்றாள்**

**உகிருடை யடிய ஓங்கெழில் யானை**

**வடிமணிப் புரவியொடு வயவர் வீழப்**

கரிகாலனுக்கு அரசு போர் வெற்றியால் கிடைத்தது - அரசுத்தாயம் பெற்ற மகிழ்வோடு திருமாவளவன் அமையவில்லை. அவனை அழிக்க முற்பட்டோரின் அரண்களைத் தொலைத்தான். வளவனின் யானை அவனது பகைவரின் முடிபுனைந்த தலைகளைத் தன் முன்னங்கால் நகங்களால் புரட்டியது. பகைவரின் யானை, புரவி, வயவர் அனைவரும் வீழ்ந்தனர். பெயர் விளக்கம் : கரியின் காலால்

வளம் பெற்ற வளவன். அதனால் கரிகாலன் எனப்பட்டான். மா = கரிமா = யானை, திருவை மாவால் பெற்ற வளவன் = திருமாவளவன். சான்று இங்குக் கூறப்பட்டுள்ள யானைப்போர்.

**பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்பத்**

**தூறிவர் துறுகற் போலப் போர்வேட்டு**

**வேறுபல் பூளையொ டுழிஞை சூடிப் 235**

உழிஞைப் பூவைச் சூடி நாடு விரிவாக்கப் போரில் ஈடுபட்டான் - திருமாவளவன் உழிஞைப் பூச் சூடிப் போருக்கெழுந்தான். உழிஞைப் பூவுடன் பல்வேறு பூளைப் பூக்களையும் சேர்த்துச் சூடியிருந்தான். இவன் போருக்கெழுந்ததும் 'நல்ல இரை பெறலாம்' என்று எண்ணி வானத்தில் பருந்துகள் உலா வந்தன. யானைமீது சென்ற இவன் பெரிய பாறாங்கல் போலவும், பருந்துகள் பறந்தது பாறாங்கல்லில் படரும் பல்வேறு கொடிகள் போலவும் இருந்தன.

**பேய்க்கண் அன்ன பிளிறுகடி முரசம்**

**மாக்கண் அகலறை அதிர்வன முழங்க**

**முனைகெடச் சென்று முன்சம முருக்கித்**

**தலைதவச் சென்று தண்பணை எடுப்பி**

போர்முழக்கம் வெற்றிக்குப் பின்னர் தண்ணோசை முழக்கமாக மாறியது - இவனது காவல் முரசம் பேயின் கண்போல் இருந்தது. அதன் அகன்று விரிந்த பெரிய வாயில் எழுந்த முழக்கம் மலைப்பாறைகளில் எதிரொலித்தது. கரிகாலன்

பகைவரின் முனைப்பைக் கெடுத்து முன்னேறினான். முன்னின்ற போராளிகளைத் திரியை முறுக்குவது போலச் சுழற்றி முறுக்கினான். வெற்றிக்குப் பின் தன் வெற்றிமுரசை மக்களுக்குக் குளுமை தரும் ஓசையுடன் [தண்பனை] முழக்கினான்

**16. பகைவரது நாட்டைப் பாழ்படுத்துதல்**

**வெண்பூக் கரும்பொடு செந்நெல் நீட**
**மாவிதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கிக்**
**கராஅங் கலித்த கண்ணகன் பொய்கைக்**
**கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடிச்**
**செறுவும் வாவிய மயங்கி நீரற்று**
**அறுகோட் டிரலையொடு மான்பிணை உகளவும்**

பகைவர் நாட்டுப் பாழ்நிலை – வளவயல் மாற்றம். கரிகாலன் வெற்றிக்கு முன் இவன் வென்று அழிப்பதற்கு முன் பகைவரின் நாடு வளமுடன் செழித்திருந்தது. வயல்களில் கரும்பும் செந்நெல்லும், வாவிகளில் குவளையும் நெய்தலும், பொய்கையில் முதலைகள் என்று அதன் செழுமை இருந்தது. கரிகாலன் வெற்றிக்குப் பின் இவனது வெற்றிக்குப் பின் வயல்களும் வாவிகளும் நீரற்று நிலம் மயக்கமுற்று (திணைமயக்கம் எய்தி) வறண்ட நிலத்தில் பூக்கும் புதவம் பூக்களும் செருந்திப் பூக்களும் பூக்கும் நிலையைப் பெற்றன. மக்கள் பயிர் செய்த நிலைமை மாறிக் கலைமான்களும் காட்டுமான்களும் விளையாடும் காடாக மாறியது.

**கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி**

**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**

**மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ**

**வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியிற்**

**பருநிலை நெடுந்தூண் ஒல்கத் தீண்டிப**

**பெருநல் யானையொடு பிடிபுணர்ந் துறையவும்**

பகைவர் நாட்டுப் பாழ்நிலை, மக்கள் மன்றத்தில் மாற்றம், கரிகாலன் வெற்றிக்கு முன் - இவனது வெற்றிக்கு முன் பகைவர் நாட்டில் அந்தி நேரம் வந்ததும் கொண்டி மகளிர் ஆற்றில் குளித்துவிட்டு வந்து ஊர்மன்றத்தை மெழுகிப் பூ வைத்து அங்கிருந்த தூணில் விளக்கேற்றினர். அவர்களும் அங்கு வரும் புதியவர்களும் மன்றிலிருந்த கந்திற் பாவையைத் தொழுதனர். கரிகாலன் வெற்றிக்குப் பின்- வழிபட்ட அந்தத் தூண்கள் இவனது வெற்றிக்குப் பின் வெறுங் கல்லுத் தூணாக மாறியது. களிறும் பிடியும் புணர்ச்சிக்காலத்தில் அதில் உரசிக்கொள்ளும்படியும், உறைவிடங்களாகக் கொள்ளும்படியும் ஆயிற்று.

**அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவின்**

**முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த**

**திரிபுரி நரம்பின் தீந்தொடை யோர்க்கும்**

**பெருவிழாக் கழிந்த பேஎமுதிர் மன்றத்துக்**

**சிறுபூ நெருஞ்சியோ டறுகை பம்பி**

**அழல்வா யோரி அஞ்சுவரக் கதிர்ப்பவும்**

**அழுகுரற் கூகையோ டாண்டலை விளிப்பவும்**

**கணங்கொள் கூளியொடு கதுப்பிகுத் தசைஇப்**

**பிணந்தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவும**

பகைவர் நாட்டுப் பாழ்நிலை – தெருநிலை மாற்றம் கரிகாலன் வெற்றிக்கு முன் - அப்போது தெருவில் எப்போதும் விழாக்கொண்டாட்டம். தெரு வாசலில் பூக்களைத் தூவி மக்கள் முதுவாய்க் கோடியரை வரவேற்பர். முதுவாய்க் கோடியரின் யாழிசையும் முழவொலியும் தெருவெல்லாம் கேட்டுக்கொண்டே இருக்கும். அவற்றை மக்கள் கேட்டு மகிழ்வர். கரிகாலன் வெற்றிக்குப் பின் - இப்போது விழாத்தெருக்கள் பேய்மன்றங்களாக மாறிவிட்டன. பூத் தூவிய இடங்களில் நெருஞ்சிமுள் பூத்துள்ளது. அருகம்புல் பம்பிக் கிடக்கிறது. யாழொலி கேட்ட இடத்தில் குள்ளநரி ஊளையிடும் ஓசை கேட்கிறது. அழுகையொலி, கூகையின் குழறல், ஆண்டலையின் அழைப்பு, பிணம் தின்ற கூளிகள் அசைபோடும் அதவல், பிணம் தின்னும் பேய்மகளின் பித்தாட்டம் போன்றவை நிகழ்ந்தன.

**கொடுங்கால் மாடத்து நெடுங்கடை துவன்றி**

**விருந்துண் டானாப் பெருஞ்சோற் றட்டில்**

**ஒண்சுவர் நல்லில் உயர்திணை யிருந்து**

**பைங்கிளி மிழற்றும் பாலார் செழுநகர்த்**

**தொடுதோ லடியரி துடிபடக் குழீஇக் 265**

**கொடுவி லெயினர் கொள்ளை யுண்ட**

**உணவில் வறுங்கூட் டுள்ளகத் திருந்து**

**வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்**

**அருங்கடி வரைப்பின் ஊர்கவி னழியப்**

பகைவர் நாட்டுப் பாழ்நிலை, வாழ்விடங்களில் மாற்றம், கரிகாலன் வெற்றிக்கு முன் - அன்று விருந்தூட்டிய வீடுகள், கிளி மிழற்றும் காப்பிடங்கள், வளைவுக்கால் அமைக்கப்பட்ட மாடி வீடுகள், (arch entrance) அதில் சோற்றுச் சமையல் மணக்கும் அட்டில் சுவர். விருந்தூட்டிய பின் மிஞ்சிக் கிடக்கும் சோற்றை வளைவு வாயிலில் வைத்துக்கொண்டு வழங்கக் காத்திருந்த நல்ல இல்லங்களின் உயர்திணைப் பண்பு. அவ்விடங்களில் வளர்ப்புப் பச்சைக் கிளிகள் விருந்தினரை அழைக்கும் மழலைமொழி. மழலை மொழிக்குக் கைம்மாறாகப் பால் ஆர்த்தும் பாவையர் நிலை. கரிகாலன் வெற்றிக்குப் பின் - அந்த இடங்களில் பாலைநிலத்து எயினர்களின் நடமாட்டம். செருப்பை வெளியில் கழற்றிவிட்டு அன்று நுழைந்த இல்லங்களில் இன்று அவர்கள் செருப்புக் காலோடு நடமாடுகின்றனர். அன்று கிளி மழலை கேட்ட இடங்களில் இன்று கூகையின் குழறல் ஒலி பகலிலேயே கேட்கிறது. உடுக்கடிக்கும் துடிப்பறை கேட்கிறது. அன்று விருந்தூட்டிய இடங்களில் இன்று கொள்ளையடித்த உணவைப் பங்கிட்டுக் கொள்கிறார்கள். அன்று காவலரின் காப்பகம், இன்று மேவலரின் (வேண்டாதவர்களின்) விளையாட்டிடம்.

### 17. திருமாவளவனது ஆற்றல்

மலையகழ்க் குவனே கடல்தூர்க் குவனே
வான்வீழ்க் குவனே வளிமாற் றுவனெனத்

பகைவரின் அச்சம் - இப்படித் திருமாவளவன் பகைவர் நாட்டைப் பாழாக்கியும் நிறைவு கொள்ளாமல் மேலும் போருக்கெழத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். 'இவன் மலையை வேரோடு தோண்டி எறிந்து விடுவான். கடலைத் தூர்த்து விடுவான். வானத்தை மண்ணில் விழச் செய்து விடுவான். காற்றின் திசையை மாற்றி விடுவான்' – என்றெல்லாம் எண்ணிக்கொண்டு பகையரசர்கள் கலங்கினர்.

**தன்முன்னிய துறைபோகலிற்**
**பல்லொளியர் பணிபொடுங்கத்**
**தொல்லரு வாளர் தொழில் கேட்ப**
**வடவர் வாடக் குடவர் கூம்பத்**
**தென்னவன் திறல்கெடச் சீறி மன்னர்**
**மன்னெயில் கதுவும் மதனுடை நோன்றாள்**
**மாத்தனை மறமொய்ம்பிற்**
**செங்கண்ணாற் செயிர்த்துநோக்கிப**
**புன்பொதுவர் வழிபொன்ற**
**இருங்கோவேள் மருங்குசாயக்**

பகைவர் தோல்வி - ஆற்றில் விரும்பிய துறையில் குளிப்பது போலத் திருமாவளவன் தான் விரும்பிய நாட்டின்மீது போர் தொடுத்தான். அதனால் அவனிடம் பகை கொள்ளாத அரசர்களும் அவன்பால் சாய்ந்தனர். ஒளியர் - ஒளியர்குடி அரசர் பலர் பணிந்து ஒடுங்கினர். ஒளியர் பல்வேறு இடங்களில் வாழ்ந்தனர். 'மலங்கே' என்று தாலமி குறிப்பிடும் பாசூர் நாகர் ஒளியர் எனப்பட்டனர் என்று கனகசபை பிள்ளை 'the Tamils 18 hundred years ago" என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அருவாளர் - அருவாளர் குடி அரசர்கள் திருமாவளவன் சொன்னதெல்லாம் கேட்டு நடந்தனர். மாவிலங்கை நகரைத் தலைநகராகக் கொண்டும் எயிற்பட்டினத்தைத் துறைமுகமாகக் கொண்டும் குடியினர் இவர்கள். கனகசபை பிள்ளை "The Tamils 18 hundred years ago" என்னும் நூலில் அருவாளர் பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார். வடவர் வாடினர் - குடவர் சோர்ந்து குறுகியிருந்தனர். குடவர் என்போர் குடநாட்டுச் சேரர். தென்னவன் திறமை செல்லுபடி யாகவில்லை. தென்னவன் என்பவன் பாண்டியன். இருங்கோவேள் பாண்டியர் சார்பு நிலையை விட்டுத் திருமாவளவனின் சார்பை உண்டாக்கிக் கொண்டான். இவன் பாரி மகளிரை மணந்து கொள்ள மறுத்தவன். - புறம் 201 202. மன்னர்களின் கோட்டைகளை இடிக்கும் வலிமை கொண்ட பெரும்படை இவனிடம் இருந்தது. அதன் துணையுடன் திருமாவளவன் தன் சிவந்த கண்ணின் சினப்-பார்வையை வீசினான். பொதுவர் - அதனைக் கண்ட பொதுவர், கால்வழியே இல்லாமல் அழிந்துவிட்டனர். பொதுவர் என்போர் பொதியில் என்றும், பொதுமீக்கூற்றம் என்றும் (பொதியில், பொதுமீக் கூற்றம் – ஆய் நாடு – புறம் 135) போற்றப்படும் பாண்டிய நாட்டின் தென்பகுதியில் இருந்த பொதியமலைப் பகுதியில்

ஆண்டுகொண்டிருந்த ஆய்குடி மக்கள். ஆ < ஆய் < ஆயர் = பொதுவர் (காண்க முல்லைக் கலி)

**18. சோழ நாட்டையும் உறையூரையும் சிறப்புறச் செய்தல்**

**காடுகொன்று நாடாக்கிக்**
**குளந்தொட்டு வளம்பெருக்கிக்**
**பிறங்குநிலை மாடத் துறந்தை போக்கிக்**
**கோயிலொடு குடிநிறீஇ**
**வாயிலொடு புழையமைத்து**
**ஞாயிறொறும் புதைநிறீஇ**
**பொருவேமெனப் பெயர்கொடுத்து**

வளவன் தன் நாட்டைத் திருத்தியது - காடுகளை அழித்து விளைநிலங்களாக மாற்றினான். மழைநீர் தேங்கும் குளங்கள் அமைத்து நீர் வளத்தைப் பெருக்கினான். உறையூரில் புதிய கோட்டையைக் கட்டினான். அதில் அலுவலரைக் குடியேற்றினான். வாயில், பதுங்கும் புழையறை, மதில் மேலிருந்து அம்பு எய்யும் ஞாயில், அதன் அருகில் படைக்கலப் புதையல் வைக்கும் புதையிடம் போன்ற அமைப்புகளைக் கோட்டையில் நிறுவினான். ‘போரிடுவேன்’ என்று தன்னைப் பறைசாற்றிக் கொண்டான்.

**ஒருவேனெப் புறக்கொடாத**
**திருநிலைஇய பெருமன் னெயில்**

**மின்னொளியெறிப்பத் தம்மொளி மழுங்கி**

**விசிபிணி முழவின் வேந்தர் சூடிய**

**பசுமணி பொருத பரேரெறுழ்க் கழற்காற்**

**பொற்றொடிப் புதல்வர் ஓடி யாடவும் 295**

**முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்**

**செஞ்சாந்து சிதைந்த மார்பின் ஒண்பூண்**

திருமாவளவன் தான் வென்ற பகைவரின் முடிப் பொன்னால் கழல் செய்து தன் பிள்ளைகளுக்கு அணிவித்து, அவர்கள் ஓடியாடுவதைக் கண்டுகளித்தான் - வளவன் போருக்கு எழுந்தபோது வேறு எந்த மன்னரையும் கூட்டு சேர்த்துக் கொள்ளவில்லை. ஒருவனாகவே போரிட்டு வெற்றி கண்டான். செல்வ வளம் மிக்க இவனது கோட்டை புகழ் மின்னலை வீசியது. அதனால் பிற மன்னர்களின் புகழ் மங்கிப் போயிற்று. முரசு முழங்கும் பெருமை வாய்ந்த பகைவேந்தர் தம் முடியில் அணிந்திருந்த மணிகளைப் பறித்து வளவனின் புதல்வர் காலில் அணிந்திருந்த கழலுக்குள் ஒலிக்கும் மணியாக்கி மகிழ்ந்தனர். அவனது புதல்வர்கள் அந்தக் கழலொலி கேட்க ஓடியாடி விளையாடினார்கள். ‘முற்றிழை’ என்பது தாலி. திருமாவளவன் தன் முற்றிழை மனைவியரின் மார்பில் மகிழ்ந்து திளைத்தான். அப்போது மனைவியரின் மார்பிலிருந்த செஞ்சாந்து சிதைந்து இவன் மார்புச் சந்தனத்தைச் சிதைத்தது.

**19. தலைவன் தலைவியைப் பிரிதற்கு அருமை கூறல்**

**அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்**

**திருமா வளவன் தெவ்வர்க் கோக்கிய**

**வேலினும் வெய்ய கானமவன் 300**

**கோலினுந் தண்ணிய தடமென் தோள.**

திருமாவளவனின் வேலும் கோலும் - திருமாவளவன் சிங்கம்போல் பகைவர்களைத் தாக்கி வெல்லும் திறம் கொண்டவன். திருமாவளவன் பகைவர்களைச் சாய்க்க ஓங்கிய வேல் போல் பொருளுக்காக நீ பிரிந்து செல்ல விரும்பிய கானம் சுட்டெரிக்கும் வெம்மை உடையது. திருமாவளவன் தன் குடிமக்களுக்கு வழங்கும் குளுமைத்தண்மை போல் என்னவளுடையவளின் விரிந்த தோள் குளுகுளுக்கும் தண்மை உடையது. (கோ <= கோல் <= கோன் <= கோமான் = தலைவன்) முடிவ - ௗ தண்ணிய தோளைப் பிரிந்து ‘வயங்கிழை ஒழிய வாரேன் நெஞ்சே’ (அடி 200) என்கிறான் கிழவன் (கிழவன் = கிழத்தி ஒருத்திக்கு உரியவன்).

**வினாக்கள்**

1. பட்டினப்பாலை நூலின் சிறப்பினை விளக்குக.

2. பட்டினப்பாலையில் வரும் காவிரியின் சிறப்பைக் கூறுக.

3. பட்டினப்பாலை கூறும் சோழ நாட்டின் சிறப்பை எடுத்துரைக்க.

4. பட்டினப்பாலையில் வரும் விளையாட்டுக்களைக் குறிப்பிடுக.

5. பட்டினப்பாலையில் வரும் வணிகப் பொருட்கள் எவை?

6. வணிகர்களின் வாழ்க்கை முறையை விளக்குக.

7. திருமாவளவனது அரச உரிமை பெற்ற வகையை எடுத்துரைக்க.

8. மகளிர் வெறியாடி விழாக்கொண்டாடும் நிகழ்வைக் கூறுக.


**சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,